விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

### 'பிச்சைவேண்டாம்!'

[யாழ்ப்பாணம்]

'பிச்சைவேண்டாம், நாயைப்பிடி!' என்று கூறுகிறார்களாம் யாழ்ப்பாணத்தில் பொறுப்பான பதவியிலுள்ள பலர்.

களஞ்சியங்களில் கொள்ளைகள் இடம் பெறும் பட்சத்தில், அந்தந்தப் பொறுப்பதிகாரிகளே பொறுப்பாளிகள் என்ற புதிய அறிவிப்பு இவர்களை கதிகலங்கவைத்துள்ளது.

களஞ்சியப் பொறுப்பதிகாரிகளின் அனுசரணையின்றி இவ்விதமான கொள்ளைகள் நடக்கமாட்டாதென்று பொதுமக்கள் நம்புவதாக பந்தோபஸ்த்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொல்கிறார்.

மலர்: 26 புரட்டாதி 14 முஹறம் 4 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (30-9-84) இதழ் 228

# "இஸ்ரேல் பயிற்சியளிப்பதை இந்தியா ஆதரிக்கமாட்டாது!"

## இலங்கைப் பிரச்னை குறித்து இந்திய வெளியுறவு இணை அமைச்சர்கருத்து

(புதுடில்லி)

இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சி அளிக்க இஸ்ரேலியர் மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் இந்தியா ஆதரிக்கமாட்டாது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஏ. ஏ. ரஹீம் நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் இலங்கைத் தமிழர் பிரச்னைகுறித்து அமைச்சர் பேசினார்.

இலங்கை இராணுவத்துக்கு தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இஸ்ரேலிய 'மொசாட்' பிரிவின் நடவடிக்கைகள் குறித்து நிருபர் ஒருவர் கேட்டபோதே அமைச்சர், இந்தியா இந்த ஏற்பாட்டை ஆதரிக்காதெனச் சொன்னார்.

''படை பலத்தால், இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க நினைப்பது தவறு அரசியல் தீர்வின்மூலமேஇப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும்'' என்று அமைச்சர் ரஹீம் வற்புறுத்தினார்

''நம்மால் முடிந்த உதவிகள் அனைத்தும் நாம் செய்வோம். இதனால் உள்நாட்டுப் பிரச்னையில் தலையிடுவதாக எண்ணவேண்டியதில்லை' என்று கூறிய அவர் 'இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையில் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை!'' என்றும் அமைச்சர் சொன்னார்.

இலங்கையுடன் நட்புறவாக இருப்பதற்கே இந்தியாவிரும்புகிறது, அதே நேரத்தில் இலங்கை தன்பிரச்னையை தீர்க்கவேண்டுமென்பதையும் விரும்புகிறதுஎன்று கூறினார்.

தார்வாரில் அமைச்சர் நிருபர்களிடம் இவ்விஷயங்களைக் கூறினார்.

## துப்பாக்கி முனையில் நடந்த ஜீப்கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்த் தொகுதி சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்குச் சொந்தமான 'மிஸ்சுபிஸி' ஜீப் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 1-30 மணியளவில் வெலிங்டன் தியேட்டர் சந்தியில் வைத்தே இந்த ஜீப் கடத்திச் செல்லப்பட்டது.

கடத்தப்பட்ட ஜீப் வண்டி யாழ் ஆஸ்பத்திரியில் சேவையாற்றுவதற்கெனத் தற்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகவும், யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர், தாதி, சிற்றூழியர் ஆகியோர் சங்கானை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத மூன்று நபர்கள் துப்பாக்கி முனையில் வெலிங்டன் தியேட்டர் சந்தியில் ஜீப்வண்டியைத் தடுத்து நிறுத்தி உத்தியோகத்தர்களை அவ்விடத்தில் இறக்கிவிட்டுக் கடத்திச் சென்றதாக யாழ். பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது

(மா)

## "லங்கா ஸ்ரீமணி"யில் ஈழப்பிரசுரப் பொதிகள்!

[கொழும்பு]

''லங்கா ஸ்ரீமணி'' என்ற இலங்கையின் சரக்குக் கப்பலில் 'தமிழ் ஈழப்' பிரசாரத் துண்டுப் பிரசுரங்கள் அடங்கிய இரு பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதை ரகசியப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்!

இவ்விரு பொதிகளும் கத்தோலிக்க மதகுரு ஒருவருக்கே பிரத்தியேகமாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவற்றைச் சுங்க அதிகாரிகளும், தொடர்ந்து சி. ஐ. டி. பொலிஸாரும் சோதனையிட்டபோதே அவற்றுள் தமிழீழப் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களும், புத்தகங்களும் இருக்கக் காணப்பட்டன.

இப் பொதிகள் அவை அனுப்பப்பட்ட கத்தோலிக்க மதகுருவிடம் பலத்த சோதனைகளின் பின்னர் கையளிக்கப்பட்டன. அம் மதகுருவும் இது குறித்து தீவிரமாக விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆயினும் இவ்விவகாரம் தொடர்பாக புலன் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

(கி)

## யாழ். மாவட்ட விஞ்ஞான களஞ்சியத்திலிருந்து இரசாயனப் பொருட்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்துக்குரிய விஞ்ஞானகூடக் களஞ்சிய சாலையிலிருந்து இரசாயனப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளையடிக்கப்பட்ட விஞ்ஞானகூடம் யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கிவருவது தெரிந்ததே.

சம்பவதினம் இரவு பத்து மணியளவில் கல்லூரிக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் காவலாளியைப் பயமுறுத்திவிட்டு, விஞ்ஞான கூடத்தை உடைத்து அங்கிருந்த இரசாயனப் பொருட்களைக் கொள்ளையடித்துச்சென்றதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட விஞ்ஞானகூடத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள்பற்றியும் யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளே மதிப்பீடுசெய்யவேண்டுமென்றும், இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களின் விபரம் தெரிவிக்கப்படவில்லையென்றும் தெரியவந்துள்ளது.

(மா)

பாதுகாப்பு அமைச்சு அதிகாரி கூறுகிறார்

## இலங்கைப்படைக்கு இந்தியாவில்பயிற்சி

[கொழும்பு]

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கசப்பான கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், இலங்கைப் பாதுகாப்புப் படை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறதென பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்

(16ம் பக்கம் பார்க்க)

## இன்று நடக்கும் சர்வகட்சி மகாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இல்லை!

[இ. கந்தசாமி]

சர்வகட்சி மாநாட்டின் முழுநிறைவான இன்றைய கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்கட்சி கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளது

தமிழர் விடுதலைக்கூட்டணி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமென்றும், முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையாக இது இருக்குமென்றும் தெரியவருகிறது.

புதிய கட்சியாக மலர்ந்த ரி. பி. இலங்கரத்தினவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்கு

(16-ம் பக்கம பார்க்க)

## மாலைதீவு ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு

[கொழும்பு]

மாலைதீவு ஜனாதிபதி ஜனாப் அப்துல் கையூம் உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை இலங்கை வந்துசேர்ந்தார்.

[16ம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறையில் திடீர் பதற்றம்!

[புலோலி]

பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் திடீரென ஏற்பட்ட பதற்ற நிலைமையால் நகர் அல்லோலகல்லோலத்துக்கிலக்கானது.

கடைகள் எல்லாம் இழுத்து மூடப்பட்டன, வாகனங்கள் வீதிகளிலிருந்து மறைந்தன, டியூட்டறிகளுக்குச் சென்ற மாணவமாணவியர் பெரும் அவதிக்குள்ளாகினர்.

பருத்தித்துறை பகுதிக்கு ராணுவத்தினர் கவசவாகனங்களிலும் டிரக்குகளிலும் வந்து வெற்று வெடிகளைத் தீர்த்ததின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது

இளைஞர்கள் சிலரை ராணுவத்தினர் அழைத்துச்சென்றதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை புலோலியில் வீடொன்றுக்குச் சென்ற ஆயுதப்படையினர் அங்கு சிலரைத்தேடியதாகவும், பின்னர் ஒரு றேடியோ யந்திரத்தையும் தட்டச்சுப்பெட்டியையும் எடுத்துச்சென்றதாகவும் அறியப்படுகின்றது. இது தொடர்பாக எவரும் பிடிபட்டதாகத் தெரியவில்லை.

# அரி விளம்பரம்

## தேவை

ஆர்.வி.ஜி. பீடி தயாரித்துத் தரக்கூடிய ஆண், பெண் இரு பாலரும் விரும்பத்தக்கது. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும் நிர்வாகம், ஆர். வி ஜி பீடி, ஸ்தாபனம், 275, பீச்ரேட், யாழ்ப்பாணம். 1941

தொழிற்சாலையில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்று பணிபுரிவதற்கு 14 - 18 வயதுக்குட்பட்டவர்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் ஊதியம் வழங்கப்படும். தகுந்த நற்சான்று விபரத்துடன் விண்ணப்பிக்கவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1986

நல்ல அனுபவமுள்ள, நற்பழக்கமுள்ள பாண் தயாரிப்பாளர்கள், உதவியாளர்கள், விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. இருப்பிடவசதி சாப்பாட்டு வசதி, திறமைகளுக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும். K. நாதன், முருகன் பேக்கரி. M P.C.S முன்பாக நீர்வேலி. 1989

யாழ்ப்பாணத்தில் பிரபலமான கைத்தொழில் நிறுவனமொன்றிற்கு பள்ளிக்கூடத் தேவைக்கான பாக்குகள் (Fibre and Cloth Bags), என்வலப் (Envelops) கொப்பி என்பன இயந்திரஉதவியுடன் உற்பத்தி செய்வதில் அனுபவமும், திறமையும் வாய்ந்த இயக்குநர் (Operator) தேவை. திறமைக்கேற்பசம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் 10-10-84க்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும். விளம்பர இல: 1996 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம் 1996

அனுபவமுள்ள நற்சாட்சிப் பத்திரமுள்ள ஓட்டோறிக்சோ டிரைவர் தனிப்பட்ட வாகனம் ஓட்டுவதற்கு உடன் தேவை. விபரங்களுடன் நேரில் வரவும். கந்தையா, அன்பகம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் 1953

யாழ். நவீனசந்தையில் உங்கள் கடிதங்கள், படிவங்கள் ஓய்வுபெற்ற அரச நிர்வாச உத்தியோகத்தரினால் தயாரித்து "டைப்" செய்து கொடுக்கப்படும். "கணபால ஸ்ரோர்ஸ்", 24, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொலைபேசி' 23806. (1874)

PX 150 மொடல் Vespa ஸ்கூட்டர் நல்ல நிலையில் தேவை தொடர்பு: கிறன்ட் ஹொட்டல், பீச் ரேட், யாழ்ப்பாணம். 2026

இந்து வேளாள பெற்றோர் செவ்வாய் குற்றமுள்ள அழகும் பண்பும் நிறைந்த சங்கீதத் தேர்ச்சிபெற்ற 24 வயது நிரம்பிய ஒரே மகளுக்கு சீதனம் எதிர்பாராத தகுதியுள்ள மணமகனைத் தேடுகின்றனர். முதற்கடிதத்தில் சாதகக்குறிப்புடன் முழு விபரங்களையும் அறியத்தரவும். விளம்பர இல: 2027 C/o ஈழநாடு 202

## குத்தகைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் 40 பரப்பு தென்னந் தோட்டக்காணி 5 வருடம் அல்லது 10 வருடக் குத்தகைக்குண்டு வியபாரிகளுக்கும், களஞ்சிய சேமிப்புக்கும், பண்ணை கும் உகந்தது. தொடர்பு: விளம்பர இல: 1915, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1915

## விற்பனைக்கு

16" National T.V. (Colour) மேலும் விபரங்களுக்கு 3/9, பிரப்பன்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் 1991

கோண்டாவில் மேற்கு, K. K. S. ரேட், சந்திக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணியும் கட்டிடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 116, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம். 1932

பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் மெயின் ரேட்டில் இருந்து 50 யார் தூரத்தில் ஒருபரப்பு ஆறுகுளி உடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மினி ரேட் சென்ரர், No:3, J.M.C. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2006

உயர்ந்த இன அல்சேசன் இரண்டுமாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. எஸ். இலங்கைநாதன், 25/3, ஒடை லேன், வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம். 2012

சுன்னாகம் தெற்கில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்பு காணி ஒழுங்கைக்கரையில்விற்பனைக்குண்டு. பரப்பு 65000 ரூபா. கா. தம்பிராசா, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். 2015

சைனீஸ் பிளேரன், 36" கட்டர், தமிழ் ஆங்கில எழுத்துக்களுடன் இயங்கிவரும் அச்சகம் உடன் விற்பனைக்குண்டு. தமயந்தி அச்சகம். மானிப்பாய். 2018

2 சிறீ A 40 பறிஞ கார் விற்பனைக்குண்டு. ச. குலசிங்கம் மாநகரசபை வேலைப்பகுதியில்தொடர்புகொள்ளவும். ச. குலசிங்கம், மாநகரசபைக்கந்தோர், யாழ்ப்பாணம், 2019

அலுமினியம் எவர்சில்வர் செய்யும் மெசின் (Lathe) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: க. கண்ணன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1944

புங்குடுதீவு பெருங்காடு மாரிஅம்மன் கோவில் ரேட்டில் ஆலம்புலத்தில் 12½ பரப்புக் காணி (தென்னை பனைகளுடன்) 2 அறை வீடும் உடன் விற்பனைக்குண்டு, தொடர்பு: க. கண்ணன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1943

7 ஸ்ரீ தொடர்பிலக்க Ford Cortina கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கை 19ம் இலக்க இல்லத்தில் பார்வையிட்டு உங்கள் விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். சிலிங்கோ லிமிட்டெட், 191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2011

சந்நிதிரேட் அச்சுவேலியில் 1½ பரப்புக்காணி (தென்னை மரங்களுடன்) வீடுகட்டுவதற்குகந்தது. விற்பனைக்குண்டு தொடர்பு: என்.ரவீந்திரநேரு. "திநேஷா", சந்நிதி ரேட், அச்சுவேலி. 2025

## வகுப்புக்கள்

6-ம்தர புகுமுகப் பரீட்சைக்கான இலவச வகுப்பு 1-10-1984ல் இருந்து பி ப. 2-00 3-00 மணிவரை நடைபெறும். Modern Education Centre, Karaveddy 1981

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் மத்திய அரசினர் மனையில் பல வருடங்களாக வைத்தியப்பணியில் பொறுப்பதிகாரியாகக் கடமை ஆற்றி ஓய்வுபெறும் டாக்டர் கார்த்திகேசு சயலொளிபவனுக்கு அப்பகுதி மக்கள் சேவைநலம் பாராட்டு விழா இன்று யாழ் சென்பற்றிக்ஸ் வீதியில் உள்ள சென் ரேக் சனசமூக நிலையத்தில் நடாத்தவுள்ளனர்.

## WANTED

Wanted Sales Representatives for a Marketing Group of Companies in Jaffna. Security Deposits required. Those with experience to apply with referees and copies of certificates on or before 10-10-1984, To The Managing Director, General MarketingOrganization Limited, 32, Bankshall Street, Jaffna. 1994

## பயிற்சிகள்

ரெலிவிசன், வீடியோடெக்றி பியறிங், Computer Programming எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், Hotel management, French, German பயிற்சிகள் இரண்டு மாத செய்முறைப் பயிற்சி உட்பட நடைபெறுகின்றன. ஆரம்பம்: 05-10-84. Jaffna Technical Institute ஸ்ரான்லிவீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம் 1974

## வாடகைக்கு

பெரியகடை அண்மையில், நாவலர்வீதி கஸ்தூரியார்வீதிச் சந்தியில் (அப்பையா கடைச் சந்தி) ஒரு கடை விசாலமான மேல் மாடியோடு வாடகைக்குண்டு. அதன் பக்கத்தே உள்ள வீடும் வாடகைக்கு உண்டு. விபரம்: 142 ஆஸ்பத்திரி வீதி போன்-22335. (2016)

இரண்டொரு பிள்ளைகளுடன் பாதுகாப்பாய் வசிக்கக்கூடிய, சகல நவீனசவதிகளுடன் ஓர் பகுதி வீடு. 142, ஆஸ்பத்திரி வீதி, போன்-22335. (2017)

## சோதிடம்

சோதிடம், கைரேகை பிறநாட்டுப்பிரயாணம், தொழில் வாய்ப்பு, உயர்கல்வி, காதல், கல்யாணம், நோய்கள், சிறந்த திருமணப்பொருத்தம், இவற்றிற்கான தீர்க்கமான ஆலோசனை பெறவும், தொலைந்த சாதகங்கள் எழுதவும். அஞ்சல் மூலமும் தொடர்புகொள்ளலாம். இராசேந்திரன் "திருவுளம்" அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் ரேட், கொக்குவில். 2003

## குத்தகைக்கு

காங்கேசன்துறை ரேட்டில் அமைந்துள்ள புதுக்கடை கட்டிடங்களில் ஒரு கடை குத்தகைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும், உரிமையாளர் சி எஸ். கே. ஸ்தாபனம் (திருமகள் அரிசி ஆலை) 133, கே கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். 2020

## வவுனியா கரம்பைக்காடு பகுதியில் கைதான 9 பேரும் விசாரணையின் பின் விடுதலை

[வவுனியா]

வவுனியா கரம்பைக்காடு வீடமைப்புத்திட்டப்பகுதியிலிருந்து கடந்தவாரம் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்ட ஒன்பது இளைஞர்களும் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமுக்கே கைது செய்யப்பட்ட ஒன்பது இளைஞர்களும் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டதிலிருந்து நான்கு தினங்களின்பின் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## A Thanks giving Memorial Service

For the life of

MR. KANAPATHIPILLAI ALBERT SELLIAH

will be held at the

The Cathedral Church, Vaddukoddai at 9-00 a. m., on Saturday 6th of October, 1984.

The photograph of Mr. Selliah will be unveiled in the Daniel Poor Library following the service.

Alumni, Parents. Friends and Relatives are cordially invited.

Jaffna College, VADDUKODDAI.

A. KADIRGAMAR, Principal.

1912

## பதவி வெற்றிடங்கள்




கீழ்க்கண்ட இடங்களுக்கு

**டிப்போ மனேஜர்களும் / விற்பனைப் பிரதிநிதிகளும்**

தேவை.

யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை, உடுவில், காங்கேசன்துறை, பருத்தித்துறை, சுன்னாகம், அச்சுவேலி, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பளை, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், தலைமன்னார். மாதச்சம்பளம் ரூபா 2000/-மும் கமிஷனும் உண்டு. சிபார்சுகளோ நேரடி விண்ணப்பங்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிணைப் பணம் செலுத்தக்கூடியவர்கள் மட்டும் 6-10-84க்கு முன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

THE AUMIOUS ORGANISATION

Grape Garden Avenue, Kokuvil.

2013

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

# ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

## யாழ்ப்பாணம்/கொழும்பு/யாழ்ப்பாணம்

## இன்று முதல் இரவு/பகல் பஸ்சேவை

புறப்படும் இடம்: கன்னாதிட்டி சந்தி; புறப்படும் நேரம்: காலை 7-30 மணி மாலை 6-30

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்:**

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட், கன்னாதிட்டி; தொலைபேசி: 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர் ஆஸ்பத்திரி வீதி, தொலைபேசி: 23596
3. நியூ ப்ரசீதா, ஆஸ்பத்திரி வீதி; தொலைபேசி: 22480
4. (1-10-84 முதல்) அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி; தொலைபேசி: 22608

**கொழும்பில்:**

1. ஹோம்பிறுன்ஸ் லிமிட் பம்பலப்பிட்டி; தொலைபேசி: 589190
2. டையமன் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை; தொலைபேசி: 82978

புறப்படும் நேரம்: காலை 7-00 மணி மாலை 7-45.

ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR

ஏற்றுமதிப் பேச்சுக்கு இங்குவந்துள்ள

தமிழக வர்த்தகர் சொல்கிறார்:

# இந்தியாவைவிடத்தரமான பனை உற்பத்திகளை யாழ்ப்பாணத்தில் கண்டேன்

இலங்கையிலிருந்து பனை மூலவளப் பொருள்களை ஏற்றுமதி செய்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் முகமாக இந்தியாவிலிருந்து நெல்லை ஏற்றுமதி நிறுவன அதிபர் திரு. ஆர். சந்திரன் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அவர் அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது,

"இந்தியா ஏற்கனவேபனை அபிவிருத்தியில் அபரிமித முன்னேற்றம் கண்டுள்ளது தற்போது இந்தியா பனந்தும்பையும், பனங்கைப்பணிப்பொருள்களையும் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது இலங்கையின பனை அபிவிருத்தி துரிதமாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தியாவில் பனந்தும்பு அதிகமாக உள்ளதால் அதன் பயனை முன்னரே அறிந்து ஏற்றுமதி செய்து வருகின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்த அளவில் பனந்துப்பின் மகிமை இப்போதுதான் தெரியவந்துள்ளது. எமது நாட்டைச்சேர்ந்த கொமன்வெல்த் பனைவள நிபுணர் திரு. சம்பந்தம் இங்குவந்திருந்து இலங்கையில் பனை அபிவிருத்தியில் பங்கு கொண்டுள்ளது எனக்குப் பெருமையளிக்கின்றது.

## தரமான உற்பத்தி

இங்கு உற்பத்தி செய்யப்படும் பனை ஓலையிலான தட்டங்கள், மேசை விரிப்புகள், தொப்பி ஆகியவைவற்றை நான் பார்வையிட்டபோது அவை இந்தியாவிலும் பார்க்கத் தரம் வாய்ந்தவைவாக இருப்பதைக் கண்டுகொண்டேன். பனை ஈர்க்கினால் செய்யப்பட்ட ஈாக்குக் கூடைகளும் சிறந்த தரம் வாய்ந்தனவாக உள்ளன.

இந்தியாவைப் பொறுத்த வரையில் பிளாஸ்ரிக் பொருள்களுக்குப் பதிலாகப் பனைஓலைப் பொருள்களையே விரும்பி வாங்குகின்றனர். வீட்டுப்பாவனைப் பொருள்கள் எல்லாம் பனை ஓலையில் தயாரான பொருள்களாகவே இருப்பதை அங்கு காணலாம். இந்தியாவில் பனை ஓலைப் பொருள்களை இருவகையாகப்பிரித்துள்ளனர் நாளாந்தப் பாவனைப் பொருள்களாக ஓலைப்பொருள்களைப் பயன்படுத்துவது முதல்வகை. பனை ஓலையிலான ஆடம்பரப் பொருள்களும், ஏற்றுமதிப் பொருள்களுமே இரண்டாவது வகையாகும் இதனாலேயே அங்கே பனை ஓலைக்கைப்பணித் தொழிலை நம்பிவாழும் தொழிலாளிகள் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

## சீதனமாக பனைஓலைப்பொருள்

பிளாஸ்ரிக் சாமான்களுக்கு இந்தியாவில் மவுசு இல்லாததால் பனைஓலைத் தொழிலாளிகளின் வளர்ச்சிக்கு இதுமிகவும் சாதகமாக அமைந்துள்ளது. இந்தியாவில் திருமணப் பேச்சுவார்த்தைகளின் போது பெண் வீட்டாரின் சீதனப்பொருள்களில் பனையோலையால் செய்யப்பட்ட உற்பத்திப்பொருள்களும் முக்கிய அம்சமாக இடம் பெறுகின்றன.

இலங்கையில் ஓலைப்பொருள்களை மக்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. பிளாஸ்ரிக் பொருள்களையே வீட்டுப் பாவனைகளுக்குக் கூடுதலாகப் பயன்படுத்துகின்றார்கள். இதனால் இங்கு பனை ஓலை உற்பத்துப் பொருள்கள குறைவாக உள்ளன. இலங்கையில் பனையோலை பயன்படுத்தப்படாததினால் வீணாகின்றன.

## இலங்கையில் அதிக பனைஓலை

இந்தியாவில் பனையோலைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இலங்கையில் அதிகமான பனையோலைகளைப் பெறக் கூடியதாக இருப்பதினால் இலங்கையிலிருந்து குறிப்பாகத் தலைமன்னாரிலிருந்து பனையோலைகளை இந்தியாவிற்கு உற்பத்திக்கான மூலப்பொருளாக ஏற்றுமதி செய்வதற்கு இலங்கைப்பனை அபிவிருத்திச் சபை எனது கோரிக்கையை ஏற்று முன்வந்துள்ளது இதன் மூலம் இங்கிருந்து கொண்டு செல்லும் பனையோலையைப் பயன்படுத்திஇந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான மக்கள்

(15ம் பக்கம் பார்க்க)

சந்தித்து எழுதியவர்:

எஸ். ஜே. ஜெயக்குமார்

# பாரதப் படை எடுப்பு?

'பிக்குவே! நான் யார் தெரியுமா?' அசோகன் குரலில் ஆவல் தொனித்தது.

'கலிங்கத்தை வெற்றிகண்ட மாமன்னன் அசோகனைத் தெரியாமல் இருக்கமுடியுமா?'' என்றார் துறவி.

'அதுமட்டும் தானா?''... நான் உனது...... உமது சிறிய தந்தையல்லவா''?

'தெரியும்' என்று சொன்ன துறவியின் கண்களில் அமைதிதோன்றியது.

'அப்படியானால் நீங்கள் என்னை வெறுக்கவில்லையா?'' என்றார் அசோக மன்னன்.

''வெறுப்பா? துறவியின் மொழியில் வெறுப்பு என்ற சொல்லுக்கே இடமில்லை. மேலும் பகைமை, பகைமை உணர்வை வெற்றிகொண்டதாகச் சரித்திரம் இல்லை'' என்றார் புத்தபிக்கு

மன்னன் மலைத்து நின்றான்; ஆசையால் உலகை வெல்ல நினைத்த அரசனை அன்பால் வென்றுவிட்டார் துறவி.

யார் இந்த புத்த பிக்கு?

அரியாசனத்துக்கு ஆசைப்பட்டு தன் மூத்த சகோதரனைக்கொன்று அரசனாக வந்தவன் அசோகன். அந்த மூத்த சகோதரனின் மகனே இந்த புத்த பிக்கு.

அன்று தோன்றிய சிந்தனைத்துளி இந்தியா மட்டுடுக்குமல்ல உலகனைத்துக்கும் அன்பைபோதிக்க அசோகனுக்கு உதவியது.

''பகைமையை வெல்லும் அன்பை உலகுக்குப் போதித்தும் தாமே சாதித்தும்வந்த அசோகனை இந்தியா என்றும் மறவாது'' என்கிறார் ஆங்கில பேரறிஞர் எச். ஜீ வெல்ஸ் [H. G. Wells]

மொட்டைத்தலைச்சிக்கு கூந்தல் அழகி என்ற பெயர் போன்ற பெயரில் சஞ்சிகைகள் சாத்திரம் சொல்லட்டும். பாரதம் இலங்கைமீது படை எடுக்குமா?

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. SIR ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது

'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன் :- 22605

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர்—5

# டபிள் டாக்டர்

# என். எம். பெரேரா

வடபகுதி மக்களின் பொருளாதாரம் ஒரு காலத்தில் மலாயா, சிங்கப்பூரில் தங்கியிருந்தது. பின்னர் இலங்கை அரசாங்க உத்தியோகத்தில் தங்கியிருந்தது. இப்போது மத்திய கிழக்கு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றது.

மத்திய கிழக்கு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து நிற்கும் இன்றைய காலகட்டத்துக்கு சற்று முன்னதாக அதாவது சுமார் எட்டுப்பத்து வருடங்களுக்கு முன்னர் வடபகுதி இளைஞர்கள் பலரும் விவசாயத்தில் உற்சாகமாக ஈடுபட்டு கைநிறையச் சம்பாதித்தனர். குடியேற்றத்திட்டங்களில் இளைஞர்கள் பலரும் குடியேறினர். இளைஞர்கள் மட்டுமல்ல வடபகுதியினுள்ள விவசாயப் பரம்பரையே முன்னெப்போதுமில்லாதவகையில் முன்னேற்றங் கண்டது வடபகுதியில் தரிசாகக் கிடந்த நிலங்கள் விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வீட்டின் வளவுகளிலும் மிளகாய், கத்தரி, வெண்டி, மரவள்ளி என்று பலவும் செய்கை பண்ணப்பட்டன. வெளிநாட்டு உணவுப் பொருள்களைக்காண்பது கடினம். உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கினால்தான் வாழ முடியுமென்ற நிலை இதற்கேற்ப ஒவ்வொருவரும் ஏதாவது உபஉணவுப் பயிரை வளர்க்கவேண்டுமென்ற கட்டாயநிலை. பல இளைஞர்கள் இதில் உற்சாகமாக ஈடுபட்டனர்.

இதேபோல் மரவள்ளியிலிருந்து வடை முதல் பல்வேறு உணவுப்பண்டங்களையும் எப்படித் தயாரிக்கலாம் என்பது பற்றிய ஆராய்ச்சி இவ்விதமே சோயா முதல் வெவ்வேறு தானியங்களிலிருந்தும் உணவுப்பண்டங்களைப் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் பலரும் ஈடுபட்டனர்.

எதற்கும் வெளிநாட்டு உணவுப்பொருள்களையே நம்பியிருந்த நாட்டு மக்கள் தமது உணவுப்பொருள்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதால் வெங்காயம் மிளகாய் போன்ற உபஉணவுப்பொருள்களின் உற்பத்தியில் பெருமளவு ஈடுபட்ட வடபகுதி விவசாயிகள் அதிக பயனடைந்தனர்.

இந்த நிலைமைக்கு வழி வகுத்தவர் அன்று நிதியமைச்சராகப் பதவியேற்ற டாக்டர் என். எம். பெரேரா ஆவார்.

ஆரம்பத்தில் பொது மக்கள் பல கஷ்டங்களுக்குள்ளான போதிலும் சிறிது அனுபவப்பட்டதும் சமாளிக்கப்பழகத்

### எஸ். எம். ஜி.

தொடங்கினர். டாக்டர் என். எம்மின் திட்டம் மேலும் சில வருடங்களுக்குச் செயல்படுத்தப்பட்டிருந்தால் நாட்டில் ஒருபெரும் மாறுதலே ஏற்பட்டிருக்கும் என்று சொல்லலாம்!

### விளையாட்டு

### வீரர் என். எம்.

டாக்டர் நாணயக்கார பத்திராகே மார்ட்டின் பெரேரா லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவராக இருந்தவர் 1960ம் ஆண்டு ஜூலை மாதம் திருமதி சிறிமா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்த பின் பிற்போக்கு சக்திகள் தலைதூக்காமலிருப்பதற்காக முற்போக்கு சக்திகளுக்கு ஆதரவளிப்பதற்கு லங்கா சமசமாஜக்கட்சி தீர்மானித்தபின்னர் சிறிமா அரசாங்கத்தில் நிதி அமைச்சராகப்பதவியேற்ற டாக்டர் என். எம். பெரேரா அப்பதவியில் ஒன்பதே மாதங்களிருந்தார். 1970-ஆம் ஆண்டு திருமதி சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததிலும் டாக்டர். என். எம். மீண்டும். நிதி அமைச்சரானார்.

1905-ஆம் ஆண்டு ஜூன் மாதம்ஆறாந் தேதி பிறந்தஎன் எம் கல்கிஸை சென் தோமஸ் கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கல்வி பயின்றார் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்ந்த அவர் 1927-ம் ஆண்டில் இங்கிலாந்து சென்று லண்டன் பொருளாதாரப் பாடசாலையில் சேர்ந்தார்.

இளம் வயதிலே கிரிக்கெட் விளையாட்டில் மிக ஆர்வம் கொண்டிருந்த என். எம் ஆனந்தாக் கல்லூரிக் கிரிக்கெட் குழுவுக்குத் தலைமை தாங்கினார் இலங்கை பல்கலைக்கழககல்லூரிக் கிரிக்கெட்குழுவில் விளையாடினார் லண்டன் பொருளாதாரப் பாடசாலைக் கிரிக்கெட் குழுவுக்குத் தலைமை தாங்கிப்பரிசில்களும் பெற்றார்

அரசியல் சாஸ்திரத்தில் நிபுணரான பேராசிரியர் லஸ்கியின் கீழ் லண்டன் பொருளாதாரப்பாடசாலையில் ஆறுவருடங்கள் மாணவனாக என். எம். இருந்தபோது திரு வி. கே. கிருஷ்ண மேனனும் இவருடன் சக மாணவனாக இருந்துவந்தார். டாக்டர் பெரேரா பொருளாதாரத்தில் பீ. எஸ், ஸி. பட்டமும் அடுத்து தத்துவத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். பின்னர் மீண்டும் இவர் சமர்ப்பித்த பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைக்காக டாக்டர் பட்டம் வழங்கப்பெற்றார்.

இங்கிலாந்திலிருந்த போது 1928ஆம் ஆண்டில் இலங்கை சிவில் சேவைப்பரீட்சை எழுதினார். சிவில் சேவைக்கு இலங்கையரைத் தெரிவு செய்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த அக்காலத்தில் இருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். டாக்டர் பெரேரா நான்காவது இடத்துக்கு வந்தார்.

இலங்கை திரும்பிய டாக்டர் என். எம். பெரேரா இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளராகப் பதவியேற்றார்.

### லங்கா சமசமாஜ

### கட்சி உதயம்

ஆனால் டாக்டர் பெரேராவுக்கு புதியதொரு பாதை காத்திருந்தது.

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா திரு பிலிப் குணவர்த்தன போன்றோருடனும் மற்றும் சிலருடனும் சேர்ந்து 1935ஆம் ஆண்டில் டாக்டர் என். எம். பெரேரா புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்தார். அதுதான லங்கா சமசமாஜக்கட்சி.

இந்தக்கட்சியின் பலத்தைப் பரிசோதிப்பதற்கு அடுத்தவருடமே முதல் வாய்ப்பு கிடைத்தது. இரண்டாவது அரசசபைக்கு டொனமூர் அரசியல் அமைப்பின் கீழ் 1936ம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி நான்கு வேட்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தியது இத்தேர்தலில் டாக்டர் பெரேரா ருவான்வலைத் தொகுதியிலிருந்தும், திரு. பிலிப் குணவர்த்

[14ம் பக்கம் பார்க்க]


## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✯ தாமதம் ✯ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

TFC
த பிறென்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680


## வண்ணைப் பெருமாள்

பல்லவி

வண்ணைப் பெருமபதியில் வெண்ணெய் திருடியுண்ட
கண்ணன் உறைந்திருத்தல் திண்ணம் திண்ணம்...
(வண்ணை......)

அநுபல்லவி

மண்ணில் மகிமையுள்ள மாகில் பெருமையுள்ள
மாயன் வெங்கடேசன் மகிழ்ந்துறையும் கோவில்...
(வண்ணை......)

சரணம்

பண்ணில் பஜனைசெய்து பாடியுருகி நின்றால்
பாங்காய் வரங்களையே பக்தர்க்கருளும் வண்ணம்
கண்ணைப் பறிக்குமொளிக் காட்சி கொடுத்திடுவான்
காக்கும் தெய்வமெமையே காத்து நிற்கின்றானங்கு...
(வண்ணை......)

எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

● இன்று வண்ணைப் பெருமாள் 6ந் திருவிழா

# கனவுகள் தூக்கத்தைக் கெடுக்கின்றனவா?

கனவு இல்லாத தூக்கம் தான் நல்ல தூக்கம் என்று நம்மிடையே ஒரு பொதுவான நம்பிக்கை உலவுகின்றது கனவு தூக்கத்தை கெடுத்து விடுகின்றது என்று பலர் கருதுகின்றனர். இது உண்மையா? இது போன்ற நம்பிக்கைகளில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது?

இது போன்ற நம்பிக்கைகள் முற்றிலும் அர்த்தமற்றவை என்று உள நலவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் நல்ல தூக்கத்திற்கு க்கனவுகள்மிகவும் அவசியம். பகல் நேர உழைப்பின் போது உடல் இழந்த ஆற்றலை மீட்டுப் பெறுவதற்கும் மூளை ஒழுங்காகச் செயல்படுவதற்கும் கனவு மிகவும் உதவுகின்றது. மூளையில் ஏற்கனவே பதிவாகி உள்ள தகவல்களோடு புதிய தகவல்களை இணைப்பதற்கும் நினைவாற்றலுக்கும் கனவுகள் உதவுகின்றன என்பதை ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தி உணர்வு பற்றிய ஆசைகளோடு அனைத்துக் கனவுகளும் தொடர்பு கொண்டுள்ளன என்றும் இதுபோன்ற ஆசைகளை அடிப்படையாகக் கொண்டே கனவுகள் உண்டாகின்றன என்றும் ஃபிராய்டு என்பவர் கூறுகின்றார்.

### உளவியல், அறிவியல்

### அறிஞர்கள்கருத்து

ஆனால் இன்றைய உளவியல் அறிஞர்களின் கருத்து கொஞ்சம் வேறுபட்டதாக இருக்கின்றது. நாம் நினைவில் வைத்துக் கொள்வதற்கு அவசியமில்லாத தகவல்களை மூளையிலிருந்து அப்புறப்படுத்துவது தான் கனவின் வேலை என்று ஒரு உளவியல் அறிஞர் கூறுகின்றார்

மோனேமைன்கள் என்னும் வேதிப் பொருட்கள் மூளைப் புறணியில் செயல்படுவதற்கும் கனவுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி இப்போது அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சிகள் தூக்கத்தைப் பற்றியும் விழிப்பைப் பற்றியும் மனம் செயல்படுவது பற்றியும் மனக்கோளாறுகள் பற்றியும் நாம் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தூங்கச் செல்லு முன்னர் நமக்கு இருக்கும் மனநிலையும் சிந்தனையும் நம்முடைய கனவுகளைப் பாதிக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உதாரணமாக தூங்கச் செல்லும் முன்னர் நாம் நல்ல மன நிலையில் இருந்தால் நமக்கு இனிய கனவுகள் வரும் என்று அவர்கள் கூறுகின்றனர். சிலரால் அவர்கள் காணும் கனவினுடைய போக்கை மாற்றி அமைக்கக் கூடமுடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையில் கனவு இல்லாத தூக்கம் என்பதுகிடையவே கிடையாது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கனவு காணுகிறோம் ஆனால் கனவுகளை நினைவு கூர்வதில் தான பிரச்னை இருக்கிறது. நம்மால் சில கனவுகளைத்தான் நினைவிற்குக் கொண்டுவர முடிகிறது. எனவே அதுபோன்ற சமயங்களில் மட்டும்தான் நாம் கனவு கண்டதாக நினைத்துக் கொள்கிறோம் ஆனால் உண்மையில் நாம்கண்ட கனவுகளில் பெரும் பாலானவற்றை நம்மால் நினைவிற்குக் கொண்டுவர முடிவதில்லை இதைத்தான் நாம் கனவு இல்லாத தூக்கம்' என்று விவரிக்கின்றோம்

### ஆழ்மனத்தை

### அறிந்துகொள்ள...

ஆழ் மனத்தை அறிந்து கொள்ளக் கனவு ஒரு வழி என்று உளவியலுக்கு ஒரு வடிவம் கொடுத்த அறிஞர் ஃபிராய்டு கூறுகிறார்.

சில சமயங்களில் நமக்குப் பயங்கர கனவுகள் ஏற்படுவது உண்டு. இது போன்ற பயங்கர கனவுகளுக்குக் காரணம் என்ன?

குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட அச்சம் இன்மை போன்ற பயங்கர அனுபவங்களுமே இவ்வாறு பயங்கரக் கனவுகளாக வெளிப்படுகின்றன என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இதுபோன்ற பயங்கரக் கனவுகள் ஒரே மாதிரியாக இருந்தாலும் அவற்றின் அர்த்தம்

(14ம் பக்கம் பார்க்க)

# எமது சிறுகதை

முத்து முத்தான எழுத்துக்களில் அந்த அறையின் முன் 'டாக்டர் எஸ். ரவீந்தர்' எனப் பொறிக்கப்பட்டிருக்கிறது. நோயாளிகள் பலர் நம்பர்த் துண்டுகளைக் கையில் வைத்துக் கொண்டு வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள்.

'வாட் றவுண்ட்' முடிந்து டாக்டர் ரவீந்தர் தனது அறைக்குள் நுழைகின்றார். அப்போது சரியாக மணிபத்து.

நர்ஸ் ஒருத்தி நோயாளர்களின் பெயர்ப்பட்டியலைக் கொண்டுவந்து அவர் முன் வைக்கிறாள். பெயர்ப் பட்டியலில் எல்லாமாகப் பதினறு பெயர்கள். எப்படியும் அவர்களைப் பார்த்துமுடிக்க மூன்று மணியாகிவிடும்.

டாக்டர் ரவீந்தர் றிசீவரைக் கையில் எடுத்தவண்ணம் நம்பரைச் சுழற்றுகிறார், ''அம்மா இன்றைக்கு வீட்டுக்குவர எப்படியும் மூன்று மணிக்கு மேலாகிவிடும். எனக்காகக்காத்திராமல்நீங்கள் சாப்பிடுங்கோ. நான் இங்கே எங்காவது பார்த்துக்கொள்கிறேன்''- சொல்லிவிட்டு றிசீவரை வைக்க நர்ஸ் முதலாவது நோயாளியைப் பெயர் சொல்லி அழைப்பது கேட்கிறது.

அந்த நோயாளி சாப்பாட்டில் அதிக கவனம் செலுத்தாததால் குடலில் புண் உண்டாகியிருந்தது. தகுந்த மாத்திரைகளை எழுதிக் கொடுத்து அந்தமாத்திரைகளுக்கு நோய் குணமடையாவிட்டால் சத்திர சிகிச்சைசெய்யவேண்டும்எனக் கூறி அனுப்புகிறார்.

பெயர்ப்பட்டியலில் இரண்டாவதாக வி. சிவநாதன் என்ற பெயர். நர்ஸ் பெயர் சொல்லி அழைக்கிறாள்.

எடுப்பான தோற்றம் கொண்ட அந்த நோயாளி அறைக்குள் நுழைகிறார். வயது எப்படியும் முப்பத்திரண்டிற்கு மேலிருக்கும். அவருடன் சேர்ந்ததாக ஒரு பெண்ணும் அந்த அறைக்குள் போகிறாள். அவள் தலை குனிந்தபடி அவனருகில் நிற்கிறாள்.

''சிட்டவுன் மிஸ்டர்''என்ற வண்ணம் தலைநிமிர்த்திய ரவீந்தருக்கு 'ஷொக்' அடித்தது மாதிரியிருந்தது.

''ஓ! நீயா? உன்னைத்தேடி நான் எத்தனை மூலை முடக்குகளெல்லாம் அலைந்து திரிந்திருப்பேன் கவிதா. என்னைப் பொறுத்தவரை என்மேல் எந்தவொரு தப்பும் இல்லை. நான்போட்ட கடிதங்களுக்குப் பதிலேவரவில்லை. அதன்பின் உன்வீடுதேடி நான் வந்த போது நீயும் குடும்பமும் வீடு மாறி வேறு இடத்திற்குப் போய்விட்டதாகச் சொன்னார்கள். என்னால் என்ன செய்ய முடியும் உன்னையே நினைத்து நினைத்து இன்னும் கூட உனக்காகக்காத்திருக்க நீ...' என்று சொல்ல வேண்டும்போல் ரவீந்தருக்கிருந்தது. ஆனால் அவள் கழுத்திலிருந்து மினுங்கிய தாலி, வார்த்தைகளை வெளிவராமல் தடைசெய்தன

எதிர் பாராத சந்திப்புக்கள், அதனால்சிறிது நேர மௌனம். மௌனத்தைக் கலைப்பவனாக- ''மிஸ்டர் சிவநாதன் உங்களுக்கு என்ன வருத்தம்?''

''நெஞ்சுக்குத்து, கால்களும் அடிக்கடி வீங்குகின்றன''.

அவரை டெஸ்ட் பண்ணியபடியே ஓரக்கண்ணால் ரவீந்தர் கவிதாவைப் பார்க்கிறார். அவள் இன்னும் தலைநிமிரவில்லை.

''மிஸ்டர் நீங்கள் அதிகமாக லிக்கர் பாவிக்கிறனீங்களா?''

''யெஸ்'' என்று சிவநாதன் சொல்விட்டுத் தலையாட்டுகிறார். ''லிவர் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கு. இனிமேல் கட்டாயம் குடியை நிற்பாட்ட வேணும்''- டாக்டர் ரவீந்தர் சொல்ல, சிவநாதன் தலைகுனிந்தபடியே இருக்கிறார்.

கவிதா நிமிர்ந்து ரவீந்தரை ஒருமுறை பார்க்கிறாள். அவள் கண்களில் கண்ணீர்த்துளிகள் பனிக்கின்றன.




மீண்டும் மௌனத்தைக் கலைப்பவனாக ''இவ உங்கட Wifeஆ''? ரவீந்தர் கேட்கிறார்.

''யெஸ் டொக்டர்''

''கட்டாயம்நீங்கள் குடியை விட்டுத்தான் ஆகவேணும், எனி ஹவ் யூ ஷாட்கிவ்அப்''.

''நானும் விடத்தான் ட்றை பண்ணிறன் டொக்டர் ஆனால் முடியாமல் இருக்கிறது. ஐ ஆம் யூஸ்ட் போர் இற்''.

''கவிதா விக்கி விக்கி அழுகிறாள். அவளுக்கு வாழ்க்கையிலே ஏற்பட்டுவிட்ட சோதனை இது. அவள் அழுவதன் காரணம் ரவீந்தருக்கு நன்றாக விளங்குகிறது. அவளைத்தேற்ற உரிமையில்லாதவனாக ரவீந்தர் கவிதாவை ஒரு முறை பார்க்கிறார்.

'வாழ்க்கையில் விதிதான் எப்படியோவெல்லாம் விளையாடுகிறதே, ஆனால் இவளிலா விதி பரீட்சித்துப்பார்க்க வேண்டும் என்று நினைத்த வண்ணம் மருந்துக்குறிப்பினை எழுதுகிறார்.

''மிஸ்டர் சிவநாதன், நானும் கூட மூன்று வருடங்களுக்கு முன்பு நன்றாகக் குடித்தவன். இளம் வயதில் குடிக்கவேண்டும்என்ற துடிப்பு, அதனால் கிடைக்க வேண்டிய எல்லாவற்றையும் இழந்தவன். எனக்கும் குடி பற்றி நன்றாகத்தெரியும். இடையில் எதிர்பாராத சில தாக்கங்கள் குடியை நிற்பாட்டி விட்டன. ஆனால் நான் குடியைவிட்டும் எனக்குக் கிடைக்கவேண்டியவை எல்லாம் பறிக்கப்பட்டுவிட்டன''- சொல்லிக்கொண்டே ரவீந்தர் கவிதாவைப் பார்க்கிறார்.

அவளும் அழுதவண்ணம் தலையை நிமிர்த்தி ரவீந்தரை ஒருமுறை பார்க்கிறாள். அந்தப்பார்வையிலே அறியமுடியாத பல அர்த்தங்கள் புதைந்து கிடந்தன. ''மிஸ்டர் சிவநாதன், நீங்கள் மரி பண்ணி எவ்வளவுகாலம் இருக்கும்?''- ரவீந்தருக்கு அறியவேண்டும் போலிருந்தது அதனால் இந்தக்கேள்வியைக் கேட்டார்

''செவின்மந்த்ஸ்''

சந்தோஷமாக இருக்கவேண்டிய இந்தவயதில் இட்படிக் குடிக்கக்கூடாது மிஸ்டர். உங்கட Wife ''அழுவதைப்பார்த்தால் வாழவேண்டிய இந்த வயதை இருவருமே வீணாக்குகிறீர்கள் போலத்தான் தெரிகிறது. என்னை நெருங்கிய நண்பனா நினைத்துநான் சொல்வதைக் கேளுங்கோ. ..ப்ளீஸ் டோன்ற் ட்றிங் புறம்ருடே'' சிவநாதனும் ஆமோதிப்பது போல் தலையாட்டுகிறார். கவிதா லேஞ்சியால் கண்களைத்துடைத்துக் கொள்கிறாள்

'கவிதா உன்னால்தான் நான் திருந்தியவன். எத்தனையோ முறை நீ சொல்லியும் கேட்காதநான்...., எத்தனையோ முறை நீ என்னைக் குடியைவிடும்படி வற்புறுத்திய போது அசட்டைசெய்த நான்.., இன்று உன்கணவனுக்குப்புத்தி சொல்ல வேண்டியவனாகி விட்டேன். நான்குடிக்கும் போது எனக்கு நீ எத்தனை தரம் சொல்லியிருப்பாய் ஆனால் நான் கேட்கவில்லை. என்னைவிட்டு வேறு இடத்துக்கு நீசென்றபின் தான் எனக்குப்புத்திவந்தது உனக்காகத்தேடி அலைந்தேன். ஆனால் நீ கிடைக்கவில்லை அதன்பின்தான் கடைசி உன் விருப்பப்படியாவது நடக்க வேண்டும் என்று தோன்றியது. சத்தியமாக இன்றுநான் குடிகாரனில்லை கவிதா'- ரவீந்தரின் உள்மனம் பேசிற்று.

ரவீந்தர்சிந்தித்தார்:

கவிதா குடிப்பழக்கத்தை முற்றாக வெறுப்பவள். ஆனால் அவள் எதை வெறுத்தாளோ அதே குடிப்பழக்கத்தைக் கொண்ட ஒருவரா அவளுக்குக் கணவனாக அமையவேண்டும். விதிதான் எப்படியோவெல்லாம் அவளிடம் விளையாடுகிறதே?

மருந்தைவாங்கிக் கொண்ட சிவநாதன் ''போய் வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு நடக்கிறார். கவிதாவும் பின்னால் நடக்கிறாள், கதவைத் தாண்டியதும் நின்று ஒரு முறை ரவீந்தரைத்திரும்பிப் பார்த்த கவிதா மௌனமாகவே ',நான்போய்வருகிறேன் என்று தலையாட்டிசைகை மூலம் தெரிவித்துவிட்டு நடந்தாள். அவள் நடக்கும்போது மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்தவைகள். அடிமனத்தில் கறைபடிந்ததுபோல் படிந்து கிடந்தவைகளெல்லாம் மனத்திரையை வட்டமிட்டன.

ரவீந்தரால் அதற்குமேலும் பொறுமையாகவிருந்து நோயாளிகளைப் பார்க்கமுடியவில்லை. நர்ஸ் ஒருத்தியைக் கூப்பிட்டு ''மிச்சப பேசண்ட்ஸை வேறு யாராவது டாக்டரை பார்க்கச் சொல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு மேசையின் மேல் தலையைச் சாய்த்துக் கொண்டான்.

மின் விசிறியின் மெல்லிய சத்தம் குழம்பிய அவனது மனதிற்கு ஏதோ ஒரு வகையில் ஆறுதல் கூறுவது போலிருந்தத. மனத்திரையை ரீங்காரமிட்டுக் கொண்டிருந்த பழைய நினைவுகள் படமாக ஓடத்தொடங்கின.

ரவீந்தர் அப்போது மருத்துவக்கல்லூரியில் நான்காவது வருட மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தான். அவன் இருந்த வீட்டிற்கு இரண்டுவீடுகள் தள்ளியே கவிதாவின் வீடு இருந்தது. அவள் அப்போது 'அட்வான்ஸ் லெவல்'படித்துக் கொண்டிருந்தாள்,

தினமும் காலையிலே கவிதா பாடசாலைக்குப் போவதற்கு பஸ் தரிப்புக்கு வருவாள் ரவீந்தர் மருத்துவக் கல்லூரிக்குப் போவதற்காக அதே பஸ்தரிப்புக்கு வருவான். இப்படியாகத் தினமும் காலையிலே ஏற்பட்ட சந்திப்புக்கள் இருவர் உள்ளங்களிலும் காதலை வளர்த்துவிட்டன.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. காதலும் வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் ரவீந்தர் தினமும் வீட்டிற்கு வரும் போது குடித்துவிட்டுத்தான் வருவான். கவிதாஎத்தனையோ தடவைகள் அவனிடம் கெஞ்சிக் கேட்டிருப்பாள்.

'''ரவி, நீங்கள் இனிமேல் குடிக்கக்கூடாது. நானொருத்தி உங்களுக்காக இருக்கிறேன் என்றநினைப்பே இல்லாமல் இப்படிக் குடித்து விட்டு.....''

''கவிதா, நாம் பிறந்ததே வாழ்வதற்காகத்தான் எல்லாவற்றையும் மனிதன் அனுபவிக்கவேண்டும் இப்பொழுது குடித்து ரசிக்கிறேன். ஆனால் நிச்சயமாக எங்கள் கலியாணத்தின் பின் குடிக்கமாட்டேன்''

அவளால் தான் என்ன செய்யமுடியும்? அவனோ அவள் சொல்வதைக் கேட்பவனாக இல்லை.

இவர்களது காதல் விஷயம் எப்படியோ கவிதாவின் வீட்டாருக்கு எட்டிவிட்டது. கவிதாவின் பெற்றோர் அதற்கு அனுமதிப்பதாகவில்லை. ''குடிகார டாக்டர் மாப்பிள்ளையை விட, சாதாரண கிளாக்குக்கு எனது பிள்ளையைச்செய்து வைபபேன்'' என்று கவிதாவின் தந்தை சத்தம் போட்டார்.

''நீ குடிகாரனைக் காதலித்து வாழ்க்கையைப் பாழாக்கப் போகிறாய் கவிதா''என்று தாய் புத்திசொன்னாள். இறுதியில் இந்த விஷயம் ரவீந்தரின் வீட்டுக்கும் எட்டிவிட்டது.

கவிதாவின் தந்தை ரவீந்தரின் தாயைக் கண்டு இது பற்றித் தெரிவித்தார் ரவீந்தரின் தாயாரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, ரவீந்தருக்கு என்னசெய்வதென்று தெரியாமற் போய் விட்டது.

சில நாட்களின் பின் ரவீந்தரின் தாயாருக்கு வேறு இடத்திற்கு மாற்றம் வந்திருந்தது. தந்தை இல்லாத காரணத்தால் அவனும் கூடவே தாயுடன் போக வேண்டிய நிலையிலிருந்தான். புதிய இடம் முன்பிருந்த இடத்திலும் தூரத்திலிருந்ததால் தினமும் ரவீந்தரால் மருத்துவக் கல்லூரிக்குச் சென்று திரும்பவே நேரம் சரியாகஇருந்தது. அதனால் கவிதாவைச் சந்திக்கமுடியவில்லை.

ஆனாலும் அவன் அடுத்தடுத்துப பல கடிதங்களை அவளுக்குப் போட்டிருந்தான். அதற்கும் பதிலொன்றும் வரவில்லை.

ஒரு நாள் ரவீந்தர் கவிதாவின் வீட்டுககுப் போனான். அங்கு வீடு பூட்டப்பட்டிருந்தது. கவிதாவும் அவளது பெற்றோரும் வேறு இடத்திறகு மாறிப்போய்விட்டதாகவும் இப்போது அவர்கள் இருக்கும் இடம் தெரியவில்லையென்றும் சொன்னார்கள். அதன்பின் அவளைத் தேடி அவன் எவ்வளவ தூரம் அலைந்திருப்பான். கவிதா கிடைக்கவில்லை. இறுதியில் அவளது விருப்பப்படி அவன் குடிப்பதையே விட்டுவிட்டான்.

நாட்கள் ஓடின கவிதாவைப் பற்றிய எந்தவொரு தக

[6ம் பக்கம் பார்க்க]

## என்னுடன் பாடிட வாருங்கள்

பாடும் பறவைகளே - பறந்தென்
தோளில் அமர்ந்திருங்கள்

பனியெனும் சரளம்
அணைந்திட விரியும்

வைகறை இளமலர்காள் - என்
கைகளில் விழுந்திருங்கள்

மார்கழி வானத்து
வாசலில் எவளோ
வண்ணக் கோலம்
வரைகின்றாள்!

பாருல கின்னும் பாதி உறக்கம்
சில்லெனும் குளிர்தரும் மயக்கம்

- (பாடும்)

ஊமைக் குயில்போல்
கூண்டின் நிழலில்
ஒளிந்து கிடந்தேன் இதுவரையில்
உள்ளம் விழித்திசைத்
தாகம் எழுந்தது
ஓடிவந்தேன் உம்மிடையில்

கண்ணீரில் களித்து - நம்
செந்நீரில் குளித்த
கலியுகம் சாய்ந்திடும் வேளை
விண்மீதில் இதுவரை
காணாத மங்கல
வெளிச்சம் பிறந்திடு ங்காலை

விதிதனை மிதித்து
புதுநெறி வகுத்து
வெற்றி மணிக்கொடி பறந்திடும் - அந்தப்
புதிய தரிசனம்
கண்டு மகிழ்ந்திடும்
பொன்னான நேரம் விரைந்திடும் - இதைப்

பாடும் பறவைகளே என்னுடன்
பாடிட வாருங்கள் - நம்
ராகங்கள் புதிது பாடல்கள் புதிது
லயங்களும் நயங்களும் புதிது

பாடும் பறவைகளே என்னுடன்
பாடிட வாருங்கள்!

கே. சி. எஸ். அருணாசலம்

## தமிழ்தந்த தாதாக்கள்

# மாவை வாசி தந்த மாண்புடைப் பள்ளு

**க.சி.குலரத்தினம்**

ஈழநாட்டுப் புலவர்கள் காலந்தோறும் தந்த தமிழ்ப் பிரபந்தங்களுள், காதல், தூது நொண்டிநாடகம், பள்ளு, குறவஞ்சி முதலியன பொதுமக்கள் படித்துணரும் வகையில் சாதாரண மக்களின் வாழ்க்கைச் சம்பவங்களை வருணிப்பதில் சிறந்து விளங்குகின்றன ஈழத்தெழுந்த பள்ளுகளுள் காலத்தாற் பிந்தியது மாவிட்டபுரத்துச் சின்னக்குட்டிப் புலவர் தந்த தண்டிகைக் கனகராயன்பள்ளு என்னும் பிரபந்தமாகும்.

தமிழரசர்காலத்தில் காரைக்கால் என்னும் ஊரிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய வேளாளர் தெல்லிப்பழை, இருபாலை மயிலிட்டி முதலாய இடங்களில் பெருஞ் செல்வாக்கோடு வாழ்ந்தனர் அவர்களுள் தெல்லிப்பழையில் சிறப்புடன் வாழ்ந்த கனகராயன் என்பாரின் முன்னோருக்குத் தமிழரசர் தண்டிகை முதலாய விருதுகள் வழங்கிக் கௌரவித்திருந்தனர். அந்தச் சிறப்பு மேம்பாட்டினால் அவர்களின் பாரம்பரியப் பெயர்களுக்கு முன்தண்டிகை என்னும் விருது வழங்கவே, அந்த மரபில் வந்த இவர் தண்டிகைக் கனகராயன் எனப்புகழ் பெற்ருர்.

### ஆஸ்தானப் புலவர்

தெல்லிப்பழையில் வாழ்ந்த தண்டிகைக் கனகராயனின் மாளிகையில் மதிப்புவாய்ந்த ஆஸ்தானப் புலவராய் அம்மனையை அலங்கரித்தவர் மாவிட்டபுரத்தவராய சின்னக்குட்டிப்புலவர் என்னும் சிறந்த கல்விமானுவர். சின்னக்குட்டிப்புலவர் நல்ல தமிழ்ப்பரம்பரையில் உருவான நற்றமிழ்ப்புலவராவர்.

அவர் தாம்வாழ்ந்த பெரும்பகுதி யெங்கும் அன்று நிலவிய உழவு வாழ்க்கையை நேரில் நன்ருக அறிந்தவராவர். உழவுத்தொழிலில் உழுவித்துண்போருக்குப் பண்போடும் பணிவோடும் பணிபுரிந்த தொழிலாளரின் பெயரினலேயே பள்ளுப் பிரபந்தம் தோன்றியதாகும். ஆனால் அது உழவுத் தொழிலின் உயர்வையும் பண்பாட்டையும் குறிப்பதாகும்.

பள்ளுப்பிரபந்தம் நாடகமாக நடித்தற் சேற்றவகையில் எழுந்ததாகும். அதிலே வருகின்ற உரையாடல் அந்த நாடகத்துக்கு ஏற்றங் கொடுக்கும் ஓர் அம்சமாகும். தொழிலாளிக்கு அக்கால வழக்கத்தின்படி இரண்டு மனைவியர் வெவ்வேறு பிரதேசத்தவராய் வந்து வாய்ப்பது வழக்கம். அவர்கள் இடையிடையே தங்களுள் உண்டாகும் பிணக்குகளில் ஆளை ஆள் செல்லமாகவும், காரசாரமாகவும் ஏசிக்கொள்ளும் போது அவரவர் பிரதேசத்து வாழ்க்கைப் போக்கு நாகரிகம் கண்டிக்கப்படும் வகையில் அவரவர் வணங்கும் தெய்வ மூர்த்தங்களும் கண்டிக்கப்படுதல் வழக்கமாயிற்று.

### மனைவியர் மரபை மாற்றிய புலவர்

பள்ளுப் பிரபந்தங்களில் பொதுவாகத் தொழிலாளியின் மனைவியர் வெவ்வேறு ஊரவராயோ நாட்டவராயோ வந்து வாய்ப்பவளாக, இங்கே சின்னக்குட்டிப்புலவர் சித்திரித்த மனைவியர் இருவரும் புகழ்பெற்ற வளம் நிறைந்த காரைக்காட்டுப் பிரதேசத்தவராய், ஒருத்தி வடபகுதியினளாகவும், மற்றவள் தென்பகுதியினளாகவும் வந்து வாய்த்துள்ளனர் இருவரும் அபிவிருத்தியடைந்த பிரதேசத்தவாரகத் தங்கள் பிரதேசவளச் சிறப்புக் கூறும்போது' படிப்பவர் மனம் பக்கஞ்சாராது மணிக்கூட்டு ஊசலி போல அங்கும் இங்கும் அசைகிறது.

நாட்டுவளம் கூறும் பெண்கள் தங்கள் நாட்டில் பாலும் தேனும் கலந்து பாய்வதாகவும், வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளின் சாறுகள் மூன்றும் திரண்டு பாய்வதாகவும். கிளி, குயில் முதலிய இனிய குரற்பறவைகள் ஒலி செய்வதாகவும் பாடுதல், புகழ்தல் வழக்கம். அந்தமரபில் இவர்களும் தத்தம் பிரதேச வளங்கூறுதல், கற்பனையில் ஓர் உயர்ச்சிதான் அந்த உயர்ச்சியிலே நெற்பயிர் கரும்பின் அளவுக்கு வளர்கின்ற தென்றால் அதற்கு வயலில் உண்டான சேறு தான் காரணமாம். அந்தச் சேறு முக்கனிகளின் சாறுதான்.

வன்ன மாங்கனி யூற்றிய
ஆற்றின்
வருக்கை வாழை பெருக்
கிய சேற்றின்
கன்ன லென்னவே செந்
நெல் வளர்ந்தோங்கும்
தென்காரைவள நாடெங்
கள் நாடே

தென்காரைக்காடு இவ்வாருக வடகாரைக்காடு எவ்வாறென்னில் அங்கே செந்நெல்லினத்திலே பலவகையான இனங்கள் முற்றிக்கலகலத்து அறுவடையாகி, மலைகள் போலக் குவிக்கப்பெற்றுள்ளதாம்.

பலவிதச் செந்நெல்
போரை மிதித்துப்
பகரும் பற்பல நற்றிசை
தோறும்
மலைகளன்னப் பொலியைக்
குவிக்கும்
வடகாரைவள நாடெங்
கள் நாடே

பாரத நாட்டிலே தென்திசைக்கு ஒரு பெரிய ஏற்றம் பண்டுதொட்டு இன்று வரை உண்டு. அது எக்காலத்திலும் உள்ளது. மேருமலை தாழ்ந்து தென்திசை யுயர்ந்தபோது, திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே சென்றேற எனவருந் தொடர் தென்னாட்டுத் தெய்வமே எந்நாட்டவர்க்கும் தெய்வம் எனப் போற்றவும் வைத்தன. அந்தவகையில் அந்த மரபில் வந்த தென்காரைக்காற் பெண்என்ன சொன்னுள் தெரியுமா?

திருவைந்தெழுத்தும் என்றும் சனதனமாய் நிலவும் சைவசமயமும் திருநான் மறையும், திருமால், பிரமன் ஆகியோராலும் அறியமுடியாத நீதியும், வாய்மையும் வளர்ந்தோங்கிய சிறப்பில் திருவெண்ணீற்றின் சிறப்பும் அறநெறியும் தென்பகுதியிலே வளர்ந்தோங்குகின்றதாம்.

மருவும் அஞ்செழுத்தும்
வளர் சைவமும்
மறையும் நீதியும்
வாய்மையும் ஓங்கிட
திருவெண்ணீறும் அறநெறி
யும் வளர்
தென்காரைவள நாடெங்
கள் நாடே

### மற்றுஞ்சில மரபுமாற்றங்கள்

பள்ளுப் பிரபந்த மரபில் சின்னக்குட்டிப் புலவர் செய்த மற்றுஞ் சில மரபுமாற்றங்களும் உண்டு. பள்ளுப் பிரபந்தப் பாத்திரங்கள் அவர்கள் செய்த தொழில்களையும் இருப்பிடச் சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டே வழங்கிவந்தன. சங்ககால இலக்கியங்களில் ஆயிரக்கணக்கான தனிப்பாடல்களிலேயும் அந்தமரபு நிலவி வந்தது. கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு' முதலிய பாடல்களில் தலைவன் தலைவியர் தனிப்பட்ட பெயர் பெற்றவராய் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையிலே வந்த வரிசையிலே தான் பள்ளுப்பிரபந்தப் பாத்திரங்களும் வழங்கிவந்தன வேனும், சின்னக்குட்டிப் புலவர் அந்தவரன் முறையை மாற்றிப் பாத்திரமாயமைந்த பண்ணைத் தொழிலாளிக்குப் பெயர் குறிப்பிட்டு நாகன் என வழங்குகின்ருர்.

இன்னும் சின்னக்குட்டிப் புலவர் எடுத்துக்கொண்ட பிரபந்தத்தின் பாட்டுடைத் தலைவனுகை கனகநாயகன் என்பானின் குலமுறை கிளத்தும் மரபினையும் அவர் விருந்தாக புதுவதாக, நூதனமாக, புரட்சிகரமாக நுழைத்துள்ளார். கனகநாயகனின் முன்னோருள் பெருஞ்சிறப்புப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தவர் சனகராயன் என்பாராவார். இங்ஙனம் நுழைத்தவர் அந்தக் குலமுறையில் வந்தவர்கள் வரன் முறையாக வாழ்த்தும் பகுதியும் புதியதாக தெல்லிப்பழை, மயிலிட்டி, இருபாலை ஆகிய மூன்று ஊர்களிலும் வாழ்ந்த முப்பத்துநால்வரை வாழ்த்துகின்ருர். இந்தக் கனகராயன்குடும்பத்துக்கும் கனகராயன் குளத்துக்கும் தொடர்பு இருக்கலாமோ தெரியவில்லை.

### நூலாக்கிய பெருமை

இவ்வாருகத் தண்டிகைக் கனகராயன் பள்ளினை நன்ருக ஆராய்ந்து வரலாற்று விளக்கம் முதலிய சிறப்புக்களோடு அருமையாக அரிதில் முயன்று 1932-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை பட்டதாரியும் சட்டத்தரணியுமான அறிஞர் குமாரசுவாமி அவர்களுக்கே உரியதாகும். இவர் கோப்பாய் முன்னுள் பிரதிநிதி வன்னியசிங்கம் அவர்களின் தந்தையாராவர். இப்பெருமகனுர் தேடி வைத்திருந்த யாழ்ப்பாணத் தமிழ் நூல்கள் பல வன்னியசிங்கம் அவர்கள் மூலமாக யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் அன்பளிப்பாகக் கிடைத்திருந்தன. அவை அக்கினி பகவானுக்கு ஆகுதியாகி விட்டமை தமிழர் செய்த தவக் குறைவே தான்.

---

## அழிவில் ஆக்கம்

அழகான நந்தவனம்
அருமையான பூக்கள்
கட்டுக்கடங்கா
காட்டு மிருகங்கள்
பூக்களைச் சிதைத்து
நந்தவனத்தைஅழிக்கின்றன
அழிவின் முடிவில்
காட்டு மிருகங்கள்
காட்டுக்கு விரட்டப்பட
பூக்களும் மரங்களும்
உரமாகின்றன
அந்த உரத்தின் பலத்தில்
நந்தவனம்பிரசவமாகின்றது
புதிய பூக்கள் சிரிக்கின்றன

—சிவயோகமலர் ஜெயக்குமார்

---

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வலும் கிடைக்கவில்லை. ''அவன் எங்கிருந்தாலும் சந்தோஷமாக வாழட்டும்', என்று நினைத்தவனுகத் தனது மருத்துவத் தொழிலில் கவனத்தைச் செலுத்தினுன்.

ரெலிபோன் மணி அடிக்கும் சத்தம் கேட்டு எழும்பிய ரவீந்தர் றிசிவரை எடுத்தான்.

''என்ன தம்பி, நேரம் ஐந்து மணியாகுது. எப்ப வீட்டிற்கு வருவாய்'' எனத் தாய்கேட்க ''இதோ வருகிறேன் அம்மா'' என்றவன் றிசீவரை வைத்துவிட்டு கார்பாக்கை நோக்கி நடந்தான்.

இரண்டுவாரங்கள் கடந்துவிட்டன. அன்று ஒரு சனிக்கிழமை. ரவீந்தர் வீட்டில் காலைச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ரெலிபோன் மணி அலறியது. றிசீவரை எடுத்த ரவீந்தருடன் மறுபக்கத்தில் நர்ஸ் ஒருத்தி கதைத்தாள்.

''டாக்டர் மிஸ்டர் வி. சிவநாதனுக்கு சீரியஸ் வாட் நம்பர் பதினென்கில அட்மிட் பண்ணியிருக்கு. ஸ்ரில் ஹி இஸ் அன்கொன்சஸ் மிசிஸ் சிவநாதன் உங்களை அவசரமாக் கூப்பிடச் சொன்னு...''

''இதோ வருகிறேன்'' என்றவன் கைகளைக் கழுவிவிட்டு அவசரமாக ஆடைகளை மாற்றிக்கொண்டு காரை ஸ்டார்ட் செய்தான்.

சிவநாதனுக்கு 'சேலையின்' ஏற்றப்பட்டிருந்தது. அவர் மயங்கிய நிலையில் கட்டிலிற் படுத்திருந்தார் கவிதா அவரருகில் அழுதவண்ணம் நின்று கொண்டிருந்தாள் சிவநாதனுக்கு லிவர் முழுமையாக டமேஜ் ஆகிவிட்டது என்று டாக்டர் சிவப்பிரகாசத்தின் ரிப்போர்ட் காட்டியது.

காரைவிட்டிறங்கிய ரவீந்தர் அவசர அவசரமாகப் பதினென்காம் வார்ட்டை நோக்கி நடந்தான் ரவீந்தரைக்கண்டதும் கவிதா ''அவரை எப்படியாவது காப்பாற்றுங்கள் ரவி'' என்று கதறியழுதாள்.

முயற்சிகள் யாவும் தோல்வி. ஆமாம் சிவநாதனுக்கு நாடித்துடிப்பு நின்றுவிட்டது. அவர் இறந்து விட்டார்.

சிவநாதனுக்குப் போர்க்கப்பட்டிருந்த வெள்ளை சீற்றை இழுத்து முழுமையாக மூடிவிட்டு ''சொறி கவிதா'' என்று கூறிவிட்டு தலையைக் குனிந்தவாறு மௌனமாக நடக்கிருன் ரவீந்தர் கவிதா கதறியழுகிருள். நர்ஸ் ஒருத்தி அவளைத் தாங்கிப் பிடிக்கிருள்.

ரவீந்தர் மேசையில் சாய்ந்த வண்ணம் படுத்திருக்கிருர். அவர் கண்களிலிருந்து சொட்டுச்சொட்டாக கண்ணீர்த் துளிகள் கொட்டி மேசையை நனைக்கின்றன.

சிவநாதனின் உடலை ஸ்டெச்சரில வைத்து தள்ளிக்கொண்டு போகிருர்கள்.

கவிதாவின் அழுகைச்சத்தம் பெரிதாகக்கேட்டு தூரப் போகப்போக குறைந்து கொண்டு போகிறது.

(யாவும் கற்பனையே)

---


வாழ்க்கை வளம்பெற வழிகாட்டி

"ஷப்ரு"

நிதித்துறையில் உங்கள் தோழன் அவனே!

★ நிதி உதவி!

★ நிலையான வைப்பிற்கு அதிஉயர் வட்டி!!

★ உழைக்கும்போதே சேமிப்பதற்கு புதிய வழி!!!

★ வாடகைக் கொள்வனவு வசதி!!!!

• நிதிப்பிரச்சினைகளை சுலபமாகத் தீர்க்க உங்கள் தோழனை நாடுங்கள்

நாணயம் மிக்க நண்பன்.

SHABRA

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி இல: 589310.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073.

# தேவாலயத்தில் போர்

# 18

யாழ்ப்பாணக் கோட்டையின் பாசறையில் ஒதுக்கான ஓரிடத்தில் பலர் கூடியிருந்தார்கள். இரவின் துயிலின்கொள வேளையில் அவர்கள் மங்கலான வெளிச்சத்தில் கூடியிருந்து முக்கியமான விடயமொன்றினை ஆலோசனை செய்பவர்களாகக் காணப்பட்டனர். பன்னிரண்டு படை வீரர்கள் அக்குழுவில் காணப்பட்டனர். அவர்களில் முக்கியமானவனாகக் கஸ்பார் பிகாரூ விளங்கினான் அவன் அருகில் அவன் நண்பன் றிக்கோ அமர்ந்திருந்தான்.

பிகாரூவின் முன்னாள் மனைவி இசெபெல்லா கிணற்றில் விழுந்து தன்னை அழித்துக் கொண்டதன் பின்னர், பிகாரூவின் மனநிலையில் பெரும் மாறுதல் ஏற்படவில்லை பழி வாங்கும் எண்ணம் அதிகரித்தது. ஒல்லாந்தரை அவன் அறவே வெறுத்தான். அதிகாரத்துடன் ஒரு காலத்தில் அக்கோட்டையின் வைஸ் கமாண்டராக இருந்தவன் கண் முன்னால் காமுகன் ஒருவனிடம் மனைவியைப்பறிகொடுத்துவிட்டுச் சென்றவன்.

போர்த்துக்கீசரின் நிம்மதியான வாழ்வை இம்மண்ணிலிருந்து அழித்தொழித்த ஒல்லாந்தர் பழிவாங்கப்படவேண்டியவர்கள். அந்தக்கோட்டையிலிருந்த ஒல்லாந்த அதிகாரிகள் அனைவரும் அவனுக்கு வன்கோயன்களாகத் தெரிந்தனர்.

பிகாரூ தன் திட்டத்தை விபரித்தான்:

வன்கோயனின் மனைவி இசெபெல்லா கிணற்றில் விழுந்து இறந்த செய்தி நாகபட்டினத்திலிருக்கும் வன்கோயனுக்கு அறிவிக்கப்பட்டு விட்டது...... பிகாரூ, இசெபெல்லா என்ற பெயரை உச்சரிக்கும்போது அவன் நாத்தளதளத்தது. அவனுடன் வாழ்ந்தவள்

''வன்கோயன் எந்த நேரத்திலும் திரும்பிவரலாம் அவன் வந்தால் இந்தக் கோட்டையின் பலம் அதிகரித்துவிடும். அதற்குள் எப்படியாவது நாம் இந்தக் கோட்டையைக் கைப்பற்றிவிட வேண்டும். இப்போது இந்தக் கோட்டையின் காவல் வீரர்களில் பெரும்பாலோர் போர்த்துக்கீச வீரர்களும் மலபார்வீரர்களுமாவர். ஆக இன்று இக்கோட்டையின் கமாண்டராக இருக்கும் ஜாக்கோப் வன் றீய் சிறியதொரு படையைத்தான் தன்னுடன் வைத்திருக்கிறான். அவன் கோட்டைக்கு வெளியிருக்கும் நேரம் பார்த்து நாம் கோட்டைக்குள் இருப்பவர்கள் அனைவரையும் அழித்துவிட வேண்டும்...''

''இது சாத்தியமா?...'' என்று அங்கு குழுமியிருந்தவர்களில் ஒருவன் கேட்டான்.

''ஏன் சாத்தியமில்லை... ஒரு காலத்தில் போர்த்துக்கீசருக்கு விசுவாசமாக இருந்த மலபார் வீரர்கள் பலர் இருக்கின்றனர். டச்சுக்கம்பனியின் சேவையில் எங்களை நாங்கள் சேர்த்துக் கொண்டாலும் ஒல்லாந்தர் எங்களுக்கிழைத்திருக்கும் தீங்கினை மறந்துவிடக்கூடாது. இந்தக்கோட்டையை வெளியிலிருந்து கைப்பற்றுவது கடினம். ஆனால் உள்ளிருந்து கைப்பற்றுவது இலகு'' என்றான் பிகாரூ.

உண்மையில் அந்த வேளையில் கோட்டையிலிருந்த நிலைமைகள் அவர்களுக்குச் சாதகமாகவே இருந்தன. நாகபட்டினத்தில் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தை முறியடிக்க கொமுசாறி வன்கோயன், இந்தக் கோட்டையிலிருந்தபெரும் படையை அழைத்துச் சென்றிருந்தான்

''உங்கள் திட்டம் என்ன?'' என்று றிக்கோ வினயமாகக் கேட்டான்.

''வரும் ஞாயிற்றுக்கிழமை நமது திட்டத்தைநிறைவேற்றிவிட வேண்டும் கமாண்டர் ஜாக்கோப் வன் றீய் பெரும்பாலும் தன் படைவீரர்களுடன் பருத்தித்துறைக்குச் செல்லவிருக்கிறான் பருத்தித்துறையில் பத்தேவியாவிலிருந்து வந்திருக்கும் கப்பல்கள் பொருள்களை ஏற்றி இறக்கிக் கொண்டிருக்கின்றன கோட்டையில் இருக்கும் ஒல்லாந்த அதிகாரிகள் அனைவரும் கோட்டைக்குள் இருக்கும் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள். கோட்டைக்காவலில் அன்று ஒல்லாந்தவீரர்கள் இருக்கமாட்டார்கள் நம்மவர்களே இருப்போம் ஞாயிறுப்பிரார்த்தனையில்கட்டாயமாகக் கலந்துகொள்ளவேண்டுமென்பது குருபால் தேயசின் கண்டிப்பான கட்டளை. ஆகவே, இந்தநாளை விட்டால் வேறு வாய்ப்பான நாள் இல்லை... பிரார்த்தனை நடந்துகொண்டிருக்கும் போது நம்மவர்களில் பலர் தேவாலயத்திற்குள் திடீரென புகுந்து அங்கிருப்போர் அனைவரையும் வெட்டிக்கொல்ல வேண்டும்...''

''தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் போதா?...'' என் ஒருவன் தயக்கத்துடன் கேட்டான். பிகாரூ அவனை ஆழமாக ஊடுருவிப் பார்த்தான்.

''எங்களுக்கு நிகழ்ந்தவற்றை நீ மறந்துவிட்டாயா? எங்களைக் கைதுசெய்து எப்படி அவர்கள் அடிமைகளிலும் கேவலமாக நடத்தினர்? எங்கள் பெண்களை எங்கள் கண் முன்னால் துகிலுரிந்துபோகித்தார்கள்?...''

''எங்கள் திட்டம் சரிவரச் செயற்படாவிட்டால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது...'' என்றான் றிக்கோ.

''றிக்கோ...கோழைமாதிரிப் பேசாதே, வெற்றியும் தோல்வியும் வீரர்களின் வாழ்வில் சகஜமானவைதான். இவர்களிடம் அடிமைகளைக்காட்டிலும் சேவகம் செய்வதிலும் நல்லதொரு இலட்சியத்தையடைய முயன்று அதில் மரணமடைவது சிறந்தது...'' என்றான் பிகாரூ கடுமையான தொனியில்.

''என்றாலும் நண்பனே மட்டக்களப்பில் நிகழ்ந்தவற்றை நாம் மறந்துவிடக்கூடாது. எங்களது மட்டக்களப்புக் கோட்டையை கண்டி மன்னன் ராஜசிங்கனுக்காக ஒல்லாந்தர் கைப்பற்றினர். பின்னர் என்ன செய்தார்கள்? கேள்விப்படவில்லையா? கைதான எங்கள்வீரர்களில் பலர் கழுவேற்றப்பட்டார்கள். மரக்குத்திகளில் பொருத்தப்பட்ட கூரான இரும்புச்சட்டகத்தில் பிருஷ்டத்திற்கூடாக அவர்கள் கழுவேற்றப்பட்டனர் ஒல்லாந்தரின் கொடூரமான தண்டனை அது ஆகவே...'' என்று றிக்கோ தயங்கினான்.

''பிடிபட்டால் தான் அவற்றினை நோக்வேண்டும்... இங்கு பிடிபட வாய்ப்பில்லை. ஆனால் கோட்டையைக் கைப்பற்றிய பின்நாங்கள் அதனை அழித்துவிட்டுக் கப்பலில் ஏறி கோவாவிற்குச் சென்றுவிடவேண்டும். எங்களிடமிருந்து அபகரித்த செல்வங்கள் இங்குள்ளன. அவற்றினையும் எடுத்துச்சென்றுவிடவேண்டும்...''

பிகாரூ தனது பெருந்திட்டத்தை விபரித்தான். அங்கு அன்றிரவு குழுமியிருந்தவர்கள் அத்திட்டத்திற்கு ஒப்புக் கொண்டனர்.

எதிர்பார்த்த ஞாயிறு விரைந்து வந்தது.

பிகாரூ கூறியவாறு கோட்டையின் பதில் கமாண்டர் ஜாக்கோப் வன்றீய் அன்று அதிகாலையே தனது சிறிய படைவீரர்களுடன் பருத்தித்துறைக்குக் கோட்டையைவிட்டு வெளியேறினான். கோட்டையின் பெரிய தேவாலயத்தில் பிரார்த்தனைக்காக ஒல்லாந்த அதிகாரிகளும் வீரர்களும் குழுமத்தொடங்கினர். பெரிய தேவாலயத்திற்குள் அதே மதத்தைச்சேர்ந்த மலபார் வீரர்களுக்குச் செல்ல உரிமையிருக்கவில்லை


பிகாரூகுறித்தகுறித்த இடங்களில் தனது சதிக்குச் சாதகமான வீரர்களைப் பகிர்ந்து ஒதுக்கி நிறுத்தினான்.

காலைஒன்பதுமணி இருந்தாற்போல கோட்டை வாசலில் பரபரப்பெழுந்தது. குதிரைகளின் குளம்பொலி வாசல் கதவு திறக்கப்பட்டது. பதினெட்டு வீரர்கள் குதிரைகளில் வந்தனர். அவர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். சிங்களவர்கள். அவர்களின் தலைவன் டொன் மனுவல் அன்ருடோ சிங்களப்பிரிவு ஒன்றில் முதலியாராக இருந்தான். அவன் தனது வீரர்கள் சிலருடன் நாகதீபத்திற்கு (நயினைதீவு) யாத்திரை ஒன்றினை மேற்கொண்டு வந்திருந்தான். போகும் வழியில் கோட்டைக்கு வந்திருந்தான.

அவன் வரவு பிகாரூவிற்குப்பித்தமாகவில்லை. அவன் வரவால் தனது திட்டத்தில் ஏதாவது இடைஞ்சல் ஏற்படும் என அவன் பயப்படவில்லை பதினெட்டுச் சிங்கள வீரர்களும் நூற்றுக்கணக்கான தனக்குச் சாதகமான வீரர்களை ஒன்றும் செய்துவிடமுடியாது என அவன் திருப்தியடைந்தான்.

றிக்கோ தனது அச்சத்தைத் தெரிவித்தான். அவனை பிகாரூ சமாதானப்படுத்தினான். ''சிங்கள வீரர்களை உனக்குத் தெரியாது. நான் அறிவேன், றிக்கோ. எங்கள் போராட்டத்தில் அவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள். கலந்து கொண்டாலும் பயமில்லை எங்களின் வாள்களின் முன்னும் துப்பாக்கிகளின் முன்னும் அவர்களால் எதுவும் செய்யமுடியாது...''

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

துரதிர்ஷ்டம் பிகாரூவின் பக்கமேயிருந்தது.

பெரிய தேவாலயத்தில் பிரார்த்தனை ஆரம்பமாகிவிட்டது கோட்டைக்குள் பிரார்த்தனையின் தாளலயமான ஒலி கேட்கத் தொடங்கியது,

பிகாரூ திட்டமிட்டபடி, தேவலாயத்தை நோக்கி அவன் வீரர்கள் நகர்ந்தனர். பிகாரூ அவர்களின் முன் செல்ல றிக்கோ இறுதியில் நடந்தான். தேவாலயத்திற்குப் பிரார்த்தனைக்குச் செல்பவர்கள் போல அவர்கள் நடந்துகொண்டனர். தேவாலயத்தை நெருங்கியபோது அவர்கள் நடையில்திடீரெனத் தயக்கம் குடிகொண்டது. அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சிங்கள முதலியார் டொன் மனுவல் அன்ருடோ தனது வீரர்களுடன் தேவாலயத்தின் முன் முழந்தாளிட்டுப் பிரார்த்தனையில் டுபட்டிருந்தான். அவன் சுதேசி ஆதலால் கோட்டையின் தேவாலயத்திற்குள் நுழைய அனுமதியிருக்கவில்லை.

பிகாரூவின் தயக்கம் ஒரு கணத்தில் நீங்கியது அவர்கள் வேகமாக ஆயுதங்களைக்கரங்களில் எடுத்துக்கொண்டு பாய்ந்தனர். தேவாலயத்தின் வெளியில் பிரார்த்தனைசெய்து கொண்டிருந்த சிங்கள வீரர்கள் திடுக்குற்று எழுந்தனர். வாள்களுடனும் துப்பாக்கிகளுடனும் பாய்ந்துவரும் வீரர்களைக் கண்டதும் அவர்கள் தங்களைத் தான் தாக்க வருகிறார்கள் எனத் தப்பாகப் புரிந்து கொண்டு வேகமாகத் தங்கள் அரைகளிலிருந்த வாள்களை உருவிக்கொண்டனர்.

பிகாரூ அப்படியான எதிர்ப்பொன்றினை எதிர்பார்க்கவில்லை. தேவாலயத்தின் முன் துவங்கிய யுத்தத்தின் எதிரொலி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்களை விழிப்படைய வைத்தது. அதனால் தேவாலயத்திற்குள் நுழைந்தவர்களை உடனடியாக அவர்களும் எதிர்த்து நிறுத்தத் தம்மை தயார் செய்து கொள்ள முடிந்தது. எனினும் தேவாலயத்திற்குள் ஒல்லாந்தர் பலர் படுகொலையுற நேர்ந்தது.

சிங்கள முதலியாரின் வீரர்கள் தோந்தெடுக்கப்பட்டிருந்தவர்கள். ஒல்லாந்த வீரர்களாலும் அவர்களாலும் சில பொழுதுகள் தாக்குப்பிடிக்க முடிந்தது. பிகாரூ கோட்டையின் ஏனைய பகுதிகளில் எதிர்பார்த்தபடி தாக்குதல் நிகழாதிருப்பதைக் கண்டான மனதில் கலக்கமும் வியப்பும் எழுந்தது கோட்டை மதில்களில் இருந்த வீரர்கள் தயக்கத்துடன் வெளியில் பார்ப்பதைக்கண்டான்.

அவர்கள் தயக்கத்திற்குக் காரணம் விரைவில் புரிந்தது

காலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பதில் கமாண்டர் ஜாக்கோப் வன் றீய் பருத்தித்துறைக்குச் செல்லவில்லை. இடைநடுவில் தனது பயணத்தை முறித்துக் கொண்டு வேகமாகக் கோட்டைக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தான் பயணத்தை இடைநடுவில் முறித்துக்கொண்டமைக்கான காரணம்அவனுக்குத்தெரியவில்லை. உள் மனதில் ஏற்பட்ட ஒரு இனந்தெரியாத எச்சரிக்கை அவனைக் கோட்டைக்குத் திருப்பவைத்தது

கோட்டைக்குள் அவன் வேகமாக நுழைந்தான். தேவாலயத்தின் முன்னும் உள்ளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பயங்கரச் சண்டையைக் கண்டான்

சில நிமிடங்களுள் சண்டை ஓய்ந்தது. பிகாரேவின் பக்கத்தில் பலர் படுகொலையுண்டனர் அவனும் பதினொரு பேரும் கைதுசெய்யப்பட்டனர் ஒல்லாந்தர் பக்கத்திலும் பலர் மடிந்திருந்தனர்

கமாண்டர் மிக்க ஆவேசத்துடன் பிகாரூவைப் பார்த்தான் அவர்கள் பன்னிரெண்டு பேரும் பயங்கரமாகத் தாக்கப்பட்டனர். மயங்கிவிழும் வரை அடித்து உதைக்கப்பட்டனர்.

இறந்தவர்களும் கைதானவர்களும்தான் இந்தச் சதிக்கும் கலவரத்திற்கும் காரணமானவர்களென கமாண்டர் கருதியதால் உடந்தையாக மாறவிருந்த ஏனையோர் தப்பிக்கொள்ள முடிந்தது

''இந்தத் துரோகிகளைச் சிறையில் அடையுங்கள். கொமுசாறி வன்கோயன் வருவதாகச் செய்திவந்திருக்கிறது. அவர் இந்தத் துரோகிகளுக்கு தண்டனை விதிப்பார்.''

கமாண்டர் ஜாக்கோப் வன் றீய் பயங்கரமான ஒரு சதியை முறியடித்த திருப்தியுடன் தனது மாளிகைக்குச்சென்றான் அவன் அன்று முக்கியமான பல கடமைகளைச் செய்யவேண்டியிருந்தது அவற்றினை நிறைவேற்றிவிட்டு ஓய்வெடுக்கலாம் என எண்ணியபோது ஒரு வீரன்வந்தான. ''இராசவாசல் முதலியார் அந்திராசி வந்திருக்கிறார். முன்னாள் கச்

(12ம் பக்கம் பார்க்க

# நடுத்தெரு வர்க்கம்

குணம்மாறாத ஆட்கள்
இருக்கும் வரைக்கும்
நிறம்மாறாத பூக்கள்
நாங்கள்!

சோறில்லாப்பானையுடனும்
கறியில்லாச் சட்டியுடனும்
கூரையில்லா வீட்டினில்
குந்தி இருந்து
ஒருகை ஓசை எழுப்பத்
துடிக்கும்
சுவர் இல்லாத சித்திரங்கள்
நாங்கள்

சீட்டுப் பிடித்துக்
குடை வாங்குவதற்குள்
மாரிகாலம் போய்விடுகிறது
காசு சேர்த்து செருப்பு
வாங்கும் முன்
கோடையும்
போய்விடுகிறது!

ஏனென்றால்......
நாங்கள் ஒரு
நடுத்தெரு வர்க்கம்!

குமார் தனபால்

வாசகர்களே, கடந்த பலவாரங்களாக உங்களை மகிழ்வித்த கடல்கோட்டை அடுத்த வாரத்தில் நிறைவுறவிருக்கிறது. பலர் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பியுள்ளீர்கள். அக்கதை பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள். செங்கை ஆழியான் அவற்றிற்குப் பதில் தருவார்.
ஆ-ர்

## இலக்கிய நினைவுகள்

மயிலங்கூடலூர் பி. நடராசன்

# செம்பியன் செல்வனின்

## 'ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள்'

கலாநிதி கைலாசபதியை எதிர்த்து மேடையிலே முழங்குவார். ஆனால் கைலாசபதியின் மிக நெருங்கிய நண்பர் சிறுகதையாசிரியர் டொமினிக் ஜீவாவின் கதைகளைக் காய்தல் உவத்தலின்றித் திறனாய்வு செய்து ஈவு இரக்கமின்றிக் கண்டனம் செய்வார். ஆனால், ஜீவாவின் இனிய நண்பர். 'செந்தி ஐயா' என்று மதிப்போடு கனக செந்திநாதனை அழைத்து அன்போடு பழகுவார். 960 களில் பல்கலைக்கழகத்திலே புவியியலைச் சிறப்பாகப் பயின்றபோது அதன்பின்னும் படைப்பிலக்கியத்திலும் திறனாய்விலும் 'நானே எனக்கு நிகர்' என்று கூறுவதுபோலக் கொடிகட்டிப் பறந்தார் 'பால்ராஜ்' முதலிய புனைபெயர்களுள் மறைந்துநின்று அவர் சாதனைகள் பல புரிந்து வந்தார். அவர் வேறு யாருமல்லர்; 'செம்பியன் செல்வன்' என்ற ஆ. இராசகோபால்அவர்களே.

### அக்கால நிலை

'ஈழத்தமிழ்ச்சிறுகதை மணிகள், என்ற செம்பியன் செல்வனின் நூலைப்பார்த்தபோது 1960 களில் நடைபெற்ற முற்போக்கு - நற்போக்கு - பிற்போக்குப் போர்களும் இலக்கிய இயக்கங்களும் கூழ்முட்டை எறி முயற்சிகளும் என்நினைவுகளில் அலையெறிந்தன இக்காலத்தில் 'காமஞ் செப்புதல்' என்பது இலக்கிய விமர்சனத்தின் தவிர்க்கமுடியாத நெறியாக இருந்தது. மூல இலக்கியங்களைப் பார்க்காமலே எழுத்தாளர் சார்ந்துள்ள கட்சிகளின் அடிப்படையில் அவற்றின் பண்புகளை வரையறுப்பதே இலக்கிய அளவுகோலாக இருந்தது. 'மகா கவியா? அவர் கொங்கைகளைப் பாடும் நசிவு இலக்கியக்காரர் அ. ந. கந்தசாமியா? அவர் முற்போக்கின் மூத்தபிள்ளை. எனவே அவருடைய இலக்கியம் நன்றாகத்தானே இருக்கும்' என்று மூல இலக்கியங்களை முழுமையாகப் படிக்காமல் தேவையை ஒட்டிக் கருத்துக்கூறும் நிலை அன்று ஒரு புறத்தில் மேலோங்கி நின்றது. மறுபுறத்தில் இழிசனர் வழக்கு, இழிசனர் இலக்கியம் என்று பண்டிதக் குரல் ஓங்கி ஒலித்தது. உண்மையில் ஆக்க இலக்கியத்தோடு குறிப்பாக நாவல், சிறுகதை, நவீன தமிழ்க் கவிதை என்பவற்றோடு தொடர்பற்ற மரபுவழித் தமிழ்ப் பண்டிதர்களும் நவீன தமிழ்ப் பண்டிதர்களுமே 'பல்கலைக்கழகப் பட்டதாரிகள்' இச் சித்தாந்தப் போரில் ஈடுபட்டிருந்தார்கள்.

### விவேகியில் ஆற்றிய பணி

இந்த நிலையில் 'கும்பல்' விமர்சனப் போக்குக்கு மாறாக படைப்பாளர்களைத் தனித்தனி முழுமையாக ஆராய்ந்து அவ்வாய்வில் கண்டறிந்த முடிபுகளின்அடிப்படையில் படைப்பாளிகளை இனங்காணும் முறையை கனக செந்திநாதன் வழியில் ஆனால் வரலாற்று முறையிலான கண்ணோட்டத்துடன் மேற்கொள்ள செம்பியன் செல்வன் முன் வந்தார். இதற்கு வாய்ப்பாகப் பதிப்புத் துறையில் பல புதுமைகளைச் செய்த மு வி. ஆசீர்வாதம் அவர்களைக் கௌரவ ஆசிரியராகக்கொண்ட விவேகி இதழின் ஆசிரியர் பதவி செம்பியன் செல்வனுக்குக் கிடைத்தது முதலில் அவர் செங்கையாழியானுடன் இணைந்தும் பின்னர் தனித்தும் விவேகி ஆசிரியராக இருந்தார் இக்காலத்திலேதான் [1966-1967] 'ஈழத்துச் சிறுகதை மணிகளை அவர் விவேகியில் தொடராக எழுதிவந்தார். இதுவே பின்னர் 1973ல் நூலுருப் பெற்றது. "பல பண்புகளில் பிற விமர்சகர்களின் கருத்துக்களுடன் இணக்கம் பெறும் நான் முக்கியமான சில பண்புகளில் முரண்படுவது சத்திய இலக்கிய வேட்கையினாலேயே அது மட்டுமல்ல, பல விமர்சகர்கள் ஆதார இலக்கியத்தை அணுகாமலே 'கர்ணபரம்பரையாக' இலக்கியப் பண்புகளின் தன்மையைக் கூறிவருவதாகவும் படுகிறது''-இதனாலேயே செம்பியன் இத் தொடரைத் தொடங்கினார்

இக்கட்டுரைகளை எழுதும் போதும் ஆசிரியர் மேல்நாட்டுச் சிறுகதை வரலாறு தமிழகச் சிறுகதை வரலாறு, பாரதச் சிறுகதை வரலாறு, ஈழத்துச் சிறுகதை வரலாறு, ஆகியவற்றின் பின்னணியில் ஆராய்கிறார் மூல இலக்கியங்களைத் தேடிப் பயிலும் முயற்சியிலீடுபட்ட செம்பியன் படைப்பாளிகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளுடன் குறிப்பிட்ட ஆசிரியரது கதைகளுள் சிறந்தது எனக் கருதப்படும் கதையையும் வெளியிட்டார். 'ஈழத்துச் சிறுகதை மூலர்' எனக் கருதப்படும் க தி சம்பந்தன் அவர்களின் சிறுகதைகளை விவேகி [ஆகஸ்ட் 1966] இதழில் சம்பந்தர் சிறுகதை மலராக வெளியிட்டார்.

இத்தொடரில் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான சி வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோரும் மறுமலர்ச்சிப் படைப்பாளிகளான வரதர், அ. செ. முருகானந்தம், தாழையடி சபாரத்தினம், அ ந கந்தசாமி ஆகியோருமாக ஏழு படைப்பாளிகளை ஆசிரியர் மதிப்பீடு செய்திருக்கிறார்.

இந்நூலில் "தமிழில் சிறுகதை; ஒரு வாயில்" என்ற தலைப்பில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ்ச் சிறுகதை வரலாறு ஆராயப்பட்டுள்ளது. ஈழத்துச் சிறுகதை வரலாறும் தமிழகச் சிறுகதை வரலாற்றுக்குச் சமாந்தரமாக ஆராயப்பட்டுள்ளது 16 பக்கங்களில் அமைந்த இக்கட்டுரை சிறுகதை வரலாறுபற்றியமுழுமையான எணணக்கருவொன்றை வாசகர் மனதில் ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

### நுணுக்கமான முடிபுகள்

சி. வைத்தியலிங்கம் பற்றிய முதலாவது கட்டுரை இலக்கிய அலை, பிதாமகர் இலக்கிய அரும்பு, பாரதி பரம்பரை, எந்தையும் தாயும், இலக்கிய வட்டம், கலைநோக்கு, கிராமத்தின் அழைப்பு, எண்ணமும் எழுத்தும், இலக்கிய அறுவடை, காலமும் கருத்தும், இலக்கிய நெஞ்சம் ஆகிய துணைத்தலையங்கங்களைக் கொண்டது. இவ்வாறே பிற ஆசிரியர்களும் பொருத்தமான தலைப்புக்களில் ஆராயப்பட்டுள்ளனர். விமர்சகரது கருத்துக்கள் கட்டுரை நாயகரின் கருத்துக்கள் ஆகிய அடிப்படை ஆதாரங்களில் மட்டுமன்றிப் படைப்புக்களை நுணுகி ஆராய்ந்து பெற்றமுடிவுகளையும் கொண்டு ஆசிரியர் தமது கருத்துக்களை வெளியிடுவது அவரது பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறது.

ஓர் இலக்கிய ஆசிரியனை அவனது சூழலும் அவனது கொள்கைளும் உருவாக்குகின்றன, இவற்றை விடுத்து விமர்சகன் தான் உருவாக்கி வைத்திருக்கும் அளவு கோலின் அடிப்படையில் படைப்பாளியை மதிப்பிட முயலுவது பயனற்றது. இவ்வாறு செய்யும் போது விமர்சகன் அடிக்கடி தன் கருத்துக்களை மாற்ற நேரிடலாம். கல்கி பாரதியையும் புதுமைப்பித்தனையும் மதிப்பிடும்போது இத்தகைய ஒரு தவறையே செய்தார். "தேசிய இலக்கியத்திற்கென முன்னின்றுழைத்த முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் பணிகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன வெனினும் முற்போக்கு இயக்கத்ினை எதிர்த்தோரின் முயற்சிகளை மூடிமறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை" என்று ஈழத்து விமர்சகர் ஒருவர் மன்னிப்புக்கோரும் பாணியிலே எழுதநேர்ந்தற்கும் இத்தகைய தவறே காரணமாக அமைந்தது. செம்பியன் தமது நூலில் இத்தகைய தவறைச் செய்யவில்லை என்பது போற்றத்தக்கது.

### எழுத்தாளர் எழுவர்

சி. வைத்திலிங்கம் முதல் அ ந. கந்தசாமி வரை ஏழு எழுத்தாளர்களே இந்நூலில் மதிப்பிடப்பட்டுள்ளனர். "இத்தொடரில் மேலும் பல முன்னோடிகள் இடம்பெற இருந்தார்கள். இன்றைய அச்சுக்கூலி, காகிதத் தட்டுப்பாடு என்பவற்றால் இந்நூலில் அது சாத்தியப்படவில்லை. அவர்கள் இத்தொடரின் இரண்டாம் பாகத்தில் முதலிடம் பெறுவார்கள் என்பதனை (சுவைஞனாகிய) உமக்கும் எழுத்தாளர் நண்பர்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்'' என 2-7-73 இல் 'மணிவாயி'லில் செம்பியன் உறுதி கூறினார் ஒரு தசாப்தம் முடிந்துவிட்ட போதிலும் செம்பியன் செல்வன் தமது உறுதிமொழியை நிறைவேற்றத்தவறிவிட்டார். 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' செம்பியனுக்கு ஏற்படவேண்டும் என்று சுவைஞனும் எழுத்தாளனும் விரும்புகிறார்கள். செம்பியனின் எழுதுகோல் தொடர்ந்து எழுதுமா?

இத்தகைய தனிப்பட்ட ஆசிரியர்கள் பற்றிய நுண்ணாய்வில்செம்பியன் மட்டுமல்ல வாய்ப்புள்ள பலரும் ஈடுபட வேண்டும் தனிநபர்களை மட்டுமன்றி சிறிய எல்லைகட்குட்பட்ட பிரதேசங்களிலும் இத்தகைய நுண்ணாய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யும் போது தான் 'ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு' ஒன்றை முழுமையாக உருவாக்கமுடியும். இதுவரை வெளியான இலக்கிய வரலாறுகள் பெரும்பாலும் அவசரக்குறிப்புக்களாகவும்பல்வேறுதேவைகளுக்காக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்புக்களாகவுமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமாற விமர்சகர்கள்பணியாற்றவேண்டும்


வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்
விசேட கட்டணம் லண்டன்
SPECIAL FARE TO LONDON

| | |
|---|---|
| ஒருவழிப்பயணம் | ரூபா 9250/- |
| SINGLE | Rs. 9250/- |
| இருவழிப்பயணம் | ரூபா 17500/- |
| RETURN | Rs. 17500/- |

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8.30 முதல் 4-30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30

★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும் (PASSPORT, VISA எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்பட மாட்டாது. இது சம்பந்தமான படிவங்களும் (APPLICATION FORMS) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

மக்கினேன்
டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154


# வறண்ட வலயங்களை வளம் கொழிக்கச் செய்வோம்

தன் கையே தனக்குதவி என்றும் தானே தன் கருமம் பார்த்தல் வேண்டுமென்றும், உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டை என்றும் சுய முயற்சியை நாடோடி வாக்கியங்கள் எமக்கு வற்புறுத்தும். நாம் வாழும் மணல் பூமி நீர்வசதி, மலைவசதியில்லாத வறண்ட வலயமாகும். நாமும் வானத்தைப் பார்த்துப் பூமியைத் தோண்டி வருடக்கணக்காக வாழ்ந்துவருகின்றோம். நமக்குப் பெரியப்பர், சித்தப்பர் உதவிகள் கிடைப்பதில்லை.

எங்களை வாழவைத்த பனையைப் பழையபடி பார்ப்போமாக. பனை அபிவிருத்தியே நமக்கு வற்றாத வரம்தரும்என்பது உறுதியாகிவிட்டது. வெளிநாட்டவர் பனம் பண்டங்களின் அருமையைச் சுவைத்துவிட்டார்கள். அவர்கள் எம்மிடை வந்து காணி வாங்கிப் பனந்தோப்பு உண்டாக்கமாட்டார்கள். நாமே எங்கள் பனையபிவிருத்தியை நெறிப்படுத்த முந்துதல்வேண்டும். இந்த முறை நவராத்திரி நாள்களில் பனையபிவிருத்தி நடைபெறுவதாருக. பனம் விதைகளைச் சேகரித்துக் கொடுத்தால் பரவலாக விநியோகம் செய்து நாட்டிப்பயன்படுத்துவதற்கு முழு உதவி செய்வதற்கு மில்க்வைற் தொழிலக வண்டி வாகனங்கள் என்றும் ஆயத்தமாக உள்ளன.

எண்ணெய் வகைகளில் விலையேற்றம் வியப்புக்குரியதாகிவிட்டது. தேங்காய் எண்ணெயின் இடத்தில் இலுப்பெண்ணெய் ஈடுசெய்ய இடமுண்டு. அது உடற்சுகத்துக்கும் உகந்தது. நாங்கள் திட்டமிட்டு இலுப்பை மரங்களை உடனடியாக எங்கும் உண்டாக்கலாம் தானே. தானே வளரும் இலுப்பை கோயில் வீதியெங்கும் நிழல் தருவதாக. வேம்பு வீதியோரங்களை நிழல் செய்வதற்கு நிரையாக நிற்பனவாகுக. இவற்றின் விதைகளை மில்க்வைற் கொள்வனவு செய்கிறது.

அடுத்துவரப்போகிற மழைக் காலத்துக்கு நாம் செய்யும் பெரிய வரவேற்பை இன்றே செய்தாக வேண்டும் இதோ மண்வெட்டிகள், தாச்சிச்சட்டிகள், குளங்களை ஆழமாக்கி நீரைத்தேக்க வாருங்கள்என்று கரம் கூப்பி அழைக்கிறார் மில்க்வைற் தொழிலதிபர். சேர வாருங்கள் உங்கள் சேவை உங்கள் ஊருக்குத் தேவை. வாரத்தில் ஒருநாள் சேவை, வருடம் முழுவதற்கும் போதுமானது. வாருங்கள் குளம் தோண்டி, மரம் நாட்டி வறண்ட வலயத்தை வளம் கொழிக்கச் செய்வோமாக.

— மில்க்வைற்

## வேண்டுவதோ வெடியோசை?

பட்டாசு கொளுத்திப்
பரவசம் அடைந்ததன்று
பட்டாசொலி கேட்டதுமே
பதறி விடுவதின்று
அடிவயிற்றில் புளிகரைத்து
அனைத்தையுமே கலங்க
வைக்கும்
இடிபோன்ற வெடி
கொளுத்த
இன்னும் ஏன் இந்தஆசை!

திருவிழாச் சடங்குகள்
தேரோடும் வீதிகள்
பெருவிழாவாகவே
கொண்டாட வேண்டும்
உண்மை,
விழாக்கள்சிறக்கஎனில்,
வெடிதானா வேண்டுவது?
கல்வி என்பர்
செல்வம் என்பர்
கற்றமக்கள் நாம் என்பர்
பண்பே எம் வடிவம்
பாரினிலே என்றிடுவர்
இன்று எம் நிலையில்

இந்த வெடி வேண்டுவதோ?
அன்றைய காட்டு வாசி
ஆகிடாரோ இவர் பண்பில்
மணவிழா என்றாலும்
பிணம் கொளுத்தும்
வேளையிலும்
வெடியோசை வேண்டுமாம்
இனியுமா எம்மவர்க்கு
வெடி கொளுத்தும் ஆசை?

ஜெ. ராஜேஷ்

## ஏழு பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

# தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!



இரவின் மௌன ஆதிக்கத்திலே அந்தச் சின்ன வீட்டிலுள்ள ஜீவன்கள் அனைத்தும் ஏதோ ஓர் ஆனந்த அமைதியிலே ஆட்பட்டு நித்திரையின் வசத்திலே நிறைவைக் கண்டு கொண்டிருந்தனர். ஆனால் அத்தகைய அமைதிக்குக் காரணமாயிருந்த மகேஸ்வரி மட்டும் உறங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள். எத்தனையோ இரவுகளை மூடாத விழிகளோடும் உறங்காத உள்ளத்தோடும் போராடிக் கழித்தவள்தான் அவள். இதயத்தைத் துளைக்கும் பெருமூச்சுக்களை — எத்தனையோ துயரங்களை — வெறும் மூச்சுக்களாகவே வெளியேற்றி வெற்றி கண்டவள் அவள். இன்று மனத்திலே தோன்றிய மகிழ்வின் உபாதையிலே உறக்கத்தை மறந்து போனாள். கண்களை மூடியதும் அதனுள்ளே நிழலாடும் அந்த அழகான உருவம்...

''ம்... அவர் நல்ல அழகுதான்...''

அந்த நினைவு அவளது கன்னங்களை அக்கணத்திலும் செம்மையாக்கிச் சூடாக்கியது. தனக்கும் ஒரு திருமணம் நிகழும் என்ற நினைவே இல்லாமல் இருந்த நேரத்தில் அன்றைய பெண் பார்க்கும் படலமும் அதன் முடிவாக அவளின் திருமணத் தீர்மானமும் இன்னும் கூட அவளால் நம்பமுடியாதவையாக இருந்தன

''அடேயப்பா... இன்னும் சிலநாளிலை நான் திருமதி மகேஸ்வரி நித்தியானந்தன்...''

நீண்டநேரமாக அந்தப் பெயரைத் தன் பெயரோடு இணைத்து இரகசியமாகச் சொல்லிச் சொல்லி அதன் சுவையிலே தன் சுமைகளை மறந்து இறுதியில் விடியற்போதில் உறங்கிப் போனாள் அவள்.

வழக்கமான அந்தக்கட்டிடங்களும் அந்த வறண்டபடிகளும் இன்று அவளிடம் ஒரு புது மகிழ்வைத் தோற்றுவிக்க இதயம் இனிமையான கற்பனைகளில் அமிழ்ந்து போக அந்தப் பாடசாலைப் படிகளில் மகேஸ்வரி மௌனமாக ஏறிக்கொண்டிருந்தாள்.

முன்னரெல்லாம் எழுந்து வீட்டின் வறண்ட சூழ்நிலையிலிருந்து விடுபட்டு அவள் பாடசாலைக்கு வருவதற்குள்ளே அவளுக்கு வாழ்க்கையே வெறுத்துவிடும் நேற்றுக் கழற்றிவைத்த செருப்பு அடுப்படியிலும் மடித்து வைத்த சாறி தலையணைக்கடியிலுமாக அவளது உடன்பிறப்புக்களின் விளையாட்டிற்கு முன்னே அவளது பொறுமை அநேகம் தடவைகளில் அதன் எல்லையைத் தொடவைத்து விடும் ஆனாலும் என்ன செய்வது? எவ்வளவுதான் கோபம் வந்தாலும் 'எல்லாம் என்ரை தலை விதி' என்று தன்னைத்தானே திட்டிக் கொள்வதிலேயே அவள் திருப்தியும் கண்டுகொள்வாள்.

நித்தியானந்தன் குடும்பத்தினர் போனதும் கவனமாகக் கலைத்துவைத்த அந்தச் சாறியை பல முறை நீவிவிட்டுப் பவ்யமாக அணிந்து கொண்டாள். வேலியில் செருகிவைத்திருந்த கண்ணாடியில் முகம் பார்த்தபோது அந்த முகத்தினருகே காரணமில்லாமல் நித்தியானந்தனின் முகமும் தெரிவதுபோல் தோன்றியது. எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அவள் பாடசாலையை அடைந்தபோதும் நேரம் எட்டுமணிதான் முன்னைய நாட்களென்றால் வேர்த்து விறுவிறுத்து எப்படிப் போனாலும் எட்டரைக்கு மேலாகிவிடும் அதற்கென்றே இருந்ததுபோல். ''என்ன மகேஸ், ஒம்பது மணியாகுது. இரவெல்லாம் என்ன வேலை?'' என்று இரட்டை அர்த்தத்தில் அதிபரின் கிண்டல் வேறு தவறாது ஆனால் இன்று அவள் பாடசாலையை அடைந்தபோது, ''குட்மோர்னிங் ரீச்சர்'' என்று மாணவ மாணவிகளும் சக ஆசிரியர்களுமே அவளைச் சற்று வினோதமாகத்தான் நோக்கினார்கள் அதற்கு மேல் காரணம் கேட்க யாருக்குமே துணிவில்லை. அதிகம் பேசாத அவளுடைய போக்கினால் 'சிடுமூஞ்சி' என்ற பட்டமும் அவளுக்கு இருந்தது.

இன்னும்வகுப்புத்தொடங்க நேரமிருந்ததால் மாணவ மாணவிகள் அங்குமிங்குமாக அலையும்போது மகேஸ் தனது வகுப்பறையில் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தாள். அவளது எண்ணங்களும் வேகமாகப் புரண்டு கொண்டிருந்தன.

'இன்னும் கொஞ்ச நாளிலை என்ரை கலியாணம் பற்றி எல்லோருக்கும் தெரிஞ்சிடும் அதுக்குப்பிறகு ஒருத்தற்றை கதைக்கும் பயப்பிடத் தேவையில்லை.'

மலன் கடிதம் எழுதிக் கொடுத்த கதையை அதிபர் பரவலாக வேறு பாடசாலைகளுக்கும் பரப்பிவிட்டிருந்தார் அதற்கெல்லாம் முற்றுப்புள்ளியாகத் தன் திருமணம் அமைந்து விடுமென்று அவள் நம்பினாள்.

'இந்தக்கிழட்டுச்சனியன்ரை தொல்லையிலிருந்தும் விடுபட்டிடலாம்' என்ற ஆழ்ந்த நிம்மதியில் அவளுக்கு அன்றைய பொழுது மிக ரம்மியமாகக் கழிந்தது.

அன்று வீட்டில் ஆச்சிபெரிய குரலெடுதது அப்புவைத் திட்டிக்கொண்டிருந்தது ஏதேதோ சுகமான கற்பனையில் ஆழ்ந்திருந்த மகேஸ்வரியின் மோனத்தையும் கலைத்து அக்கம்பக்கமெல்லாம் எட்டியது.

''தம்பி நித்தியானந்தன் வீட்டிலை இருந்து சொல்லி அனுப்பியிருக்கினம். நாள் வைக்கிறதைப் பற்றிக்கதைக்க நாளைக்கு வருகினமாம். நாளைக்கெண்டாலும் உந்த நாசமறுந்தகுடியைவிட்டுப்போட்டு வெள்ளெனை வந்து பேசவேண்டியதுகளைப்பேசிமுடியுங்கோ... குனிஞ்ச தலை நிமிராத பெட்டை என்ரை பெட்டை. நான் வேண்டாம் வேண்டாமெண்ணக் கேக்காமல் கூலி வேலைக்குப் போய் தன்ரை பேரை வீணுக்கெடுக்கப் பாத்தாள்... ஏதோ எல்லாம் நல்ல மாதிரி முடிஞ்சிடவேணும்... வைரவசுவாமி... நீதான் இதுகளை ஒப்பேத்தி வைக்க வேணும்...''

-ஆச்சி உச்சக்குரலில் பேசித் தீர்த்தாள். அப்புவின் குடி அன்று அளவில் குறைந்ததற்கடையாளமாய், ''சரி, சரி ஏனப்பா இப்பிடி எட்டுவீடு கேக்கக் கத்திறாய் நாளைக்கு நான் வடிவாப் பேசி எல்லாம் முடிக்கிறன். இப்ப சாப்பாட்டைப் போடு'' என்று மிகப்

## ராஜலட்சுமிகுமாரவேல்

பெரிய அதிசயமாய் நியாயத்தை உணர்ந்து பேசுகிறார். இல்லையென்றால் அவர் சத்த தொடர்ந்து ஆச்சிசத்த மொத்தத்தில் மற்றவர் எல்லாருக்கும் சிவராத்திரியாகவே இருக்கும் அன்று.

தனது திருமணம் எவ்வளவு தூரம் குடும்பத்தவர் மனங்களை மென்மையாக்கியிருக்கிறதென்பதை நினைக்கிறபோது மகேஸ்வரிக்குப் பெரிய ஆச்சரியமாகத்தான் இருந்தது.

'வறுமை இந்தக் கொடிய வறுமைதான் மனுசற்றை உணர்ச்சியளை எவ்வளவுதூரம் மாத்திவிட்டிடுது...'

'பணமும் அந்தஸ்தும் வந்துவிட்டால்... எல்லா நல்லகுணங்களும் வந்துவிடுமா?'

—தனக்குள்ளேயே நீண்ட நேரம் பேசிக்கொண்டவள் அன்றும் புதுவித உணர்ச்சிக் கீறல்களால் எண்ணங்களின் சுமைகள் வண்ணவண்ணக் கனவுகளாக வடிவம்பெற நீண்டநேரம் நித்திரையில்லாத விழிகளோடு போராடினாள்.

இப்போதெல்லாம் அப்புவின் கத்தலோ ஆச்சியின் அழுகையோ அவளுக்கு அவ்வளவு ஆத்திரத்தைத் தருவதில்லை. திருமணம் மகிழ்வாகிப்போன தன் பின்னர் மகேஸ்வரிக்குஎல்லாமே மகிழ்வாகத்தான் தோன்றின. சில நேரங்களில் தனது கடைசித் தங்கையைக் கையில் தூக்கிக் கொஞ்சக்கூடத் தொடங்கிவிடுவாள்.

'என்ரை கலியாணத்துக்குப் பிறகு அவரின்ரை அனுமதியோடை இந்தப் பரிதாபமான குடும்பத்தைத் தான்பராமரிக்க வேணும்? என்றும் அடிக்கடி எண்ணிக்கொள்வாள்.

கடந்த ஒருவார காலமாகவே அதிபரின் கீழ்த்தரமான பார்வையில் கூட ஒரு பண்பு நிரையிட்டிருப்பது போல ஒரு நினைவு.

'ஒரு வேளை என்ரை கலியாணத்தைப் பற்றி இவருக்கும் தெரிஞ்சிட்டிதோ? அதுவும் நல்லதுக்குத்தான்...' என்று ஆறுதல்பட்டுக் கொண்டாள்.

# 8

முன்பெல்லாம் அவளைக் கண்டாலே பார்வையாலேயே நிர்வாணமாக்கி விடுபவரல்லவா அவர்?

'ஏதோ மனிசத்தன்மை வந்திட்டுதுபோலபடக்கு' என்று அவள் அவரைப்பற்றிக் கணிப்பிட்டிருந்த போது ஒருநாள் அவளும் அதிபரும் மட்டுமே ஆற்ற வேண்டிய ஒரு கடமை சம்பந்தமாக இருவரும் அலுவலக அறையில் தனித்திருக்க நேர்ந்தது அதிகமான வேலைப் பழுவின் நடுவிலும் திடீரென அந்த நக்கல் சிரிப்போடு அவர் கேட்டார்.

''என்ன மகேஸ்... கலியாணவீடாம்... இனிமேல் நாங்களெல்லாம் கண்ணிலை தெரிய மாட்டம்... என்ன?''

மகேஸ்வரி அவரது கேள்வி காதில் ஏறாதவள் போலத் தன்வேலையைத் தொடர்ந்து கொண்டிந்தாள்.

''நானும் ஒரு கிழமையாப் பாக்கிறன் நீயென்னை நிமிந்து கூடப்பார்கிறேல்லை... என்ன, மாப்பிள்ளை லண்டன் மாப்பிள்ளையோ!'

-அவர் மீண்டும் சீண்டினார்.

''ஒரு கிழமைக்கு முந்தி உன்னைத்தான ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டு திரிஞ்சனான்...''

அவள் மனத்திறகுள் நினைத்துச்சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பிற்கு வேறு அர்த்தம் செய்து கொண்டவர் அந்தத் தனிமையைப் பயன்படுத்தும் நோக்கில் அவளின் சேலைக்கும் பிளவுசுக்கும் இடைப்பட்ட அந்த நான்கு விரலகல இடையின் சதைப் பகுதியில் தன் கரங்களை ஆசையோடு பதிக்க முயற்சித்தார்.

''ஓ!'' - அருவருப்போடு அவள் அவர் கரத்தைத் தட்டிவிட்டு நகர்ந்து கொண்டாள். அவளுக்குள் பெரிதாக ஆத்திரம் பொங்கியது.

'இவன் என்னதான் நினைச்சுக்கொண்டிருக்கிறான் என்னைப்பற்றி நாசமாப்போனவன் காமப்பிசாசு...''

மனதிற்குள்ளே திட்டிக்கொண்டு மறுபடியும் மௌனமாக அவள் வேலையில் ஆழ்ந்தபோது அவளின் அந்த

(12ம் பக்கம் பார்க்க)

## குட்டிக்கதை

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக்கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது ஓர் ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக்கொண்டே வந்தது. யானை ஓர் ஓரத்தில் ஒதுங்கிநின்று அதற்கு வழிவிட்டது.

### அடக்கம்

அந்தப்பன்றி, எதிரே வந்த இன்னொரு பன்றியிடம் ''பார்த்தாயா, அந்தயானை என்னைக்கண்டு பயந்து விட்டது'' என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து, இன்னொரு யானை ''அப்படியா? நீ பயந்து விட்டாயா?'' என்று கேட்க, அந்தக்கோவில் யானை கீழ்க்கண்டவாறு பதிலளித்தது:

''நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என்மேல் விழுந்துவிடக்கூடாதே என்று ஒதுங்கினேன். நான் ஏறி மிதித்தால் அது துவம்சமாகிவிடும். ஆனல் என் கால் அல்லவா சேறாகிவிடும்?''

என்னெஸ்




★ தொகுப்பு: என். செல்வராஜா

# காவலன் யுக்தி

மகதநாட்டின் அரசன் மணிவண்ணன், சொன்ன சொல் தவறாதவன் அவனை அவ்வூர் மக்கள் மிகவும் நன்ருக மதித்து வந்தனர். கண்டிப்புக்குப் பெயர்பெற்ற அவ்வரசன் ஒருநாள் வீதிவழியே உலாவந்தான். அவ்வூர்த் தெருக்களில் தன் காவலாளிகள் ஒழுங்காகக் காவல் காக்கின்றனரா என்று அவதானித்தபடியே நடந்துவந்துகொண்டிருந்தான்.

மூன்றுவது தெருவுக்கு அரசன் வந்தபோது அங்கிருந்த தெருநாய் ஒன்று ஒரு சிறுவனைக் கடித்து காயப்படுத்திவிட்டது. அந்தத்தெருவின் காவலாளி அந்நேரம் எங்கோ போய்விட்டிருந்தான். அரசன் வந்திருந்த சேதி அறிந்ததும் காவலன் ஓடோடிவந்தான். அரசன் மணிவண்ணனுக்கோ அவனைக்கண்டதும் பெருங்கோபம் மூண்டது. கடமையில் கவனமில்லாமல் அவன் இருந்தமைக்குத் தக்கதண்டனை கொடுக்க எண்ணினன்.

காவலனை நோக்கி ''காவலா! இச்சிறுவனைக்கடித்த அந்தத் தெருநாயை உடனடியாக நீ கொல்லுதல் வேண்டும். அதை எப்படி நீ கொல்லுவாயோ அப்படியே உன்னையும் நான் பின்பு கொல்லுவேன். கடமையை மதியாத உனக்கு இதுவே என் தண்டனை'' என்று கர்ச்சித்தான்!

காவலனோ சகிலங்கி நின்ருன் ''ஐயோ! நான் என்ன செய்வேன்? என் வாழ்வு ஒரு தெருநாயால் முடியப்போகிறதே'' என்று ஏங்கித் துடிதுடித்தான். அந்த அரசனோ பொல்லாதவன் சொன்ன சொல்தவருதவன். சேவகனின் மூளையில் திடீரென்று ஒரு உபாயம் உதித்தது.

அவன் ஓடோடிச் சென்று அந்தத் தெருநாயின் வாலைப் பிடித்து ஒரே இழுவையாக இழுத்து ஓங்கி நிலத்தில் அறைந்தான். ஒரு அடியிலேயே அந்தத் தெருநாய் தன் சீவனை விட்டுவிட்டது.

என். எச். தினேஷ்

காவலன் அரசன் முன் சென்று மண்டியிட்டு அமர்ந்தான் ''மன்னு! தாங்கள் கட்டளையிட்டபடியே நாயைக் கொன்றுவிட்டேன். தங்கள் சித்தப்படி இனி எனக்கு மரண தண்டனை வழங்குங்கள்'' என்ருன்

காவலனின் சமயோசித புத்தி மன்னனை வெகுவாகக் கவர்ந்தது நாயை எப்படி அவன் கொன்ருனே அப்படியல்லவா அவனையும் கொலை செய்வதாக மன்னன் கூறினன். நாயின் வாலைப்பிடித்து அடித்துக்கொலை செய்தது போல் சேவகனின் வாலை அல்லவா பிடித்து அடித்துக்கொலை செய்யவேண்டும். சேவகனுக்கு எங்கே வால் உள்ளது! அவன் மனிதனல்லவா! எனவே மன்னனல் அவனுக்கு மரணதண்டனை வழங்கமுடியாது.

இதைப்புரிந்து கொண்ட மன்னன், காவலனை மன்னித்து அவனுக்கு உயர் பதவியும் வழங்கி அவனது சமயோசித புத்திக்கு மதிப்பளித்தான்

## சொல்லுங்கள் பார்க்கலாம்

1. ஒருவர் தன் வேலைக்காரனிடம் பேப்பர்கொண்டுவா என்ருர். பின்னர் பேனை கொண்டுவா என்ருர். பின்னரும் ஒன்றைக் கேட்டதற்கு ஒட்டகம் கொண்டு வந்தானும். அவர் என்ன கேட்டிருப்பார்?

2. பழுத்தாலும் காயாக இருப்பது என்ன?

விடை: 1. ஒட்ட 'கம்' கொண்டுவா என்ருர். (கம்-Gum-பசை)
2 தேங்காய்.

—சசிதேவி,
யாழ்ப்பாணம்

## பள்ளிப் பகிடி

ஜனு: நான் முட்டாள் என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்கிருயாமே!

தீபன்: கிடையாது, எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தை ஏன் சொல்லப் போகிறேன்.

# சக்தியை வணங்குவோம்

இறைவனை தாயாக வழிபடுகின்ற வழக்கம் பெண்மைக்கோலத்திலே தரிசிக்கின்ற வழிபாட்டு முறை உலகம் தோன்றிய நாள் முதல் எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் இந்துக்கள் இவ்வழிபாட்டுக்கு சிந்துவெளி நாகரிக காலமாகிய இற்றைக்கு 5500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண்தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிருர்கள். சக்தியை பெண்ணுக வழிபட்டு கடைப்பிடிக்கும் சமயம் சாக்தம் எனப்பட்டது.

இறைவனின் சக்தியாகிய அம்பிகையை வழிபடுவதற்கு நம் பண்டைய இந்துமக்களால் வகுக்கப்பட்ட நற்றினங்கள் இந் நவராத்திரி காலமாகும். அகிலத்தை எல்லாம் காக்கும் ஆண்டவனை தாயினும் நல்ல தலைவன் என்றும் தாயினும் சாலப்பரிந்தவன் என்றும் அடியார்கள் போற்றுகின்றுர்கள். அகிலாண்ட நாயகியை சகல சீவதயாபரியை நம் அன்னையை வழிபடுவதற்கு உகந்த நாள் கன்னிமாதமாகிய புரட்டாதி பிரதமை முதல் தசமி ஈருக உள்ள நாள்கள் மிகவும் உகந்தனவாகும். நவராத்திரி என்ருல் (நவம்-ஒன்பது—ராத்திரி-இரவு) ஒன்பது இரவுகள் என்று பொருள்படும். நவம் என்ற சொல்லுக்கு புதுமை என்றும் பொருள் உண்டு. எனவே இப்புதுமையான ஒன்பது தினங்களையும் நாம் பக்தி உணர்வோடு பகிர்ந்து பின் வருமாறு கொண்டாடுகிறும்.

முதல் மூன்று நாட்களிலும் எமக்கு ஓர் உறுதி தரவேண்டும் என்று பராசக்தியை வீரத்தாயாக வழிபடுகிறும் அந்த வீரஅன்னைக்கு துர்க்கை என்று பெயர். விரித்த சடையுடன் வாள் வீரவேல் குலிசம் தாங்கி கோபக்கனல் சிந்தியவளாய் இருக்கின்ற துர்க்கை எமக்கு உடல் உள உறுதிகளைதர வல்லவள். அடுத்த மூன்று நாள்களும் செல்வத்துக்கு அரசியாகிய செங்கமலச் செல்வி மகாலக்ஷ்மியை வழிபடும் நாள்கள் அவளை உள்ளன்போடு வழுத்திஞல் நாம் பெறற்கரும் பொருள்செல்வத்தைப் பெறலாம். திருக்குறளை தந்த வள்ளுவர்கூட ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை'' என்று கூறுவதான் மூலம் பொருட்செல்வத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் தற்காலத்தில் நிலவும் பணம் பந்தியிலே குணம் குப்பையிலே பழமொழி கூட பொருள் செல்வத்தின் தேவையை கூறுகிறது. இறுதி மூன்று நாள்களும் கல்விக்கரசியாகிய சரஸ்வதி தேவியை வேண்டு வழிபடும் நாள்கள் சகலகலாவல்லியாகிய அவளின் கடாட்சம் நமக்கு கிட்டுமாஞல் நமக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்றும் கல்வி இல்லாதவன் கண்கள் இருந்தும் குருடன் என்றும் சொல்லப்படுவதால் கல்வியின் பெருமையை அறியலாம். மாணவராகிய நமக்கு இன்றைய தேவையாகிய கல்வியை பெறுவதற்கு வெண்டாமரை வாணி அருளை வேண்டி துதிப்பதற்கு இந்த பூசை நாள்கள் என்று உணர்ந்து ''கலைவரம் தருவாய் தாயே'' என்று அவள் அருளை வேண்டுவோமாக.

செல்வி
முருகையா விஜிதா,
வகுப்பு 9D
இராமநாதன் கல்லூரி
சுன்ஞகம்.

## நீங்களும் பாடலாம் [4]

'நீங்களும் பாடலாம்—4' பாடலை நிரப்பி ஏராள மாணவர்கள் அனுப்பியுள்ளதால் அவற்றைப் பரிசீலித்து அறிவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சரியாக நிரப்பி அனுப்பியவர்கள் பெயர் விபரம் நிச்சயம் அடுத்தவாரம் வெளியிடப்படும். இதில் பங்கு கொண்ட அத்தனை பேருக்கும் நன்றி உரித்தாகுக.

# மந்திர வித்தை கற்போம்

நீங்கள் மந்திர வித்தை பார்க்கச் சென்றிருக்கிறீர்கள் மந்திர வித்தைக்காரர்உங்களை மேடைக்கழைக்கிருர் உங்களிடம் சீட்டாட்டத்திற்கு பாவிக்கும் சீட்டுக்கட்டொன்றை தருகிருர். சீட்டுக்களை நன்ருகக் கலந்து தரும்படி பணிக்கிருர். நீங்களும் மிக அவதானமாக மேல் கீழாகக் கலந்து அவரிடம் கொடுக்கின்றீர்கள். அவர் தன் பையிலிருந்து சீல் வைக்கப்பட்ட ஒரு கவரை எடுத்து சீட்டுக்கட்டின் மீது வைக்கிருர் உங்களை அதை எடுத்துப்பரிசோதித்துப் பார்க்கச் சொல்கிருர் நீங்களும் மிக ஜாக்கிரதையாகப் பார்த்து நாலு புறமும் ஒட்டப்பட்டிருப்பதை கூறுகிறீர்கள்

அவர் பின்னர் ''தம்பி தங்கைகளே! இந்தச் சீட்டுக்கட்டில் உள்ள ஒரு சீட்டின் பெயரும் இலக்கமும் இந்தக் கவரினுள் எழுதப்பட்டுள்ளது சீட்டுக்கட்டிலிருந்து அதை இலகுவாக எடுத்துத்தருவேன்'' என்று கூறுகிருர். நீங்களும் ஆவலுடன் அவரைப்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அவர் ஏதோ மந்திர வார்த்தைகள் சொல்லி கைச்சாடை செய்து பின் கவரையும் ஒரு சீட்டையும் எடுத்து உங்களிடம் நீட்டுகிருர் நீங்கள் கவரை உடைத்துப்பார்க்கிறீர்கள். என்ன அதிசயம்! கவரில் எழுதியுள்ள விபரங்களைக் கொண்ட சீட்டே உங்கள் கையிலும் உள்ளது!

## இந்த மந்திரவித்தை

## எப்படிச் செய்வது?

மந்திரவித்தைகாட்சி ஆரம்பமாகும் முன்னரே மந்திரவாதி சீட்டுக்கட்டிலிருந்து ஒரு சீட்டை எடுத்து அதன் இலக்கத்தை குறித்து கவரினுள் வைத்து ஒட்டிவிடுகிருர். பின் காட்சி ஆரம்பமானதும் உங்களிடம் சீட்டுக்கட்டைத் தருகிருர் அந்தச் சீட்டினுள் கவரில் குறிப்பிட்ட சீட்டு இராது நீங்கள் சீட்டுக்கட்டை குழப்பி கலந்து விட்டுக்கொடுத்ததும் அவர் கவரை சீட்டுக்கட்டின் மேல் வைக்கிருர் அல்லவா! அப்போதுதான் அந்த ரகசிய வேலை நடக்கிறது.

கவரை சீட்டுக்கட்டின் மீது வைக்கும்போது ரகசியமாக கவரின் கீழ் ஏற்கனவே அவர் மறைத்து வைத்த சீட்டையும் நாசூக்காக வைத்துவிடுவார் பின்கவரை எடுத்து உங்களிடம் பரிசோதித்து தரும்போது மறைவாக வைத்த சீட்டு மற்றைய சீட்டுக்களின் மேலாக இருக்கும் பிறகென்ன அவர் இலகுவாக உங்களுக்கு கவரையும் மேலாக இருக்கும் சீட்டையும் எடுத்துத்தருவார். இதுதான் தந்திரம்.

## எழுத்தில் ஒரு புதிர்

[1] எந்த எழுத்து இரக்கும்?
[2] எந்த எழுத்து உசுப்பும்?
[3] எந்த எழுத்து உமிழும்?
[4] எந்த எழுத்து எழுத உதவும்?
[5] எந்த எழுத்து எழுதும்?
[6] எந்த எழுத்து சுடும்?
[7] எந்த எழுத்து பறக்கும்?
[8] எந்தஎழுத்து பொருட்களைப் போட்டுக்கொள்ள உதவும்
[9] எந்த எழுத்து மணக்கும்?
[10] எந்த எழுத்து வாயைப்பிளக்கும்?
[11] எந்த எழுத்து ஏட்டில் இல்லை?

விடை:
[ ] தா [2] சூ [3] தூ
[4] மை [5] கை [6] தீ
[7] ஈ [8] பை [9] பூ
[10] ஆ [11] தலை எழுத்து.

## ஐயோடா!

பூவின் மீது வண்ணத்திப்
பூச்சி ஒன்றடா — அதைப்
பிடிக்க எண்ணித் துணியை மேலே
போட்டேனேயடா

என்னை அதுவும் ஏய்த்து விட்டுப்
பறந்து போச்சடா — உடன்
எனது துணியை வேகமாக
இழுத்தேனேயடா

செடியில் மாட்டிக் கொண்டு துணியும்
கிழிந்து போச்சடா — இது
தெரிந்து போனுல், அப்பா என்னை
அடிப்பார் ஐயோடா!

## நீங்களும் பாடலாம்—5

பாதாளம் வரைபாயும் பணம்
பணத்திற்காய் வாய் திறக்கும் ———
பாராமல் உணர்ந்திடலாம் ———
பாரினிலே மனிதன் உயர் ———

வாழ்வை வளம் ஆக்குவது நிதி
வாழ்ந்திட வழி காட்டிடும் உன் ———
பாழ் மனதால் செய்வார் சிலர் ———
சூழ்நிலையால் கெடுவது சிலர் ———

எண் சாண் உடம்பதற்குப் பிரதானம் தலையே
வெண் நுரையாய் கால் தழுவி மீழும் கடல் ———
மண்ணில் நல் வண்ணம் உயிர் வாழ்வதும் ஓர் ———
அன்னை அவள் அன்பிற்கு ஈடு இணை ———

கல்யாண வீட்டினிலே கிடைத்திடும் பலகாரம்
சலவைத்துணி மேலே நாம் தேய்ப்போம் ———
காலத்தை அறிந்திடவே பார்த்திடு ———
சோலை மலர் மீதிருந்து வண்டார் ———


பெயர்:......................................

முகவரி:......................................

......................................

......................................

கவிதை நாடகம்



# தருமத்தின் குரல்

காரை. செ. சுந்தரம்பிள்ளை

(முன் தொடர்ச்சி)

## காட்சி 1

(அங்கம் 2 )

இடம்; சத்தியபுரி அரண்மனை
நேரம்: காலை

(பெண்ணொருத்தியை நோக்கி)
அரசன்;

அம்மையே நீயார்? அக்கிரன் உனக்கும்
இன்னல்கள் செய்தால் எனக்கதைச் சொல்க
தன்னல மற்ற தாய்க்குலம் வருந்தச்
செய்பவர் சிறியர் தீயிலும் கொடியர்

பெண்;

மாபெரும் மன்னு! மனக்குறை தீர்க்கும்
தேவரை யொத்த திருநிறைச் செல்வா
பிறப்பதே பாவம் பிறந்து விட்டாலோ
பெண்ணுய்ப் பிறப்பது அதைவிடப் பாவம்
பெண்ணுய்ப் பிறக்கினினும் பெற்றேரில்லாத
பெண்ணுய் வளர்வது மிகமிகப் பாவம்
அதைவிடப் பாவம் அன்புடன் மணந்த
கணவனில்லாது காலந் தள்ளுதல்
கணவனில்லாது காலந்தள்ளினும்
மகனின்றி வாழ்தல் மாபெரும் பாவம்

அரசன்:

அன்னையே உள்ளம் ஆறுதலடைக
உன்துயர் யாது உணரக்கூறுக

பெண்:

காவல என்பெயர் கண்மணியாகும்
ஆத்தூர் தனியே ஆதவன் என்னும்
வீரனை மணந்து விறல்மிகு மைந்தன்
அதிகனைப் பெற்ற அன்னையான் ஐயா
கணவனைச் சிறிய வயதினில் இழந்தேன்
மணந்தவன் மறைந்த மனக்குறை தீர
மகனுளன் என்றே மகிழ்ச்சியான் கொண்டேன்

மகனே உயிராய் மகனே வாழ்வாய்
மகனே யாவுமாய் வாழ்ந்திட லானேன்
சிற்றேவல் செய்தே சீவியம் நடத்திக்
குற்றமில் மகனைக் கற்றிட வைத்தேன்

அன்புள்ள மைந்தன் அதிகனும் வித்தையில்
தன்னிகரற்றுத் தலை சிறந் திட்டான்
எல்லாக் கலையிலும் வல்லவ ணுகி
நல்லோர் புகழும் நற்குணசீல ஞய்த்
திகழ்ந்ததைக் கண்ட தேசத் துள்ளார்
மகிழ்ந்தனர் இவனை மன்னனும் அறிந்தான்
அறிவிற் சிறந்தோன் மக்கள் யாவர்க்கும்
உரியவன் என்றே உவப்புடன் அழைத்தான்
அரசபை தனிலோர் அதிகாரி யாக்கினன்

நாட்டை வளர்க்கும் நற்பெருந் திட்டம்
போட்டுக் கொடுத்தே புதுவழி காட்டும்
அதிகாரி யானன் அல்லும் பகலும்
வரவொடு செலவை வகுத்தா ராய்ந்து
பொருளைப் பெருக்கப் புத்திகள் சொல்வான்
தேவைகள் அறிந்தே செலவுகள் செய்யவும்
தேவை யிலாதவை யாவையும் நீக்கவும்
அறிவுரை கூறி அரசை வளர்த்தான்

ஆற்றிலே கரைத்த புளியினைப் போலும்
சேற்றிலே யூற்றிய பாலினைப் போலும்
நாட்டின் பொருளை நாசமே செய்தோர்
காட்டிய பொய்மைக் கணக்குகள் யாவையும்
அம்பலப் படுத்தி அரசர்க் குதவினன்

கள்ளக் கணக்குகள் காட்டிக் காட்டிக்
கொள்ளை யடித்தோர் குமுற லாயினர்
இத்தனை காலமும் ஈடிணை யற்ற
உத்தமராக ஊரிலே வாழ்ந்தோம்
கைலஞ்சம் பெற்ற கயவர் களாகவும்
அரசை ஏமாற்றிய துரோகிக ளாகவும்
அதிகனே எம்மை அம்பலப் படுத்தி
மதிப்பிலா ஊழல் மன்னர்கள் ஆக்கினன்

இப்படி இவர்கள் ஆத்திர முற்றே
எப்படி யேனும் இவனை யொழிக்கத்
திட்ட மொன்றைத் தீட்டிட லாயினர்
என்மகன் திறமையில் பொறுமையே கொண்ட
புன்மதி படைத்த புல்லர்கள் சிலரும்
தீயர்கள் போட்ட திட்டத்திற் குதவினர்

அரசனிடம் போய் அடிக்கடி யிவர்கள்
இவனைப் பற்றி யில்லாத பொல்லாத
குறைகளைச் சொல்லிக் கோள் மூட்டலாயினர்

மன்னு நீங்கள் மதுவை அருந்திஞல்
பெண்களை விட்டுப் பிரியீர் என்கிறுன்
பொன்னைப் பொருளைப் புழுதியாய் வீசி
மதுவொடு மாதுக்கு இறைக்கிறுய் என்கிறுன்

தேவை யில்லாத செலவெலாம் செய்தே
தேசத்தை நாச மாக்குறுய் என்கிறுன்
பட்டங்கள் பதவிகள் உறவினர்க் கன்றி
மற்றவர்க்கு நீ வழங்குவ தில்லையாம்
அப்பனைப் போல மைந்தன் நீ என்றே
எப்பவும் செப்புதல் இவன் வழக்கென்றுர்
அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும்
அடிக்கடி கூறினல் அவன் அசையானு
(அழுதல்)

அரசன்:

தாயே உந்தன் சஞ்சலம் விடுத்து
நடந்ததைக் கூறுக நன்மையே கிடைக்கும்

கண்மணி:

ஆத்தூர் அரசன் அவசரக் காரன்
மூத்தோரை கூட மதிக்காத மூடன்
இளையவனன இவனையா மதிப்பான்
ஆத்திர முற்ற அக்கிரன் ஒருநாள்
அவைமுன் அதிகனை அவமானப் படுத்திச்
சபையி லிருந்து தள்ளியே விட்டான்

மந்திரி:

அதிகனின் அருமை தெரியாத மூடன்
மாதே பின்னர் நடந்ததைக் கூறுக.

கண்மணி:

அடுத்தநாட்காலை அவ்வூர் மக்கள்
கொடுமை யீதென்றே குமுறிட லானுர்
ஒருசில பேர்கள் ஊர்வலமாகத்
தெருவழிச் சென்று சேர்ந்தனர் அவையை

அரசே அதிகனுல் அனுகூல மதிகம்
வருவாய் பெருக்கிட வாய்த்தவோர் அறிஞனை
அநியாயமாக இழந்திட வேண்டாம்
அன்னுன் அவைக்கோர் அணிகல மாவான்
அவனிலா அவைவெண் ணில விலா வானம்
என்று பலவாறு எடுத்து மொழிந்தனர்.
எனக்கறி வுரைகள் எடுத்தே கூற
உமக்கதி காரம் ஏதெனக் கூறி
காவலர் தம்மை ஏவியே விட்டான்
ஆத்திர மடைந்த அவ்வூர் மக்கள்
கற்களை யெறிந்து கலகம் விளைத்தனர்
சீற்ற மடைந்த ஆத்தூர் மன்னர்
அதிகனே தூண்டி அவர்களை அனுப்பினன்
இதுபெருந் தேசத் துரோக மென்றேதி
என் மகனைச் சிறைசெய்தவன் வருந்த
இன்னல்கள் பலவும் இயற்றிடு கின்றுன்.

மகன்பிரி வாலே வாடி வதங்கும்
அன்னையென் துயரை அகற்றிடு வண்ணம்
மன்னவா உன்னை வணங்கி நிற்கின்றேன்

அரசன்:

தாயே துயரம் தணிக உந்தன்
சேயினைக் காப்போம்: இந்தத் தளரேல்
சேவக வருக! இச் சேயிழை தங்க
ஆவன செய்க.

காவலன்:

அப்படி யாகுக.

[வளரும்]

---

கப்பலோட்டிய தமிழர்

# வீர சரித்திரத்தில் ஓர் அத்தியாயம்

# காப்டன் மோகனதாஸ்!

அந்தத் தொலைபேசிச் செய்தியை என்னுல் நம்ப முடியவில்லை!

காங்கேசன் துறையிலிருந்து ஷிப்பிங் கம்பனி' நண்பர் கனக. ஜெயபாலசிங்கம் கர கரத்த குரலில் அந்தச்சோகச் செய்தியைச் சொன்னுர்.

ஆழிக்குமரன் பிரிவுத்துயர் மறக்கமுடியாத ஒரு நிலையில் வல்வெட்டித்துறை மண்ணுக்கு மற்றெருரு பேரிடியா?

39 வயதில் வெளிநாட்டு ராட்சதக் கப்பல்களை ஓட்டுவதில் நிபுணத்துவம் பெற்று தான் பிறந்த மண்ணுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்ற இலட்சியவேட்கையோடு செயல்பட ஆரம்பித்த காப்டன் மோகனதாஸ் பிரிந்துவிட்டார் என்ற செய்தியைத்தான் அவர் கூறக் கேட்டபோது சில விநாடிகள் என்னுல் எதுவுமே செய்ய முடியவில்லை!

''ஹாபரிலிருந்து பகல் பதினெரு மணிக்குத்தான் புறப்பட்டார்! பருத்தித்துறைத் தபால் கந்தோரிலிருந்து சாரை 'றிவேஸ்' எடுத்துச் சென்றபோது. அந்தக்கோரம் சுமார் இரண்டு மணி நேரத்துக்குள் நடந்து விட்டது!''

- நண்பர் ஜெயபாலசிங்கம் விளக்கமாகச் சொன்னபோது என் கண்கள் கலங்கி நெஞ்சு சுமைதாங்கமுடியாது தவித்தது.

'காத்தமுத்து மாமா' என்று வல்வெட்டித்துறையில் எல்லாராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. காத்த முத்துவுக்கும், நாகரத்தினத்துக்கும் மூன்றுவது மகனுகப் பிறந்தவர் மோகனதாஸ்.

வல்வை சிதம்பராக்கல்லூரி இவருக்குக் கல்வி அறிவை ஊட்டியது.

தன்பேரன் ஐயாத்துரை தண்டையலாக இருந்து கப்பலோட்டிப் புகழ்பெற்றவர் என்பதை மோகனதாஸால் மறக்க முடியவில்லை!

அத்துறையில் சாதனை செய்ய வேண்டுமென்பதே அவர் லட்சியமானது.

நுகேகொடையில் புஹாரி நெவிக்கேஷன் நிறுவனத்தில் ஒன்பது மாதம் பயிற்சிபெற்று லண்டன் பிபிலேன் ஷிப்பிங் கம்பனியில் கடேட்டாகச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது பதினேழு.

வல்வெட்டித்துறையில் கப்பல் துறையின் புதிய தலைமகன் என்ற பெருமையையும் பெற்றுர்!

இருபத்தொரு வயதில் குவைத் ஷிப்பிங் கம்பனியில் மூன்றுவது உத்தியோகத்தரானுர். பின்னர் பதவி உயர்வு பெற்று 22 ஆயிரம் தொன் எடையுள்ள அக்கம்பெனியின் கப்பலில் காப்டன் ஆனுர்.

அந்தக் காலத்தில் திரைகடலோடித்திரவியம் தேடச் சென்ற வல்வெட்டித்துறைக் கப்பல்கள் எல்லாம் அம்மன் கோவில் தீர்த்தத் திருவிழா வன்று வல்வெட்டித்துறை முகம வந்துசேருவது வழக்கம.

அந்தப் புண்ணிய தீர்த்தத் தினத்தில் 'வல்வைப்புரவி' என்ற தனது லட்சியக்கப்பலை வல்வெட்டித்துறையில்நிறுத்த வேண்டுமென்று விரும்பினுர். மொடல் கூடச்செய்து வைத்திருந்தார்!

குமுதினி லண்டனில் படித்துக் கொண்டிருந்தபோது மோகனதாஸ் அங்கு காதலித்து அவரைக் கைப்பிடித்துக்கொண்டார்!

அன்புக் கலவையுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார் காப்டன்! இவர்களுக்கு ஒரே புதல்வன்தான் பெயர் மகேந்திரா.

வடக்கில் இன்று ஒரு துறைமுகம் நிமிர்ந்து நிற்பதற்குக் காப்டன் மோகனதாஸ் ஒரு காரணம்.

கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலுக்கு நேராக ஒரு பள்ளம் இருப்பதைக் கண்டுபிடித்து, துறைமுகத்துக்கு ஏற்ற பகுதியை லங்கா சிமெந்து நிறுவனத்துக்கு எடுத்துக் காட்டினுர்.

**ராஜகோபால்**

லங்கா சிமெந்து நிறுவனத்தின் துறைமுகக் காப்டனுகி, கப்பல்களையெல்லாம் குறிப்பிட்ட எலலையிலிருந்து இறங்கு துறைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது முதல் நங்கூரமிடுவது வரையான பணியை வசதிகுறைந்த அந்தத் துறைமுகத்தில் செய்து முடித்தார்!

சிங்கப்பூர் கம்பனியைச் சேர்ந்த 'வெலா - 6' என்ற கப்பலின் பங்குதாரர் காப்டன் மோகனதாஸ் என்பது பலருக்குத் தெரியாது! அந்தக் கப்பல் பம்பாம் வெங்காயம் ஏற்றிக்கொண்டு வரும்போது, கொழும்புக்கு அருகாமையில் மூழ்கியது. அந்தக் கப்பலில் தப்பிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காப்டன் சிவநேசனையும் மற்றும் பதினேழு மாலுமிகளையும் மோகனதாஸ் எனக்கு அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு ஏற்பட்ட திகில் அனுபவங்களை வாரமலரில் எழுத வைத்தார்.

பல கனவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டே எதிர்பாராத விதத்தில் விதியின் கைக்குள் சிக்குண்டு நம்மையெல்லாம் விட்டுத் திடீரெனப் பிரிந்துவிட்டார் இந்த வீரர்!

கப்பலோட்டிய தமிழர்களின் வீரச் சரித்திரத்தில் மோகனதாஸ் பெயரும் நிச்சயம் இடம்பெறும்.

---

**யாழ்ப்பாணத்துக்கு வந்த முதல் ரஷ்யர்**

அலெக்சாண்டர் லுத்மில்லா மெர்வர்ட் தம்பதியினர்தான் முதன் முதலில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ரஷ்ய நாட்டவராவர் இவர்கள் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் இல்லத்தில் தங்கியிருந்து தமிழைக் கற்றனர் 1924ல் தமிழ் பேச்சு மொழி இலக்கணம் என்னும் நூலையும் வெளியிட்டனர். — சச்சி

விளையாட்டு

# நேபாளத்தில் முதலாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்!

விளையாட்டுப் போட்டிகளில் போதியளவு வளர்ச்சியும், முதிர்ச்சியுமற்றவையே தெற்காசிய நாடுகளாகும். இந்நாடுகளின் விளையாட்டு வீரர்கள் பலர் சர்வதேசப் போட்டிகளை கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாதவர்களாக உள்ளார்கள். அப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றாலும அவர்களால் அவற்றின் அரை இறுதிப்போட்டிகளில் பங்கெடுப்பதே பெரும்பாடாக இருக்கிறது.

இத்தகைய மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தெற்காசிய விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து அவர்களது ஆற்றல்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையிலேயே அண்மையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நேபாளத்தில் இடம்பெற்றன.

'ஆசியாட்' விளையாட்டுப் போட்டிகள் முற்றிலும் ஆசிய நாடுகளுக்காகவே நடத்தபபடுபவை. ஆயினும் இப்போட்டிகளில் விளையாட்டுத் துறையில் மிக உயர்ந்த தரத்தில் உள்ள சீன ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளும் பங்கெடுக்கின்றன. பல போட்டிகளில் இவையே ஆதிக்கமும் செலுத்துகின்றன.

இதனால் சர்வதேச தரத்தை எட்டமுடியாது. 'ஆசியாட்டில்' வடிகட்டப்பட்ட ஆசிய நாடுகளுக்கென பிரத்தியேகமாகவே தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

### 7 நாடுகள் 5 போட்டிகள்

கடந்த செப்டெம்பர் 17ந் திகதி நேபாளத்தின் கார்ட்மண்டு நகரில் முதலாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. ("1 st Asia Federation Games") இந்தியா, பூட்டான், இலங்கை நேபாளம், பாகிஸ்தான், மாலை தீவு, பங்களாதேஷ் ஆகிய 7 நாடுகளுமே இப்போட்டிகளில் பற்குபற்றின மெய்வல்லுநர் போட்டிகள், கால்பந்து, நீச்சல், குத்துச்சண்டை, பாரந்தூக்குதல் ஆகிய ஐந்துமே தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்டிருந்தன.

நேபாள மன்னர் பிரேந்திரா கார்ட்மண்டுவின் 'தர்சாத்' விளையாட்டரங்கில் முதலாவது தெற்காசிய விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார்.

அனந்த்

### இந்தியாவின் வெற்றி

போட்டியின் ஆரம்பத்திலிருந்து இந்திய வீரர்களே முன்னணியில் இருந்தனர் இதற்கு இவ்வீரர்கள் போதியளவு வெற்றிகளைப் பெறாதபோதிலும் சர்வதேசப் போட்டிகளில் சளைக்காது பங்குபற்றுவதும், இந்தியா விளையாட்டுத் துறைக்கு அண்மைக் காலங்களில் கொடுத்துவரும் கூடுதல் ஊக்கமுமே காரணமாகும்.

நீச்சல் உட்பட தெற்காசிய விளையாட்டுக்களின் ஐந்து போட்டிகளிலும் தங்கம், வெள்ளி, வெண்கலத்தடன் மொத்தம் 88 பதக்கங்களை இந்தியா சுவீகரித்தது.

### இலங்கையின் சாதனை

இந்தியாவைத் தொடர்ந்து இலங்கை அதிகளவில் பதக்கங்களைப் பெற்றது. 'ஆசியாட்டில்' எதிர்வீரசிங்கமும் 'ஒலிம்பிக்கில்' டன்கன் வைற்றும் பல வருடங்களுக்கு முன்னர் முறையே தங்கம், வெள்ளிப் பதக்கங்களை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

அவற்றிற்குப் பின்னர் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலேயே இலங்கை அதிகளவு பதக்கங்களைப் பெற்றுள்ளது. இலங்கையின் நீச்சல் வீரர் ஜூலியன் போலிங் தலை

(14ம் பக்கம் பார்க்க]

தெற்காசியப் போட்டிகளில் கலந்துகொண்ட நாடுகள் பெற்ற பதக்கங்களின் விபரம் வருமாறு.

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 இந்தியா | 44 | 28 | 16 | 88 |
| 2 இலங்கை | 7 | 11 | 9 | 37 |
| 3 பாகிஸ்தான் | 5 | 3 | 2 | 10 |
| 4 நேபாளம் | 3 | 12 | 8 | 23 |
| 5 பங்களாதேஷ் | 2 | 7 | 13 | 22 |
| 6 பூட்டான் | — | — | 2 | 2 |
| 7 மாலைதீவு | — | — | 1 | 1 |

# உலகின் சிறந்த சகலதுறை கிரிக்கெட் வீரர் கிளய்வ் ரைஸ்

உலகில் சிறந்த சகலதுறை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும்போட்டியில் தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர் கிளய்வ் ரைஸ் வெற்றி பெற்றுள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் முதல் முதலாக இடம்பெற்ற இப்போட்டி இம்மாதம் 16ம் திகதி இங்கிலாந்தில் நடைபெற்றது. தென் ஆபிரிக்க வீரர் கிளய்வ் ரைஸ், இந்திய வீரர் நிகாந் கபில்தேவ், இங்கிலாந்துவீரர்இயம் பொதிதாம், நியூஸிலாந்து வீரர் றிச்சார்ட் ஹாட்லி, மேற்கிந்திய தீவுகள் வீரர் மல்கம் மார்சல் ஆகிய ஐவரும் இட்போட்டியில் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் ஐவரும் உலகில் தலைசிறந்த சகலதுறை கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆயினும் உலகின் இன்னொரு தலைசிறந்த சகலதுறை கிரிக்கெட் வீரரான பாகிஸ்தான் வீரர் இம்பிரான் கான் இப்போட்டியில் பங்குபற்றவில்லை.

போட்டி விதிகளின்படி ஒவ்வொரு வீரரும் மற்றைய நான்கு வீரர்களினது தலா 4 ஓவர்கள் வீதம் 16 ஓவர்களை எதிர்த்து துடுப்பாட வேண்டும் இதில் ஒருவர் பெறும் ஓட்டங்கள் பந்துவீச்சில் அவர் பெறும் விக்கட்டுக்களினால் பெருக்கப்படும். துடுப்பெடுத்தாடும்போது அவுட்டாகும் ஒவ்வொரு தடவையும் பந்து வீச்சில் அவர் பெறும் விக்கட்டின் எண்ணிக்கை ஒவ்வொன்றாகக் குறைக்கப்படும்.

போட்டியில் வெற்றிபெற்ற தென் ஆபிரிக்க சகலதுறை கிரிக்கெட்வீரர் கிளய்வ் ரைஸ் 16 ஓவர்களிலும் ஒருதடவை கூட அவுட்டாகாமல் 73 ஓட்டங்களை எடுத்தார் பந்து வீசுவதில் இவர் 7விக்கட்டுகளையும் பெற்றதினால் மொத்தமாக 511புள்ளிகளைப் பெற்றார்.

இரண்டாவது இடத்தை இந்தயவீரர் நிகாஜெகபில்தேவ் பெற்றார். இவர் 16 ஓவர்களிலும் நான்கு முறை அவுட்டாகி மொத்தம் 118 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் இவர் 4 விக்கெட்டுகளை எடுத்

சூரி

தார். இதனால் 118புள்ளிகளைப் பெற்றார்.

மூன்றாவது இடம் இங்கிலாந்து வீரர் இயம் பொத்தாவுக்குக் கிடைத்தது இவர் 16 ஓவர்களிலும் 3 தடவைகள் அவுட்டாகி 163 ஓட்டங்களைப் பெற்றார் பந்து வீச்சில் ஒரேயொரு விக்கெட்டை மாத்திரம் பெற்றார்.

நியூஸிலாந்து வீரர் ஹாட்லி 3 தடவைகள் அவுட்டாகி 149 ஓட்டங்களைப் பெற்றார் விக்கெட் எதனையும் அவர் பெறவில்லை. மேற்கிந்திய வீரர் மல்கம் மார்சல் 7முறை அவுட்டாகி 97 ஓட்டங்களைப்பெற்றார் இவர்கள் இருவருக்கும் எந்தவித புள்ளியும் கிடைக்கவில்லை.

(14-ம் பக்கம் பார்க்க)

## சிதைவுகளில்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனத்தைத் தனக்குப் பலமாகவும் அவளின் பலவீனமாகவும் ஆக்க நினைத்த அதிபர்

"என்ன மகேஸ், நான் சொல்லிக்கொண்டே நிக்கிறன். நீர் விளங்காதது போலை. நான் எவ்வளவு காலமா உம்மோடை பழகிறன்... என்னட்டைக்கூட ஒரு வார்த்தை சொல்லாமல் கலியாணத்துக்கு ஓமெண்டிட்டீர்... என்ன... சரி பரவாயில்லை... யார் மாப்பிள்ளை? அந்த மாஸ்டர் நித்தியன் என்று கேள்வி... சரி... சரி... அதுக்கென்ன... வாருமன் இப்படி..."

மீண்டும் அவர் கரங்கள் தன் கரங்களில் பட்டபோது தன்னிலை மறந்து போனாள் மகேஸ்வரி.

"சீ... நீயும் ஒருமனுசனே!" ஆத்திரத்துடன் உதறிய அவள் கரங்கள் அதிபரின் கண்ணாடியில் பட்டு அது கீழே விழுந்து நொருங்கியது. அதிபரின் ஆசை முழுவதும் இப்போது ஆத்திரமாக மாறியிருந்தது.

"என்ன பெரிய பத்தினி வேஷம் போடுகிறாய்? அங்க காதல் கடதாசி எழுதிக் குடுத்து நல்லா ஆடித்திரிஞ்சு போட்டு இப்ப நல்லபிள்ளை போலக் கலியாணம்... அதுக்குள்ளை பெரிய கண்ணகி போல நடிப்பு..."

ஒரு பெரிய மனிதனுக்குரிய பெருந்தன்மையோ விவேகமோ எதுவும் இல்லாமல் மிகமிக அற்பத்தனமாய்க் கதைத்துக் கொண்டிருந்த அவரின் குரலை மகேஸ்வரியின் ஆவேசமான குரல் இடைவெட்டியது.

"கடதாசி குடுக்கிறதும் வாங்கிறதும் கலியாணம் செய்கிறதும் என்ரை விருப்பம். அதைக்கேட்க நீ யார்? ஏதோ தகப்பனைப் போல வயசுக்கு மூத்த மனுசன் எண்டத்துக்காக நான் இவ்வளவு நாளும் பொறுத்தன். இனி உன்ரை வண்டவாளம் சந்தி சிரிக்கும். ஓ..."

ஆவேசமாக வார்த்தைகளைக் கொட்டிய மகேஸ்வரி அறையைவிட்டு வெளியேறி வெகுநேரமாகியும் அதில் சிலையென உறைந்து போயிருந்தார். அவர் கையில் இரண்டாக உடைந்து போயிருந்த மூக்குக்கண்ணாடி எரியும் தீயில் எண்ணெய்போல அவர் ஆத்திரத்தை மேலும் அதிகப்படுத்திக்கொண்டிருந்தது.

[அடுத்த வாரம் தொடர்பவர் கோகிலா மகேந்திரன்)

## கடல்கோட்டை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சாய் வன்னிமை திசைவீர சிங்கனைக் கைது செய்துகொண்டு வந்திருக்கிறாராம்..." என்றான் அந்த வீரன்.

"உடனே அழைத்துவா..."

கமாண்டரின் உள்ளத்தில் பரபரப்பு. ஆண்டவன் அவர்கள் பக்கமிருப்பதாக எண்ணிக்கொண்டான். இராசவாசல் முதலியார் அந்திராசி, கமாண்டர், முனிவந்தான். தான்திசைவீரசிங்கனைப்பிடிக்க நேர்ந்த விபரத்தைச் சொன்னான்.

"பெரும் சதி. பெரும் சதி. இன்று டொன் லுயிஸ் கலவரத்தையுண்டாக்கிக் கோட்டையைக் கைப்பற்ற முயன்றான். திசைவீரசிங்கன் போர்த்துக்கீசருடன் தொடர்பு கொள்ள முயலும்போது நீர் பிடித்து வந்திருக்கிறீர். எங்களுக்கு எதிராகப் பெரும் அரசியல் சதி நடக்கிறது. முதலியார் இதனை வேரோடு களையவேண்டும்... பலர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் ஆ... நீங்களேன் பூதத்தம்பியைக் கைதுசெய்யவில்லை. ? அவனுக்கும் இதில் சம்பந்தம் இருக்கிறது அதனால் திசைவீரசிங்கன் அங்கு வந்திருக்கிறான்.."

'.பூதத்தம்பி நாளை வருவார். துரை அவர்களே...'

"மாட்டான்... தப்பிவிடுவான்... கூப்பிடுங்கள் எங்கள் வீரர்களை "உடனடியாகப் பூதத்தம்பியைக் கைதுசெய்து இழுத்து வாருங்கள்" என்று ஜாக்கோப் வன்றீய் கட்டளையிட்டான்.

(அடுத்த வாரம் முற்றும்)



மட்டக்களப்பில் கைதானவர்கள் கழுவேற்றப்படுவதைப் படம் சித்திரிக்கிறது.

# இவ்வாரம் எப்படி?

**இன்று**

மாதம்- புரட்டாதி
திகதி- 14 [30-09-1984]
வாரம் ஞாயிறு
திதி- ஷஷ்டி இரவு 9-58வரை
நக்ஷத்திரம்- அனுசம் காலை 6-04 ன் மேல் கேட்டை

## மேஷம்

கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம்பெறலாம். பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும் எதிலும் முன்யோசனை வேண்டும். ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். போக்குவரத்துவிடயத்தில் அதிககவனம செலுத்தவேண்டும். திடீர்த் திருப்பம் உங்களைத் திகைக்க வைக்கலாம். துர்க்கையம்மனை வழிபடவும்,

## ரிஷபம்

பசுமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்த்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். தூரத்து உறவினர் ஒருவரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பத்திரகாளியம்மனை வழிபடவும்.

## மிதுனம்

நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள்மூலம் நஷ்டமுண்டு. கூட்டு வியாபாரத்தால் மோசடிகள் நடக்கலாம். தட்சணாமூர்த்தி பெருமானை வழிபடவும்.

## கடகம்

பிதா வழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. நீண்டநாள் மனக்குறை நிவர்த்தியாகும். பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர். சுப்பிரமணியப் பெருமானை வழிபடவும்.

## சிம்மம்

வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். திடீரென வரும் வருவாயால் கடன்தொல்லை தீரும். நீண்டநாள் தொடர்பில் மாற்றம் ஏற்படும். பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். மாணவர்கள் சிந்தித்துச் செயலாற்றவும். மகாவிஷ்ணுப் பெருமானை வழிபடவும்.

## கன்னி

எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன்வருவார்கள். வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத் தரலாம். தயக்க நிலையில் நீக்கும் செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிட்டும் தெய்வத்தின் துணையுமுண்டு மாக விஷ்ணுப் பெருமானை வழிபடவும்.

## துலாம்

முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடனிருக்கவும். பணப் போக இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநிற்கவும். சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள். விவசாயிகளுக்குத் தொல்லை அதிகரிக்கும். பெண்களுக்கு அவப்பெயருக்கும் இடமுண்டு. மாணவர்களுக்கு நிதானம் வேண்டும் சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்.

## விருச்சிகம்

மனப்போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவருடன் கைகலப்பும் ஏற்படலாம் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் ஏற்படும் உடல நலம் பாதிக்கப்படலாம் மாணவருக்குச் சிறுவருத்தம் வரலாம். துர்க்கையம்மனை வழிபடவும்.

## தனுசு

கனிவான நினைவுகள் தலைதூக்கும். பிறருடன் பகைத்துக்கொள்ள நேரும் இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும். முத்தான சந்திப்பும் முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் நண்பர்களும் உதவுவதற்கு முன்வருவார்கள்: தட்சணாமூர்த்திப் பெருமானை வழிபடவும்.

## மகரம்

சகோதரி ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனை தரும். உள்வீட்டிலேயே பூசல்கள் உருவாகும். அவப்பெயருக்கும இடமேற்படும். குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம் அமைதி வேண்டும். தட்சணாமூர்த்திப் பெருமானை வழிபடவும்.

## கும்பம்

மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரம், கல்வித் துறையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இடமுண்டு. அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்.

## மீனம்

சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காணமுடியும். குடும்பத்தில் பிணைப்புக்கள் இறுகும் மாணவர்களுக்கு அவதானம் வேண்டும். பெண்களுக்கு அவப்பெயருக்கும் இடமுண்டு. சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்.

**திருமலை.க.வே.ரவீந்திரன்**

# புதிய புத்தகம்

நூல்: திருவாசகபூசாவிதி
ஆசிரியர்: ஆறுமுகநாவலர்
வெளியீடு: சிவதர்மவள்ளல் க. கனகராசா ச. நீ.

நாவலர் பெருமான் இயற்றிய திருவாசகபூசாவிதி மில்க்வைற் வெளியீடாகவந்துள்ளது. திருவாசகத்தில் சிதம்பரநடராசப் பெருமானைப் பூசிக்கும் வாழக்கம் நாவலர் காலத்துக்கு முன்னரே இருந்திருக்கிறது. மணிவாசகர் திருவாசகப் பொருள்நடராசப் பெருமானே என்று சுட்டிக்காட்டி முத்தியடைந்த நிகழ்ச்சியிலிருந்தே திருவாசகத்தை நடராசப்பெருமானின் திருவுருவாகப் பூசிக்கும் முறை தோன்றியிருக்கும் எனக் கருதலாம்

வேதாகமமுறைகளைப்பூரணமாக விளங்கிச்சமயப்புனருத்தாரணம்செய்வதையே தனது வாழ்வின் நோக்கமாகக் கொண்டு சைவப்பணிபுரிந்த நாவலர் அக்காலத்தில் சிரத்தையுடன் திருவாசகபூசை செய்வோர்பலரின்கிரியைகளில் செய்யப்படவேண்டிய திருத்தங்களைக் கண்டே இந்நூலை எழுதினர் என்று கருதக்கூடியதாகவும், ஆகமப்பத்ததிக்கிரமத்தில் செய்யவேண்டியபூசை ஒழுங்குகள் பூரணமாக அமைந்ததாகவும் இத்திருவாசக பூசாவிதி அமைந்திருக்கின்றது

இக்காலத்தில் மிகச்சுருக்கமாகவும் சரியாகவும் கோவிற்பூசைகளைச் செய்வதாகக்கருதுபவர்கள் தமது பூசைமுறைகளைத் திருத்தி நிறைவுசெய்ய இந்நூல் பெரிதும் உதவும். பூசை ஒழுங்குகளை மிகமிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதும் நேரகத்தில் இந்நூலால் சைவஉலகுக்கு மிகச் சிறந்த உபகாரம் செய்திருக்கிறார்.

சிவபக்தர்களாகவும் திருவாசகபூசை செய்பவர்களாகவும் விளங்கிய பல வைசியர்களை இத்திருவாசக பூசாவிதியால் பூரண நன்மையடைந்தனர் என்று கூறுவர் இவர்களைப் போல இக்காலத்தவர்கள் திருவாசகபூசை செய்து சிவானுக்கிரகத்தையும் சிவஞானத்தையும் பெறத்தக்கவகையில் திருவாசகபூசாவிதியை வெளியிட்டு திரு. கனகராசா அவர்கள் நிலையான சிவப்பணியொன்றைச் செய்துவிட்டார்.

தமிழ் நாட்டுச் சிதம்பரேசப் பெருமான் அந்தணவடிவில் சென்று திருவாசகத்தை எழுதி வெளியிட்டதை உறுதிப்படுத்தும் வகையில்ஈழநாட்டுச் சிதம்பரேசப்பெருமானின் வழிவழி அடியவரான க. வைத்தீஸ்வரக்குருக்கள் இந்நூல் வெளியீட்டுக்குக் காரணமாயமைந்ததையும் சிந்திக்கும்போது சைவமக்களனைவரும் திருவாசகபூசை செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதை இறைவன் செயற்படுத்துகின்றான் என்றேநினைக்கவேண்டியிருக்கின்றது.

திருவாசகபூசாவிதியைப் பெற்று அதிற்கூறிய முறைப்படி பூசிப்பதே சைவமக்கள் இவ்வெளியீட்டைப் பயன்படுத்தும் முறையாகும்.

பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்

நூல்: தமிழ் இலக்கணப் பூங்கா

ஆசிரியர்; பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

கிடைக்குமிடம்; பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

விலை 14/50

"தமிழ்இலக்கணப்பூங்கா கல்விமான்களுக்கும், நல்லாசிரியர்களுக்கும் பெருவிருந்து...!" என்ற மூதறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் மதிப்புரை நுழைவாயிலில் ஒலிக்க நூலின் உள்ளே நுழைகின்றோம்.

"தமிழிலக்கணத்தை வேதனையின்றி விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையைப் பண்டிதர் ச வே. ப நிறைவேற்றியிருக்கிறார். பண்டிதர் மிடுக்கைக் காட்டாது, மாணவர் இடர்ப்படும் இடங்களைப்புரிந்த விளக்கங்கள் தந்திருப்பது பாராட்டுக்குரியது... இலக்கண அறிவிற்குவலுவான தளமிடும்நோக்கோடு விடயங்கள்விளக்கப்பட்டிருப்பதும்இலக்கணப் பூங்காவின் சிறப்பாகும்" என யாழ் இந்து உப அதிபர், தமிழ்த்துறைத்தலைவர் திரு க. சிவராமலிங்கம் B A. தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார்

ஒரு நூலுடன் அதனைக்கற்பவர். கற்பிப்பவர், கற்கும்படி, கற்பிக்கும்படி ஆற்றுப்படுத்துபவர் ஆகிய முத்திறத்தாரும் சம்பந்தப்பட்டவர்களே! இந்த அடிப்படையில் இம் முத்திறத் தாரின் முன்னுரைகளும்நூலில் இடம்பெற்றிருப்பது வரவேற்கத்தக்க பயன் மிக்க புதுமை.

இலக்கணப் பலாக்கனியின் தனித்தனிச் சுளைகளைச் சிறு சிறு தலைப்புக்களின் கீழ் மாணவர்க்குச் சுவைபட வழங்குவதில் பண்டிதர் ச வே. ப. இந்நூல் மூலம் வெற்றிகண்டுள்ளார் என்ற எமது அபிப்பிராயத்தை இந்நூல் பற்றி விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களிடையே நிலவுங்கருத்துகள் வலியுறுத்துகின்றன.

பத்தாம் வகுப்பு மாணவர்களின் மனப்பக்குவம், அனுபவப் பரப்பு மொழித்தேர்ச்சி என்பவற்றைக் கருத்திற்கொண்டு பொறுப்புணர்ச்சியோடு ஆக்கப்பட்ட இந்நூலில் புலமைக் காய்ச்சல் ஆராய்ச்சியில் மாணவர்களையும் ஈடுபடுத்தி அவர்கள் மனங்களைமலைக்க வைக்கும் பாரதூரமான குற்றம், இடம்பெறுதிருப்பது பாராட்டுக்குரிய நன்மாற்றமாகும்.

இலக்கணப்பூங்கா G. C. E. (O/L) (A/L) பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்தும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் நூலாக விளங்குகிறது. அதேவேளை ஏதாவது ஒரு விசேட தேவையை ஒட்டி தமிழிலக்கணத்தை விரைந்து கற்றுத் தேறவிரும்புவோருக்கும் தற்கால உதாரணங்களையும், நயம்மிக்க எடுத்துக்காட்டுக்களையும் முடிந்தவரை எடுத்தாண்டு அமைத்த இந்நூலை நாம் துணிந்து சிபார்சு செய்யலாம்.

1. பெயர், வினை, இடை, உரி, ஆகிய நான்கினச்சொற்களை வெகு அழகாகத் தெளிவாக வகைப்படுத்தி, அவை மொழிவழக்கில் வகிக்கும் இடங்களையும் கொள்ளும் தோற்ற வகைகளையும் நியாய பூர்வமாக விளக்கியுள்ளமை,

2. ஒருசொல்லின் உள்ளுறுப்பு வகைகள் அவற்றின் மரபுரீதியான பொருண்மைகள் பற்றித் தெளிந்த விளக்கங்கள் தந்துள்ளமை,

3. சிறந்த கட்டுரை ஒன்றின் உருவாக்கும் உபாயங்கள் உருச்சுருங்கியும் கருத்துச் சுருங்காத சுருக்கம் தயாரிக்கும் உபாயங்கள், கவிதையில் காணப்படக்கூடிய நயங்கள் என்பன அழகாக விளக்கப்பட்டுள்ளமை என்ன குறிப்பிடத்தக்க இந்நூலின் சிறப்புகளாயுள்ளன

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களை உள்ளடக்கிய தொல்காப்பியம் போலத் தற்காலத்துக்கேற்ற இலக்கண நூலொன்று கொண்டிருக்க வேண்டிய எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், சொற்றொடர் இலக்கணம், வாக்கிய இலக்கணம் என்ற நான்கு விடயங்களை விரிவாகவும் தெளிவாகவும் பேசவேண்டிய விதத்தில் இந்நூல் பேசுகிறது.

அணிவகைகளுள் அடிப்படை அணிகள் பதினொன்று பற்றி நயம்மிக்க உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. யாப்பிலக்கணம் பற்றி நன்கறிந்திருக்கக் கூடிய நாடறிந்த கவிஞரான இந்நூலாசிரியர் இந்நூலில் சுருங்கிய அளவிலேனும் அதுபற்றி எழுதாதது ஏனோ?

தேடல், திரட்டல், பதித்தல் என்ற கற்றற்படிகளுள் இறுதியான பதித்தலுக்கு இன்றியமையாதனவாகிய பயிற்சி வினாக்களையும் சேர்த்துக் கொண்டிருந்தால் நூலின் பயன்பாடு இன்னும் அதிகமாயிருக்கும்.

"தமிழ்ச்சித்தன்"

நூல்: தோத்திரக் கொத்தும் ஞான விளக்கமும்

தொகுத்து யாத்தவர்: கிறியேசன் சுவாமி (த. துரைராஜா)

திருமுறைகள் - திருப்புகழ்-பட்டினத்தார் - தாயுமானவர் பாடல்கள் போன்றவற்றின் தொகுப்பான தோத்திரப்பாக்களும் இந்நூலாசிரியரின் சிந்தனைக் கருவூலமான ஆண்டவன் என்னும் கட்டுரையும் அருள் வாக்கியங்கள் சிலவற்றோடு சேர்ந்த இந்நூல் திருமதி தம்பையா குங்குமம் அவர்களின் நினைவு மலராக வெளிவந்திருக்கின்றது. ஜகத் பிரம்மம் என்ற வேதாந்த வாக்கியப் பொருளும் அல்ஹம் துல்லில்லா என்னும் இஸ்லாம் மதவாக்கியப்பொருளும் ஒற்றுமைப்படுவதைககாட்டி ஆண்டவனின் இயல்பையும் ஆன்மாவின் தன்மைகளையும் விளக்கும் பண்பு இந்நூலாசிரியன் ஒருமைப்பாட்டுணர்வினையும் இவரின் குருவான அதிவணக்கத்திற்குரிய எம். ஆர். பாவா முகைதீனின் (குருபாபாவின்) ஆன்மீகப் பெருமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

"எப்பொழுதுஎங்களிலுள்ள கல்வித்திமிர்அகன்று, ஆணவம் அழிந்து, நாம் கலாநிதிகள், பீடங்களுக்குப்பேராசிரியர்கள் என்ற எண்ணம் அழிந்து...... எறும்புமனிதனாக மாறி, மாணவனாக மாறினாலன்றி நாம் மெய்ப்பொருள்களை - ஞானியர் பாடல்களின் உட்பொருள்களை அறிய முடியாது என்பது அடியேன் தெளிந்த தெளிவாகும்".

"தூல உடல், சக்தியின் மையம் மூளை. சூக்குமஉடல்-சக்தியின் மையம் மனமாகும். மனமும் அதை மையமாகக் கொண்ட சூக்கும உடலுந்தான் உண்மையான மனிதன்" என்பனபோல் வரும் நூற்பகுதிகள் சிந்தனையைத் தூண்டுவதோடு அறிவுப்பசிக்கு நல்ல உணவாகவும் விளங்குகின்றன. 'ப'

## உலகின் சிறந்த

(12ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் இடத்தைப் பெற்ற கிளய்வ் ரைஸ் 6,000 பவுண் ஸ்ரேலிங்கும், இரண்டாம் இடத்தைப்பெற்ற கபில்தேவ் 5,000 பவுண் ஸ்ரேலிங்கும், மூன்றும் இடத்தைப்பெற்ற இயன்பொதம் 4,000பவுண் ஸ்ரேலிங்கும்பெற்றனர். சிறந்த துடுப்பாட்டத்துக்கான மேலதிக 1000 பவுண ஸ்ரேலிங்கும் கிளய்வ் ரைஸ் பெற்றார்.

இப்போட்டிக்கு இங்கிலாந்தின் பிரபல கவுண்றி அணி ஒன்றின் 15 வீரர்கள் பந்து தடுப்பாளர்களாக விளையாடினர்.

## நேபாளத்தில்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

மையிலான இலங்கை விளையாட்டு அணி 7 தங்கம், 11 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்களுடன் 37 பதக்கங்களைப் பெற்றுத் தாயகம் திரும்பியுள்ளது. இலங்கையின் வளர்ச்சியடைந்துவரும் விளையாட்டுத்துறைக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகவே விளங்குகின்றது

### ஒளிமயமான பாதை

தெற்காசியப் போட்டிகளில் கலந்துகொண்ட ஐந்து நாடுகளும் பொருளாதார ரீதியில் உறுதியற்றவை பெரும் அரசியற் பிரச்னைகளுக்குள்ளாகியிருப்பவை. இந்த நலிந்த நாடுகள் ஒன்று சேர்ந்து சர்வதேச தரத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, விளையாட்டுத் துறையில் ஒளிமயமான பகுதியைநோக்கி இவை நகருவதையே காட்டுகின்றன.

இதுபோன்ற போட்டிகளுடன் மட்டும் தமது ஆற்றலகளை இந்நாடுகள் நிறுத்திக் கொள்ளலாகாது. இப்போட்டிகளைத் தமது ஏற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாகக் கொண்டு உயர்ந்த தரத்திலான சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்களைத் தட்டிச் செல்வதையே இவை தமது இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## டபிள் டாக்டர்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தன அவிசாவலைத் தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். ருவான்வலைத் தொகுதி அக்காலத்தில் கண்டிய பிரபுதத்துவ பரம்பரையின் செல்வாக்குச்செறிந்த இடமாக விளங்கியது. இங்கு முதல் முதலில் தேர்தலில் போட்டியிட்ட டாக்டர் என். எம். லேடி அடிலைன் மொலமுரேயைத் தோற்கடித்து வெற்றியீட்டினார்.

இனி அரசியலே தனது முழு நேரப்பணியாகப்போகிறதென்பதைத் தீர்மானித்த டாக்டர் என் எம். பெரேரா தமது விரிவுரையாளர் பதவியைத் துறந்துவிட்டு மக்கள் சேவைக்குத்தம்மை முழுதாக அர்ப்பணித்துக்கொண்டார்

டாக்டர் பெரேராவின் அரசசபை உறுப்பினர் பதவி அதிககாலம் நிலைக்கவில்லை!

### சமசமாஜக் கட்சி

### பிளவுபட்டது

1939ம் ஆண்டுஇரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானது. லங்கா சமசமாஜக்கட்சியில டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தலைமையிலான ஒரு குழு யுத்தத்தை ஆதரித்தது டாக்டர் என். எம். பெரேரா தலைமையிலான குழு ''ஏகாதிபத்திய யுத்தம்'' என்று கூறி அதை எதிர்த்தது.

கட்சிக்குள் பிளவுமுற்றியது. இறுதியில் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவும் அவரது ஆதரவாளர்களும் 'ஸ்ராலினிவால்கள்' என்று பெயர் சூட்டப்பட்டு சமசமாஜக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர் 1940 ஆம் ஆண்டில் இலங்கையை ஆட்சி செய்துவந்த பிரிட்டிஷ் அதிகாரிகளால் லங்காசமசமாஜக்கட்சி தடை செய்யப்பட்டு அதன் தலைவர்களைக் கைது செய்வதற்குப் பிடி ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

1940ஆம் ஆண்டு ஜூன் மாதவாக்கில் டாக்டர் என். எம். பெரேராவும் திரு பிலிப் குணவர்த்தன, டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா, திரு. எட்மண் சமரக்கொடி ஆகியோர் கைதுசெய்யப்பட்டு கண்டி போகம்பரை சிறையில் காவலில் வைக்கப்பட்டனர்.

(மிகுதி அடுத்தவாரம்)

---

1964-ஆம் ஆண்டளவில் இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ் இலக்கிய வட்டம் இலக்கிய இருபதாண்டுகளைக்கடந்துவிட்டது.

ஈழத்து இலக்கிய விமர்சனங்களை எழுதுபவர்கள் யாழ். இலக்கிய வட்டத்தினைத் தவிர்த்து எழுத முடியாது. ஏனெனில், நமது நாடு; நமது எழுத்தாளர்கள்; நமது படைப்புக்கள் என்ற பிரகடனத்துடன் பேனா எடுத்தவர்களின் வட்டம் இது.

சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள், நாடகங்கள், விமர்சனங்கள், ஆராய்ச்சிகள் எனப் பல வகைப்பட்ட நூல்களை வெளியிட்டு வாசகர்களின், இலக்கிய வாணர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்ட வட்டம் இது

யாழ் இலக்கிய வட்ட எழுத்தாளர்கள் இன்று பத்திரிகையாசிரியர்களாக, அரசாங்க நிர்வாகிகளாக தலைசிறந்த எழுத்தாளர்களாகக் கனிந்திருக்கிறார்கள். எனவே அவர்களின் பொறுப்பும் கடமைகளும் பெருகியுள்ளன

## கனவுகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுக்கு ஆள் வேறுபடலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்

இந்த: பயங்கரக் கனவுகளைத் தவிர்ப்பதற்கு வழி உண்டா? எது போன்ற சந்தர்ப்பங்களில் உங்களுக்குப் பயங்கரக் கனவுகள் ஏற்படுகின்றன. என்பதைக் கண்டறிந்து அதுபோன்ற சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதன் மூலம் பயங்கரக் கனவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் மருந்துகளால் அதிகப்பலன் இருக்காது என்றும் அவர்கள் கூறுகின்றனர்

ஒருவருக்கு ஓர் இரவில் சராசரியாக 100 நிமிடங்கள் கனவு ஏற்படுகிறது ஆனால் வயதிற்கேற்ப இந்த அளவு ஏற்படுகின்றது. அதாவது குழந்தைப் பருவத்தில் ஒருவர் அதிகநேரம் கனவு காண்கிறார்.

பின்னர் வயதாக, வயதாகக் கனவு காணும் நேரம் குறைந்துகொண்டே வருகிறது.

### வண்ணங்களில் கனவு

கறுப்பு வெள்ளையில் தான் கனவு காணமுடியும்; வண்ணங்களில் கனவு காண முடியாது என்று ஓர் கருத்து உள்ளது. இந்தக் கருத்துத்தவறானதா என்று இன்றைய ஆராய்ச்சியாளர்கள்கூறுகின்றனர். எல்லோரும் வண்ணங்களில் தான்கனவு காண்கின்றனர் ஆனால் பெரும்பாலோருக்கு இந்தவண்ணங்களை நினைவுபடுத்த முடிவதில்லை என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். கத்தியால் குத்துப்படுவது போலப்பயங்கரக்கனவு காணும் சிலர் அந்தக் காயத்தின் வலியைக்கூட உணர்கின்றனர் என்று அவர்கள் கூறிகின்றனர்.

யூ.எஸ். நியூஸிலிருந்து
தருபவர்: சச்சி

---

# இலங்கை இலக்கியப் பேரவை

தங்களின் இலக்கியப் பணியைப் பலமுடைப்படுத்தவும் இலங்கை ரீதியாகப் பரவலாக்கவும் முனைவதே இக் காலகட்டத்தின் முக்கிய தேவை என்றுணர்ந்துள்ளனர் இவர்கள்.

இலங்கையின் தமிழிலக்கியப் பாரிம்பரிய உணர்வினையும், தமிழர் தம் பண்பாட்டு நெறிகளையும் வளர்த்தெடுத்தலும், அகலுலகக் கண்ணோட்டத்தில் ஈழத்தமிழிலக்கியப் பார்வையை அகட்டிச் செல்லுவதும், மனிதகுலமேம்பாட்டிற்கான தேடுதலை ஒரு யக்ஞமாக நடாத்திச் செல்லுவதும் நமது கடமை எனக்கருத்திற் கொண்டுள்ளனர்.

இலக்கியப் பின்னணியினூடாக மனிதனை மனிதனுகக் காணமுயலும் ஒரு சமூகப்பணியாக ஈழத்தில் பல்வேறு காரணங்களுக்காகத் தம் எழுத்துக்களையோ சிந்தனைகளையோ, கருத்துக்களையோ மக்கள் முன் கொண்டு செல்ல முடியாது தவிக்கும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி உற்சாகம் கொள்ளச்செய்யவும் இதன் மூலம் புதிய புதிய எழுத்தாளர்கள் வாழ்விலும் எழுத்திலும் நம்பிக்கைபெற்று புத்துணர்வு பெறவும், பழம் பெரும் புகழ் ஈய்ந்த எழுத்தாளர்களின் நூல்களை மீளப் பரிசோதனை செய்து அவர்களை மீண்டும் மக்கள் முன் கொண்டுவரவும். யாழ். இலக்கிய வட்டத்தின் உள்ளங்கமாக. இலங்கை இலக்கியப் பேரவை தோன்றியுள்ளது. இதுநாடளாவிய ரீதியில் ஈழத் தமிழ் எழுத்துக்களைக் கௌரவித்து, அவற்றின் படைப்பாளிகளைச் சிறப்பிக்கவும் முதற்கண் எண்ணியுள்ளது

★ ஈழத்தில் 1983 - ஆம் ஆண்டு வரை கட்டுரை/ஆராய்ச்சி, நாவல், சிறுகதைக்கோவை, நாடகம், கவிதை/காவியம், பிறவகையின - என்ற துறைகளில் வெளிவந்த நூல்களில், தலையாய சிறந்த நூல் ஒவ்வொன்றிற்கும் ரூபா 1000/- பரிசளித்துக்கெளரவிப்பது எனவட்டம் தீர்மானித்துள்ளது.

★ இந்த நூலின் தெரிவு பின்வருமாறு அமையும்:

ஈழத்திலுள்ள 50 அறிஞர்களுக்கு, முன்கூறிய துறைகளில் இதுவரை காலமும் வெளிவந்த நூல்களில் சிறந்ததாக அவர்கள்கருதுவதைக் குறித்து தருமாறு விசேட பத்திரங்கள் இலஙகை இலக்கியப் பேரவையினால் அனுப்பிவைக்கப்படும்.

அவர்களின் பெரும்பான்மைக்கணிப்பின்படி ஒவ்வொரு துறையிலும் தெரிவுசெய்யப்படும் நூல்கள், சான்றோர் குழுவால் பரிசிலனை செய்யப்பட்டு, இறுதியில், மிகச் சிறந்த நூல் ஒவ்வொருதுறையிலிருந்தும் அங்கீகாரம்பெறும். அந்த நூல்களுக்கு இலங்கை இலக்கியப்பேரவை சான்றிதழ்கள் வழங்குவதுடன் ரூபா 1000 வழங்கிக் கௌரவிக்கும்.

இந்தப்பேரவைக்கும் யாழ். இலக்கிய வட்ட நிர்வாகக் குழுவே பொறுப்பாக இருக்குமாயினும், மேலதிகமாக இவ்வமைப்புக்கென இலங்கை இலக்கியப்பேரவை அமைப்புச் செயலாளர் ஒருவர் இருப்பார்.

‘சேனாச்சேனா’

## இலக்கியச்சந்தி

### ராஜகோபாலின் கப்பலோட்டிய தமிழர்கள்

ராஜகோபால் எழுதிய ‘வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்’ என்ற நூல்வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் வெளியீடான இந்நூலின் விலை ரூ. 10.

## ஜீவாவின் ‘மல்லிகை’ மலர் விழா

டொமினிக் ஜீவாவுக்கு என்று சில தனித்துவங்கள் உண்டு!

எழுத்தாளராக இருந்தவர் பத்திரிகையாளரானார்.

ஜீவா மல்லிகை ஆரம்பித்த போது. 'ஒன்று இரண்டா?' என்று கிண்டல் செய்தவர்களை எமக்குத் தெரியும்! அதைப் பற்றியெல்லாம் அவர் பரவாய் பண்ணியதில்லை.

'முதல்' வைத்துக்கொண்டு சஞ்சிகை அவர் ஆரம்பிக்கவில்லை; தமது வாசகர்களை நம்பியே ஆரம்பித்தார்!

இருபது வருடங்கள் கழிந்து விட்டன.

சஞ்சிகையொன்றைதொடர்ந்தும் இருபது வருடங்கள் நடாத்துவதென்பது இலேசுப்பட்ட விஷயமல்ல

ஜீவா செய்து காட்டிக் கொண்டிருக்கிறார்.

ஒன்று, இரண்டோடு நின்றுவிடுமென நையாட்டிசெய்தவர்கள் காத்திரமான 'மல்லிகை' இருபதாவது ஆண்டு மலரைப்பார்த்து, தமக்குள்ளே புழுங்கியிருப்பார்கள்!

அன்றும் கவலைப்படவில்லை; இன்றும் கவலைப்படவில்லை!

ஜீவாவுக்கு இவர்களைப்பற்றியெல்லாம் கவலையில்லை!

மல்லிகையை எப்படி எப்படியெல்லாம் வளர்த்து, தரமான ஒரு சஞ்சிகையாக வழங்கலாம் என்பதுதான் எப்பொழுதும் ஜீவாவின் நெஞ்சத்துச் சிந்தனை

இந்த இருபதாவது ஆண்டு மல்லிகை மலரின் விழாவைத் தனித்துவமான விழாவாகத் தனது அலுவலகத்திலேயே நடாத்தி, மனம்நிறைந்த வாழ்த்துக்களையும் பெற்றார் ஜீவா

'மல்லிகைப்பந்தலி'ல் நடந்த இவ்விழாவுக்கு வந்தவர்களையெல்லாம் சர்வதேச அந்தஸ்துப்பெற்ற 'கோக்' கொடுத்து வரவேற்றனர் ஜீவாவும், அவரது உதவியாளர் கா. சந்திரசேகரமும்!

எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் 'மல்லிகை' வாசகர்களும் நிறைந்திருக்க, தலைமை வகித்த வ. இராசையா மல்லிகை உதவியாளர் திரு. கா. சந்திரசேகரத்தை அழைத்து மாலை அணிவித்துக் கௌரவித்தார் தனிமனிதனாக நின்று இயங்கும் ஜீவாவுக்கு இன்னொரு தனிமனிதனாக இருந்து உதவும் இவர், நிச்சயம் கௌரவிக்கப்பட வேண்டியவர்!

''தமிழ்நாட்டில்ஜீவாவுக்குப் புத்தகம் போட்டுக்கொடுக்கிறோம்! ஏன் அவர் பேசாசும்மா இருப்பதற்கு எங்களையெல்லாம்ஏன் தாக்கிக்கொள்கிறார். அவருடையகாரியம் முடிந்தால், சும்மா இருக்கலாம் தானே என்பது அங்குள்ள சிலரின் கருத்து. அப்படியெல்லாம் சும்மா இருந்துவிடும் மனிதர் ஜீவாவல்ல, தனக்காக வாழ்பவரல்ல; தன்னைச் சேர்ந்த ஈழத்து தமிழ் எழுத்தாளர்களுக்காகவும் போர்க்குரல் எழுப்புபவர்!'' என்றுஜீவாவை உண்மையாகப் புரிந்துகொண்ட செம்பியன் செல்வனின் ஆரம்ப உரையில் செம்பியன் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

(15ம் பக்கம் பார்க்க

## பூபாலசிங்கம் வீட்டில் புகழ் மாரி

முன்னுளில் ராமேஸ்வரம் கோவில் பூசைக்கான பாலும் தயிரும் நெய்யும் ஈழத்தின் நெடுந்தீவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாம். அதனால் நெடுந்தீவுக்குப் பசுத்தீவு என்றும் மற்றொரு பெயர்.

ராமேஸ்வரம் பூசகர்கள் மணிபல்லவம் என்ற நயினதீவிலேயே வசித்துவந்தனர் அதனால் நயினதீவுக்குப் பிராமணத்தீவு என்று மற்றொரு பெயர்

நம்மில் பலருக்கும் இது தெரியாது. இதனைச் சொன்னவர் திரு க. சி. குலரத்தினம் அவர்கள்.

இடம்: பிரபல புத்தகசாலை அதிபர் அமரர் பூபாலசிங்கம் அவர்களின் இல்லம்.

சந்தர்ப்பம்: பூபாலசிங்கம் தம்பதியரின் மூதத புதல்வன் ஸ்ரீதர்சிங் - நாகேஸ்வரி திருமணத்தையடுத்து இடம் பெற்ற வரவேற்பு வைபவம்.

வைபவத்திற்கு யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமைதாங்கினார். செங்கை ஆழியான், டொமினிக் ஜீவா மற்றும் எழுத்தாளர்கள் வாழ்த்துரை வழங்குகையில் தந்தை பூபாலசிங்கத்தின் அடியை ஒற்றி மைந்தன் ஸ்ரீதர்சிங் ஆற்றிவரும் சேவையையே மேலாகக்குறிப்பிட்டுப் புகழ்ந்தனர்.

அநேகமாக யாழ்ப்பாணத்தின் அத்தனை எழுத்தாளர்களும் மற்றும் சகலதுறைப் பிரமுகர்களும் ஆண்களும் பெண்களுமாக ஸ்ரீதர்சிங் தம்பதிகளைக் கௌரவிப்பதற்காக அங்கு குழுமிய காட்சி கண்கொள்ளாதிருந்தது.

'ஈழநாடு உறவினர்கள்' சார்பில் அன்பன் 'சச்சி' வாழ்த்துமடல் வாசித்து வழங்கினார்.

தந்தை பூபாலசிங்கத்தின் கொள்கையைப் பின்பற்றி- தந்தைவழியே தனது வழி என்று - இலக்கியவாதிகளையும் பத்திரிகையாளர்களையும், வாசகர்களையும் அரவணைத்து வாழ்ந்து வரும் ஸ்ரீதர் சிங் தம்பதிகளும் அவர் தம்புத்தகப்பணியும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோம்.

‘பாரதி’

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15.
ரஜனிகாந்த
சௌகார்ஜானகி **நீ**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரவிச்சந்திரன்—லட்சுமி
**அக்கரைப்பச்சை**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
**ரயில் பயணங்களில்**
(ஈஸ்ட்மன் கலரி)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

**சாந்தி** (யாழ்நகர்)
28—30
10-30, 2-30, 4-45
மட்டும்
Sean Conery **CUBA**
(Action-Packed-Color)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி
கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
**ரத்தத்தின் ரத்தமே**
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
Every lovers should see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-
சுந்தரராஜன்
நடித்த
**ஞான ஒளி**
இந்தியாவிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட புதிய கொப்பி

**வின்ஸர்** [யாழ்]
தினசரி 10-30, 2-30, 4-30. 7-00
புரூஸ் லீ யின்
வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
**"BIG BOSS"**
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
காலஞ்சென்ற புரூஸ் லியைக் கடைசி முறையாகப் பார்க்கும் சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.
புத்தம் புதிய பிரதி)


இளவாலைப்பதியில் இன்று திருநாள்

# வேளாங்கண்ணி அன்னையை வேண்டுவோம்

**யே**சுவின் தாயாகிய மரியன்னை மகத்துவம் மிக்க அற்புதவரத்தி: மாசில்லாமல் உற்பவித்த பரலோக பூலோக இராக்கினி: அண்டிவந்தோரைக்கைவிடாதுஅரவணைத்துக் காக்கும் அடைக்கல நாயகி: கோடானு கோடி மக்களை நல்வழிப்படுத்தி மகிமை மங்காது விளங்கும் உலக மாதா; பரகதியை நாமடையப் பரமனைப் பெற்ற இரட்சணியத்தின் இராக்கினி என்று பலவாறெல்வாம் போற்றிப் புகழப்படும் அருள் நிறை மரிதான் இன்று இளவாலையில் விழா வெடுக்கும் அன்னை வேளாங்கண்ணி மாதாவாய்காட்சியளிக்கிருள்.

காலத்துக்குக்காலம் இந்தப் பரலோக அன்னை பூலோகத்தில் பல இடங்களில் தரிசனம் தந்துள்ளார். பிரான்ஸ்தேசத்தில் லூர்து கெரியில் போர்த்துக்கல்லில் -பாத்திமா பதியில் இத்தாலியில் - லொறத்மலையில் - அயர்லாந்தில் கைருத் தலத்தில் வந்திறங்கி பக்தர்களுக்குக் கருணை மழை பொழிந்து நின்ற பல வரலாறுகள் கண்டுள்ளோம். 16ம் நூற்றுண்டில் நம் பரத கண்டத்திலும் காட்சியளிக்கப் பாக்கியம் பெற்றுள்ளோம். அடுத்தடுத்து மூன்று முறையாக வந்து இந்திய நாட்டை ஆசிர்வதித்துள்ள கருணையை நாம் போற்றுதிருக்கலாமோ.

அப்பரலோக அன்னை 'நடுத்திட்டு' என்னும் இடத்தில் அத்திமரத்தண்டை மோர் விற்றுக்கொண்டிருந்த இடையர்குல இந்து நொண்டியான சிறுவனை நடக்கச் செய்து அவனிடம் மோர்வாங்கித்தன் குழந்தைக்குப்பருக்கிய பின் ''மக்களுக்கு அருள் பாலிக்க விரும்புகிறேம். இவ்விடத்தில் ஒரு ஆலயம் கட்டும்படி நாகபட்டினத்துக் கத்தோலிக்க பிரமுகருக்கு அறிவி'' என்று கேட்டுக் கொண்டார். மூன்றும் முறையாகத் தாம் பிறந்த நன்நாளாகிய புரட்டாதித் திங்கள் 8ம் நாளில் ஒரு போர்த்துக்கேய மாலுமியின் கப்பலை, புயலால் அலைக்கழிக்கப்பட்டு அமிழ்ந்து போகும் ஆபத்திலிருந்து காப்பாற்றி வேளாங்கண்ணி கடற்றுறையில் சேர்த்து அபயம் அளிக்கும் அன்னையாக வெளிப்படுத்தினர்.

மும்முறையும் அருள்பாலித்த பரலோக அன்னையை இந்திய பக்தர்கள் 'வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா' என்றே புகழ்ந்துபோற்றி வருகிருர்கள். விழாவெடுக்கிருர்கள.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையிலுள்ள இளவாலையம்பதியில் மயிலங்கூடலில் 1980ம் ஆண்டிலிருந்து புனிதவேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னைக்கு நவமான ஆலயம் அமைக்கப்பட்டு வருடாந்தம் மஹோற்சவவிழா எடுக்கப்பட்டுவருகிறது. இவ்வாலயம் 1952ல் அருள்திரு எஸ். ஜி. ஹில்லறி அடிகளாரிடம் பத்தாவத்தை மயிலங்கூடல் மக்களால் உபகரிக்கப்பட்ட எழுபது பரப்புக் காணியில் எழுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சங். சகோதரர் டேவிற், பென்சமீன் அவர்களின் அயரா உழைப்பினுல் தற்போதைய ஆலயம் சட்டிமுடிக்கப்பட்டதென்பதும் இதன் பரிபாலிப்பை சஞ்சூசையப்பர் சபைத் துறவற சகோதரர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதும் போற்றப்படத்தக்க தொன்றுகும். வழமைபோல் வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னை பிறந்ததினமாகிய புரட்டாதித் திங்கள் 8ம் நாளை அடுத்து மேற்படி புதிய தலத்தில் 30ம் நாள் ஞாயிறு இன்று பக்தர்கள் பெருவிழா எடுத்து மாதாவை மகிமைப்படுத்துகிருர்கள். பக்தர்களும் வருடத்துக்கு வருடம் பெருஅளவாக வருவதும், அன்னையின் அருளை அபரிமிதமாகப் பெற்றுச் செல்வதும், வரலாறு காணுத ஒரு யாத்திரைத்தலமாக மாறும் என்பதை வலியுறுத்துகின்றன.

—வித்துவான்
அ. சந்தியாப்பிள்ளை

## இந்தியாவை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பயனைபெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது பனையோலையை இங்கிருந்து ஏற்றுமதி செய்வதே எனது முகிய நோக்சமாகும்

### இலங்கையில் பனம்பழ உற்பத்தி

பனம்பழத்தை மூலப்பொருளாகக்கொண்டு இந்தியாவில் உற்பத்திகள் எதுவும் செய்யப்படுவதில்லை. பனம் பழத்திலிருந்து இலங்கைப் பனைஅபிவிருத்திச் சபையினுல் உற்பத்தி செய்யப்பட்ட பனப்பழஜாம், கோடியல், பனம்பானம் போன்றவற்றை எனதுவாழ்க்கையில் முதற்தடவையாக இங்குதான் கண்டேன். பனம் பழத்திலிருந்து இவ்வளவு உணவுப்பண்டங்களைச் செய்ய லாம் என்பதை அறிந்து நான் பெரும் வியப்படைந்தேன்.

பனம்பழ உற்பத்திகள் சுவையுள்ளனவாயும், தரமானவையாகவும் உள்ளன பனை அபிவிருத்தித் துறையில் பனம் பழத்திலான உற்பத்திகளில் இந்தியாவைவிட இலங்கை முன்னேறியுள்ளது பெருமைக்குரியது வெளிநாட்டிலிருந்து வரும் கொக்கோகோலா, பான்ரா ஆகியனவற்றிற்கு பதிலாக இந்தியாவில் பனஞ்சீனியை மூலமாகக்கொண்ட 'பாம் கோலா', 'பம்ரா' ஆகிய குளிர்பானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன இவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் குளிர்பானங்களைவிடத் தேகாரோக்கியத்திற்குச் சிறந்தனவாகும்''

## ஜீவாவின்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

''முல்லைத்தீவில் நடந்த மல்லிகை விழாவில் பேசினேன் அடுத்தநாள் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோருக்கு இடமாற்றம் வந்தது இன்று ஆகத பல்லிகை விழாவில் பேசுகிறேன்! நாளை எங்கு மாற்றமோ?' என்ற நகைச்சுவையுடன் பேச்சை ஆரம்பித்தார் பிரபல கவிஞரும், யாழ் மேலதிக கல்விப்பணிப்பாளருமான இ முருகையன அரைநேரம் லீவுபோட்டுவிட்டு விழாவுக்கு வந்த கவிஞர் தன் மனிதனுக்கு சுவாசிப்பது எப்படியோ, அப்படியே பண்பாட்டு இலக்கியமும் அவசியம் மனது இடையூறுகளுக்கு மத்தியிலும் நமது இலக்கியங்களை நாம் தொடர்ந்து வளர்க்க வேண்டும்! என்ருர்

[illegible]

ளாளுர்கள்' என்று குறிப்பிட்டார் ஆழியான்.

''வளர்ந்த எழுத்தாளர்களுக்கு இடம் காடுப்பதுபோல். வளரவிரும்பும் எழுத்தாளர்களை ஊக்கம்கொடுத்து விடுவது ஒரு தரமான சஞ்சிகையின் கடமை' என்று திரு சபத்மநாதன் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கதே! புதிய எழுத்தாளர்களை வளர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார.

இவ்வைபவத்தின்போது ஈழத்து இலக்கியத்துறை வளர்ச்சியில் மறக்கமுடியாத அணிகளான ரசிகமணி கனக செந்திநாதன், கைலாசபதி ஆகியோரது பெயர்களை ஒரு சந்தர்ப்பத்தில் திரு ஏ. ரி. பொன்னுத்துரை பகிதககலப்புடன் உச்சரித்தபோது அந்த உயர்ந்தவர்களின் நினைவு உயர்பெற்றது.

ஒரு முறை வாசித்துவிட்டு எறிந்துவிடும் சஞ்சிகைகளை [illegible]

[illegible]

ஈ. கே. ஆர். — கணேஷ்


# HONDA

## புதுமொடல்கள்

C-70 — 15,500/-
C-90 — 16,500/-
லக்கேஜ் கரியர்— 900/-

## கன்ராபியா லிமிட்

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 24201

# விற்பனைக்கு

## வீடும் நிலமும்

1. மூளாய், சுளிபுரம்
மின்சார வசதிகளுடன் இரண்டு அறை வீடு மூன்று நிலப்பரப்பு நிலத்தில் கிணறுடன் விற்பனைக்கு உண்டு.

2. நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி
மின்சார வசதிகளுடன் மூன்று அறை, விருந்தைகள் அடங்கிய வீடு, வேருன குசினி, கிணறு, மற்றும் தோட்டநிலத்துடன் பதிறு நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.

## நிலம்

1. மூளாய், சுழிபுரம்
காரைநகர் - யாழ்ப்பாணம் (782/786) பஸ் ரூேட்டில் 'வண்ணுத்தியோடை' என்னும் நிலப்பரப்பு முப்பத்திநாலு விற்பனைக்கு உண்டு. தொழிற்சாலை அமைக்க உகந்த இடம்.

2. மூளாய், சுழிபுரம்
''உப்புவயல்'' என்ற நெற்காணி பதினெட்டு நெற்பரப்பு விற்பனைக்கு உண்டு.

3. பொன்னுலை, சுழிபுரம்
பொன்னுலை வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு அரை மையில் ''விலாப்புலம்'' என்னும் இருபது நிலப் பரப்புப் பனந் தாட்டம் கிணறுடன் விற்பனைக்கு உண்டு. நிலம் சிறிதாக பங்கிட்டு வீடு கட்டும் நிலமாக விற்கப்படும்.

4. கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை
கீரிமலை—கருகம்பனை (795) பஸ் ரூேட்டில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் ''திருமாலையுடை'' என்னும் நிலப்பரப்பு பன்னிரண்டு, கிணறுடன் விற்பனைக்குண்டு. தோட்டம்செய்ய/வீடு கட்ட/தொழிற்சாலை அமைக்க உகந்த இடம்.

5. நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி
பனந்தோட்டம் நிலப்பரப்பு நாற்பத்தைந்து கிணறுடன் விற்பனைக்கு உண்டு. தோட்டம்செய்ய/வீடுகட்ட/தொழிற்சாலை அமைக்க உகந்த இடம்

மேற்கூறிய ஆதனங்களை வாங்க விரும்புவோர் கீழ்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும்.

RTR HOLDINGS (Private) Ltd.
DEALERS IN REAL ESTATE
NEXT TO MOOLAI SUB POST OFFICE
Moolai, Chulipuram.
Tel: Vaddu exch 231.
(1971)

யாழ். இலக்கிய வட்டத்தின்

# இலங்கை இலக்கிய பேரவை அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையென்ற பெயரில் இலக்கிய செயற்திட்ட அமைப்பொன்றினை அமைப்பதென யாழ். இலக்கிய வட்டம் தீர்மானித்துள்ளது.

இலக்கிய வட்டத் தலைவர் திரு. சு. சபாரத்தினம் (சசிபாரதி) தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் 1983ம் ஆண்டுவரை நூலுருவில் வெளியான ஆராய்ச்சிக் கட்டுரை, நாவல், சிறுகதை, காவியம், கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம் ஆகியவற்றில் மிகச் சிறந்த நூல்களைத் தெரிவுசெய்து ஒவ்வொரு துறைக்கும் ஆயிரம் ரூபா பரிசும சான்றிதழும் வழங்குவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய விபரமான விபரத்திரட்டு இல்லாத குறையைத் தீர்க்கும் வகையில் 'தமிழ் எழுத்தாளர் விபர வங்கி' ஒன்றை அமைக்கவும் யாழ். இலக்கிய வட்டம் தீர்மானித்துள்ளது.

இதனைவிட பிரதி மாதமும் பௌர்ணமி தினத்தன்று இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதெனவும் ஆரம்ப நிகழ்ச்சியாக அக்டோபர் 9-ம் திகதி கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியின் 'பாப்பாபாப்பா' நூலை வெளியிட்டு வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் எழுத்தாளர் விபர வங்கி'யில் தமது விபரங்களை பதிவு செய்ய விரும்பும் எழுத்தாளர்கள் 'யாழ்வாணன்', யாழ். மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர் கொள்ளலாம்.

# "முகமூடி அணிந்த வாலிபர் கொள்ளையடித்து சென்றார்"

## பழுகாமம் இலங்கை வங்கி கொள்ளை வழக்கில் சாட்சியம்

(கொழும்பு)

"முகமூடி அணிந்த வாலிபர் ஒருவர் துப்பாக்கி முனையில் என்னைப் பயமுறுத்தி இரும்புப் பெட்டியைத் திறக்கச் செய்து ரூபா 10,000 பணத்தை கொள்ளையடித்துச் சென்றார்."

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டி. ஜி. ஜயலத் முன்னிலையில் நடைபெற்ற பழுகாமம் இலங்கை வங்கிக்கிளை கொள்ளைவழக்கில்சாட்சியமளித்த வங்கியின் முகாமையாளர் கே சிவகணேஷ் தெரிவித்தார்.

1977ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ம் திகதி களுவாஞ்சிக்குடி பக்கீர் தம்பி சீனி முகமது என்பவரின் காரை கொள்ளையடித்து பழுகாமம் இலங்கை வங்கிக் கிளையில் 13,777ரூபா85சதம்கொள்ளையடித்ததாக அருளானந்தம் என அழைக்கப்படும் இராசையா கிருஷ்ணபிள்ளை, யோகா என அழைக்கப்படும் கனகரட்ணம் யோகரட்ணம் ஆகிய இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சம்பவதினம் காலை 9மணியளவில் வங்கி வாசலில் ஒரு வாகனம் வந்து நின்றது. அதிலிருந்து இருவர் ஓடிவந்தனர். ஒருவர் கைத்துப்பாக்கியை எடுத்து எனது மார்பில் வைத்துப் பயமுறுத்ினர். அவர் தமிழில் இரும்புப் பெட்டியைத் திறக்குமாறு என்னைப் பணித்தார்" என்றார்.

# கிளிநொச்சியில் கொலையுண்டவர் வவுனியா வாசி

(வவுனியா)

கிளிநொச்சியில் கடந்த 23ந் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.

கதிரேசு வீதியைச்சேந்த குமாரசாமி ஜெயகுணகேயன் என்ற இளைஞனே கிளிநொச்சியில் வைத்து தீவிரவாத இளைஞர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டவராவர் என்பது தெரியவந்தது.

இவரது சடலம் வவுனியா கொண்டுவரப்பட்டு இங்கேயே தகனம் செய்யப்பட்டது.

மேற்படி அங்கு நடைபெற்ற 5 கொலைகள் தொடர்பாக பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்ள வவுனியா உதவிபொலிஸ் அதிபர் திரு ஏ. ஜெயராஜன் கிளிநொச்சி சென்று புலன் விசாரணையினை நடத்தியுள்ளார்.

## பால் கமிஷன் அறிக்கை வழக்கு

# கருணாநிதி இல்லாமலே இனி விசாரணை நடக்கும்!

[சென்னை]

நீதிபதி பால் கமிஷன் அறிக்கை வெளியானது சம்பந்தமான வழக்கில், திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு. கருணாநிதி இல்லாமலே வழக்கை நடத்தப் போவதாக சென்னை தலைமை நீதிபதி திரு ஆர். மாணிக்கம் தெரிவித்துள்ளார்,

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது திரு. கருணாநிதி நீதிமன்றத்திற்கு வரவில்லை. இவர் சென்னை நகரில் இல்லை உன்று அரசுதரப்பு வழக்கறிஞர் திருமதி பத்மினி கேசதுரை சொன்னார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் இவ்வழக்குத் தொடர்பாக கருணாநிதி கைதுசெய்யப்பட்டுக் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார்.

கருணாநிதி இவ்வழக்கில் ஒரு எதிரியாவார்.

ஆலை ஊழியர் ஒருவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான பால் கமிஷன் அறிக்கையை அரசு வெளியிடுவதற்கு முன்னரே வெளியானதைத் தொடர்ந்து கருணாநிதி உட்பட நான்குபேர் மீது வழக்குத்தொடரப்பட்டிருந்தது.

கருணாநிதி சார்பில் வழக்கறிஞர் ஒருவரை நியமித்து, அவர் இல்லாமலே வழக்கை விசாரணை செய்யலாம் என்று அரசதரப்பு வழக்கறிஞர் தெரிவித்ததை நீதிபதி ஏற்றுக்கொண்டு, வழக்கறிஞர் பெயரை அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 27ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

## இன்று

[சித்தன்கேணி]

சுகாதாரக் கருத்தரங்கு இன்று சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் சுகாதாரஅபிவிருத்திச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற இருக்கும் இச்சுகாதாரக் கருத்தரங்கிற்கு வலிமேற்கு உதவிஅரசாங்கஅதிபர் திரு. து வைத்தியலிங்கம் தலைமைவகிப்பார்.

★

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் ஆய்வரங்கு இன்று மாலை வழமைபோல் நல்லூர் திருஞானகம்பந்தர் ஆதினத்தில் நடைபெறும். இன்றைய ஆய்வரங்கில் கைரேகைபற்றி புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். [கெ]

## அபகரிக்கப்பட்ட வாகனங்கள்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி காணி ஆணையாளர் திணைக்களத்தில் வைத்துத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை இனம் தெரியாத இளைஞர்கள் சிலர் அபகரித்துச் சென்றுள்ளதாக தெரியவந்தது.

இதேவேளை, மக்கள்வங்கி இலங்கைவங்கிக்குச் சமீபமாக அநாதரவாக நின்ற இரத்தக் கறை படிந்திருந்த வாகனம் கிளிநொச்சி பால்சபைக்குச் சொந்தமானதாம்,

கிளிநொச்சி பால் நிலையத்தில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட தனியார் மினிவான் பால் சபைக்குச் சமீபமாக இருதினங்கள் கழித்து மீட்கப்பட்டதாகத் தெரியவந்தது.

உரும்பராயில்

# இரும்புப் பெட்டி தகர்க்கப்பட்டிருந்தது!

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்திலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட இரும்புப்பெட்டி குண்டுவைத்து தகர்க்கப்பட்டதால் பாவிக்கமுடியாத நிலையிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுட்டுள்ளது.

கொள்ளை அடிக்கப்பட்ட இரும்புப்பெட்ட நேற்றுக்காலை உரும்பிராய்க் கண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி துப்பாக்கி முனையில் இரும்புப்பெட்டி கொள்ளை அடித்துச்சென்றதும் அதற்குள் 407 ரூபா மட்டும் இருந்ததும் தெரிந்ததே. (மா)

யாழ். செயலக

# தேர்தல் அலுவலகம் திறந்தவுடன் தெரிய வரும்!

[யாழ்ப்பாணம்]

யாழ் செயலகத்திலுள்ள தேர்தல் காரியாலயத்தில், நேற்றுமுன்தினமிரவு கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

திங்கட்கிழமை தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்ட பின்னரே கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களின் விபரம் தெரியவரும் என்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (மா)

## திருமலையில் பலத்த சோதனை

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள பிரதான சந்திகளில் ஆயுதப் படையினர் நேற்று நின்று வாகனங்களை பலத்த சோதனையிட்டனர்.

கஞ்சிமடம், உப்புவெளி, திருமலை, காந்தளவா, உவர்மலைப் பகுதி ஆகிய சந்திகளில் வைத்தே வாகனங்கள்சோதனையிடப்பட்டன. (மா)

# 7 பேர் தமிழர்

மாவிட்டபுரம்)

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 94 பேரில் ஏழு பேர் தமிழர்கள்.

பொலிஸ் சேவையில் உள்ள உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்கு உள்ள வெற்றிடங்களுக்கு போட்டிப்பரீட்சை கடந்தமாதம் நடாத்தப்பட்டது.

மேற்படிபரீட்சையில் தோற்றியவர்களில் 94 பேர் தெரிவு செய்யப்பட்டு இம்மாதம்முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி 94 பேரில் 7 பேர் மட்டும் தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தி வேலைகள் நிறுத்தம்:

# ஒப்பந்த வேலைக்காரர் எதிர்நோக்கும் சிக்கல்!

(கோப்பாய்)

வடபகுதி அபிவிருத்தி நிதி வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படுமென அரசாங்கம் விடுத்த அறிக்கையின் காரணமாக ஏற்கனவே செய்து முடித்த வேலைத் திட்டங்களின் பணக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியாத இக்கட்டான நிலை ஒப்பந்த வேலைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

அரசாங்கம் வடபகுதி அபிவிருத்தி நிதியை மாற்றி பாதுகாப்பு செலவினங்களுக்குப் பயன்படுத்துவதென அண்மையில் அறிவித்திருந்தது.

இந்தஅறிவிப்பைக் காரணங்காட்டி செய்துமுடித்தவேலைத் திட்டங்களின் கொடுப்பனவுகளை வழங்குதற்கு சில அமைப்புக்களின் பொறுப்பான அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஒப்பந்தவேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்த சன சமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும், தனிப்பட்ட ஒப்பந்தவேலைக்காரர்களும் எதிர்பாராத சிக்கலுக்குஉள்ளாகித் தாம் செலவு செய்த பணம் கிடைக்குமோ? என்ற அச்சத்துடன் அலைகின்றனராம்.

இந்தவிடயத்தில் 'சில அமைப்புக்களின் அதிகாரிகள் தமக்கு ஏற்புடையவிதத்தில் அரசாங்கத்தின் தீர்மானத்தை கரரணம்காட்டி தட்டிக்கழித்து காரியத்தை நிறைவேற்றப்பார்க்கின்றுகளோ தெரியவில்லை' என அலுத்துக்கொண்டார் ஒப்பந்தக்காரர் ஒருவர்.

## யாருடையது?

யாழ் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த திரு. பிரேமச்சந்திரன் பாலச்சந்திரன் என்பவரின் அடையாள அட்டையையும், சிறுதொகைப்பணத்தினையும் திரு. என். மகேந்திரராசாவும், மயிலிட்டி பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த திரு. சரவணமுத்து தங்கராசாவின் அடையாளஅட்டையை திரு. ஏ. அருள்தாஸும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## நாமகள் விழா

(சித்தன்கேணி)

கொக்குவில் திருவள்ளுவர் இளம் விவசாயக் கழகத்தினர் நாமகள் வித்தியாசாலைக்கு அருகாமையில் வாணி விழாவை திங்கட்கிழமை பிற்பகல் நடத்தவுள்ளனர்.

## புகையிலை கொள்ளை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் கடை உடைத்து புகையிலை களவாடியுள்ளார்கள்.

காங்கேசன்துறை பிரதான வீதியிலுள்ள கடையொன்றில் இரவு நேரத்தில் கடையுடைத்து மேற்படி கொள்ளை இடம்பெற்றுள்ளதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான புகையிலை, சிகரெட், சோப்பு வகைகள் களவாடப்பட்டுள்ளதாகத்தெரியவருகின்றது.

இதுகுறித்து காங்கேசன் துறைப் பொலிசார் விசாரணை செய்கிறார்கள்.

## மாலைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அப்துல் கையூம் அவர்களுடன் அவரது பாரியார் ஜனாபா நஸ்ரீனா கையூமும், மற்றும் எட்டு உறுப்பினர்களும் இலங்கைவந்துள்ளனர்.

நேற்றுக் காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி தம்பதிக்கும் குழுவினருக்கும் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

## சர்வகட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி ஜனாதிபதி அழைப்பு விடுத்தபோதிலும், மத்திய கமிட்டி கூடிஆராய்ந்துமுடிவு எடுக்க நேரம்போதாதெனத் தெரிவித்து, மகாநாட்டில் கலந்து கொள்ளமுடியாத நிலையை ஜனாதிபதிக்கு விளக்கியிருப்பதாகத் தெரியவருகிறது,

## இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளார்.

இலங்கைக் கடற்படை வீரர்கள் நூறு பேருக்கும், இராணுவத்தினர் ஆறுபேருக்கும், விமானப் படை வீரர்கள் முப்பது பேருக்கும் மேலும் இந்தியாவின் வெவ்வேறு முகாம்களில் பயிற்சியளிக்கப்படவுள்ளதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார். (இ)